
# சக்தி

மாத வெளியீடு

5564



சுபானு ஹூ

தை மீ

-/8

**கதைகள்**

சர்மாவின் புதிர்
மலடி
சமர்ப்பணம்
குழந்தை வரம்
பேராசைக்காரி

✲

**வரலாறுகள்**

லெனின்
மங்கம்மாள் -
மைந்தன்

✲

**கட்டுரைகள்**


புத்தகத்தில் நான்
சந்தனம்
காதலும் காமமும்
சர்வாதிகாரம்
பிள்ளை வளர்ப்பு
மௌன இன்பம்
புது உலகத்துக்கு-
வழி
என்று வந்தாய்?

✲

**பாடல்கள்**

குருவின் உபதேசம்
புத்திசாலி

222452


சங்கு மார்க்கு
TRADE MARK
சங்கு
வெகு நாள்கள்
உழைக்கக்கூடிய
நேர்த்தியான
நவீன கைத்தறி லுங்கி
சட்டைத்துணிகளுக்கும்
சங்கு மார்க்கு
முகம்மது அபூபக்கர் & கம்பெனி
நூல் & கைநெசவு கைலி வியாபாரிகள்
95 தம்பு செட்டி தெ
G.T. மதராஸ்
65/11-12, லோயர் சிட்பூர் ரோடு, கல்கத்தா—84, கிழக்கு வெளி வீதி, மது

"எச்.எம்.வி."
ரிகார்டுகளில்
ஜெமினி
"மங்கம்மா சபதம்"
பாட்டுகள்
ஸ்ரீமதி வஸுந்தரா



"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

SAMUEL

20 JUN 1944
MADRAS

N. 18221

ஐயையய்ய சொல்ல வெட்கமாகுதே
மம்மம்ம மதி

N. 18220

சிறிதும் கவலைப்படாதே
பெண் புத்தியாலே

நீண்ட காலம் உபயோகிக்கக் கூடிய "எச்.எம்.வி." ஹைபிடெலிடி ஊசிகள்

ஒரு ஊசியிலும் பல ரிகார்டுகளை பாடிவைக்கலாம்
10 ஊசிகள் பாக்கெட் 1க்கு ரு. 2/4

# அட்லாண்டிக் - சாஸனம் -

சர்ச்சிலும் ரூஸ்வெல்டும்
- வெளியிட்ட யுத்த -
— லட்சியங்கள் —

○

இந்த யுத்தம் தீர்ந்ததும் நிரந்தரமான சமாதானத்தை உலகத்தில் நிலை நாட்ட என்ன வழி? அதை விளக்கும் யுத்த லட்சியங்கள் அட்லாண்டிக் சாஸனத்தில் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அந்தச் சாஸனத்தால் உலக சமாதானம் நிரந்தரமாக ஏற்படுமா என்பதை இந்த நூலில் ஆராய்ந்திருக்கிறார் தி. ஜ. ர.

இது மின்னொளியின்
இரண்டாவது பிரசுரம்

○

விபரங்களுக்கு :

**சக்தி காரியாலயம்**

சென்னை :: மதுரை

# — சுதேசி — மாளிகை

சுமார் **15** வருடங்களுக்கு முன் ஒரு சின்னஞ் சிறிய கடை. இன்று தென்னிந்தியாவிலே பிரசித்தி பெற்ற பெரிய சுதேசி ஸ்தாபனம்

●

இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மாதந் தோறும் வந்து குவியும் பல்லாயிர ரூபாய் பெறுமான நானுவித ஜவுளி ரகங்கள்

●

பிற இடங்களில் கிடைக்காத நவீன மோஸ்தர்கள் சரஸமான ஒரே கருர் விலை

●

பட்டு பட்டாடைகள் சகல விதமான சுதேசி ஜவுளிகள் சில்லரை சாமான்கள்


●

## ஜெனரல் சுதேசிஸ்

(லிமிடட்)

எஸ்பிளநேட் :: வேப்பேரி

சென்னை




எந்த மணி பிரகாரமும்...

# ஸாரிடோன்



எல்லாவித வலிகளையும் பத்தே
நிமிஷத்தில் நிறுத்தக்கூடியது

மின்னொளிப் பிரசுரம்—1

## அரசியல் விமோசனம்

தற்கால இந்திய அரசியலில்
ஏற்பட்டிருக்கும் சிக்கலை
தீர்ப்பதற்கு வழிகாட்டி
— ராஜாஜி எழுதியது —

விலை அணா எட்டு

சக்தி காரியாலயம்

சென்னை : : மதுரை

புதிய கொலம்பியா
ரிகார்டுகளில்

# உத்தமி
டாக்கீ பாட்டுகள்

T.P. ராஜலக்ஷ்மி பாடிய GE. 6075 { பணமே / என்ன நினைத்தாய்

காளி.N.ரத்னம் & C.T.ராஜகாந்தம்
பாடிய
GE.6076 { போலீஸ்வேலைக்கும் / போட்டுக்கினே

ப்ரகதி
ஹரிச்சந்திரா
டாக்கீ பாட்டுகள்
M.V.சுப்பய்ய நாயுடு
& லக்ஷ்மி பாய் பாடிய
GE. 6127 { மானிடவாழ்க்கையே / சதாசிவா

புதிய
ஹிந்துஸ்தானி
ரிகார்டுகள்
ரோஷனாரா பீகம்
VE. 5045
ஹீராபாய்பரோடகார்
VE.5039

ஸரஸ்வதீ ஸ்டோர்ஸ், மதராஸ்.

சுபானு
மலர் 9

# சக்தி

தை
இதழ் 4

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்**
**இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

## ஸரோஜினிக்குத் தடை!

இந்திய அரசியல் பிரச்னையைப் பனிக்கட்டிக்குள் ஊறப் போட்டாயிற்று என்றார் இந்தியா மந்திரி அமெரி. இந்திய அரசியல் வாழ்வு இன்று உண்மையிலே மங்கிப் புதைந்துதான் கிடக்கிறது. ஆனால், இந்திய தேசீய உணர்ச்சி மட்டில் நீறு பூத்த நெருப்பாகவே கனிந்து கொண்டிருக்கிறது. காற்றடித்தால், அது கொழுந்து விட்டெரியத் தொடங்குவது நிச்சயம். காற்றும் சில சமயம் அடித்துவிடுகிறது. ஒரு நாள் அது சண்டமாருதமாகக் கூட வீசக்கூடும். காலம் எப்போதும் இப்படியேபோய்க் கொண்டிருக்காது. இதையறியாத சிலர், என்னென்னவோ உளறிக் கொண்டிருக்கிறார்கள். இதென்ன அறிவீனம்!



பிரிட்டிஷ் அரசாங்கம் இன்று இந்தியப் பிரச்னையைத் துளியேனும் லட்சியம் செய்வதாய்த் தெரியவில்லை. யுத்தத்திலேயே அது முழுக் கவனமும் செலுத்திக்கொண்டிருக்கிறது. யுத்த வெற்றிதான் அதற்கு முக்கியம். இந்திய அரசியல் முட்டுக்கட்டை தீர்வதல்ல. அது தீர்வது, தன் யுத்த முயற்சிக்குத் தேவையேயில்லை என்று நினைத்துத்தான், பிரிட்டன் செயல் புரிகிறது. அப்படியிருந்தும், ஏன் சிலர் உளறிக் கொண்டேயிருக்கிறார்களோ! அது தான் புரியவில்லை.

இரு கையும் கொட்டினாலல்லவா, சத்தம் கேட்கும்? பிரிட்டன் துளியும் நமது அரசியல் பிரச்னையைப் பற்றிக் கவலைப்படாத போது, வெறும் பேச்சின் மூலமும் தர்க்கத்தினாலும் பிரிட்டனைச் சமரசத்துக்கு வரச்செய்யலாம்என்பதுசிலர் எண்ணமாயிருக்கிறது. "நாமெல்லாரும்— எல்லாக் கட்சிகளுமே—ஒன்று கூடிப் பெரிய கூச்சலாய்ப் போட்டால், பிரிட்டன் பணிந்துதான் தீரும்" என்று சிலர் பறையடிக்கிறார்கள். ஒரே ஒருத்தன் செய்யும் செயலுக்குப் பணியாதவன், லட்சம் பேர் போடும்கூச்சலுக்குக் கூடப் பணிய மாட்டான்என்பது அவர்களுடைய

புத்திக்கு ஏனே விளங்கவில்லை. "எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுத்து, ஒன்று சேர்வோம்; கூச்சல் போடுவோம்" என்பதைத் தவிர, வேறு ஏதாவது திட்டம் இவர்களிட முண்டா?

"ஐயோ! நம்முடைய மாபெரும் தலைவர்கள் சிறையில் இருக்கிறார்களே! அவர்களை வெளியே கொண்டு வர வேண்டாமா?" என்று சிலர் ஓநாய் அழுகை அழுகிறார்கள். யார் இவர்கள்? சிறைப்பட்ட தலைவர்களின் லட்சியத்துக்கே உலை வைக்கப் பார்ப்பவர்களும், அவர்கள் உள்ளேயிருப்பதுதான் நல்ல தருணம் என்று தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள விரும்புபவர்களும், ருஷியாவுக்கு உதவி செய்வோம் என்ற பெயரோடு பிரிட்டனுக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்துகொள்பவர்களும், சரணகதியையே பஜனை செய்துகொண்டிருப்பவர்களும்தான் இப்படிச் செய்கிறார்கள். இவர்களின் உதட்டழுகையால், சிறைப்பட்ட தலைவர்கள் வெளிவருவார்களா? அப்படி வெளிவந்தால் தான் பயனுண்டா?

"அரசியலிலே ஜீவனே இல்லாமல் போய்விட்டதே; கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பதெப்படி? ஏதாவது செய்வோமே. ஒன்றுமே செய்யாதிருப்பதைவிட, ஏதாவது செய்வது மேல் அல்லவா?" என்று வேறு, சிலர் கட்சி பேசுகிறார்கள். ஏதாவது செய்வோமே என்றால் என்ன? உருவான காரியம் செய்ய முடியாதவர்கள் சும்மா இருப்பதே மேல். நாட்டின் வருங்காலத்தையே நாசமாக்கக் கூடிய கேடான காரியங்களைச் செய்வதைவிட, சும்மா இருப்பதே நல்லது. கத்தியை வைத்திருப்பவனுக்குப் பொம்மை செய்யத் தெரியாததால், செடியின் கழுத்தையாவது அறுக்கிறேனே என்பானா? அதுவும் ஒரு நியாயமா?

"காந்தியின் மனது அப்படி; காங்கிரஸின் நோக்கம் இப்படி" என்றெல்லாம், சர்க்காரும் சரி, வேறு சிலரும் சரி, தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் உள்ளேயும் வெளியேயும் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். பதில் சொல்லவோ, ஒப்புக் கொள்ளவோ, மறுக்கவோ முடியாமல், சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்கும் தலைவர்களுக்குச் செய்யும் நீதி இதுதானா? இந்த முறை வெறுக்கத்தக்கதல்லவா?

கண்டவர்களெல்லாம் வழி காட்டி போல் அட்டகாசம் செய்து கொண்டிருந்த இந்த நிலைமையில், ஸரோஜினி தேவியின் சில வாசகங்கள் வெளி வந்தன. காங்கிரஸ் சார்பாக, இன்று பேசக்கூடியவர் அவர் ஒருவர்தான் வெளியிலே இருக்கிறார். ஏனெனில், காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களிலே வெளி வந்துள்ளவர் அவர் ஒருவரே. காங்கிரஸ் மீது சர்க்கார் சொல்லிய பழிகளையெல்லாம் ஆணித்தரமாய் அவர் மறுத்து விட்டார். ஜப்பானுக்கு ஆதரவளிக்கும் நோக்கம், காந்திஜிக்கோ காங்கிரஸுக்கோ கிடையவே கிடையாது என்றார். கிரிப்ஸ் திட்டத்தை மறுக்கும்படி காந்திஜியே தூண்டிவிட்டார் என்பதையும் அவர் கண்டிக்கிறார். இந்தியாவைச் சின்னபின்னம் செய்யச் சம்மதிக்கவே முடியாதென்று அவர் கூறுகிறார். காங்கிரஸ் அடிபணியும் என்று கனவு காண்போரும், அடிபணியவேண்டும் என்று உபதேசிப்போரும் வாயடைக்கும்படி, அவர் கர்ஜித்திருக்கிறார்.

இதையெல்லாம் கண்ட சர்க்கார், கிலி பிடித்து விட்டது. அவர் பேச்சுக்களைப் பிரசுரிக்கலாகாதென்று பத்திரிகைகளுக்கு வரம்பு விதிக்கிறது. பத்திரிகைக் காரர்களுக்கு ஒன்றும் சொல்லக் கூடாதென்று அவருக்கும் உத்தரவு போடுகிறது. ஏன் இப்படி? சமரச ஆவல் சர்க்காருக்குத் துளியாவது உண்டென்றால், அது இவ்விதமா நடக்கும்? அப்படி ஸரோஜினி என்னதான் சொல்லி விட்டார்? காந்திஜியின் உள்ளத்தை அவர் வெளியிட்டதா குற்றம்? "ஜப்பானை ஆதரிக்கவே கூடாது; ஜப்பானியரிடம் ஒத்துழையாமை செய்ய வேண்டும்" என்று உபதேசம் செய்யும் ஒரு காந்தியின் மணிவாசகத்தைவிட, ஆயிரம் யுத்தக் கமிட்டிகளாலும்

அதிகமான பயன் காண முடியாது. ஆனாலும், அந்த காந்தி உள்ளேதான் கிடக்க வேண்டும் என்று விரும்புகிறது சர்க்கார். அவர் மனதை வெளியிடும் ஸரோஜினி பேசவே கூடாதென்றும், அது கட்டுப் படுத்துகிறது. முட்டுக்கட்டை தீர்வதற்குத் தாங்கள் தடையாயில்லை என்கிறார்கள் அமெரி கோஷ்டியார். இந்தியக் கட்சிகள் ஒன்றுப்பட்டுத் தங்களிடம் வந்து நிற்காததுதான் குந்தகமா யிருக்கிறது என்றும் அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். "ஆமாம்; ஆமாம். அப்படித்தான் நாம் செய்ய வேண்டும்" என்று இங்கேயும் சிலர் குதிக்கிறார்கள். "காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலிருக்கிறார்களே; அவர்களோடு பேச, பிற கட்சியார்களுக்கு அனுமதி கொடுங்கள்" என்றால், சட்ட விரோதமான காரியம் செய்தவர்களுக்கு அந்த வசதி அளிக்க முடியாதென்கிறார்கள். ஆயினும், காங்கிரஸும் சேர்ந்து ஒற்றுமையானால்தான், பிரிட்டன் சித்தமிரங்குமாம்! அதெப்படிச் சாத்தியமாகும்? காங்கிரஸ் மனோநிலைமையை நன்கறிந்த ஒரே ஒரு தலைவர்—ஸ்ரீமதி ஸரோஜினி தேவி—இன்று வெளியி லிருக்கிறார். அவர் வெளியிடும் கருத்துக்கள் கூடச் சர்க்காருக்கு விஷமா யிருக்கின்றன; அவருடைய பேச்சுரிமை இன்று பறிக்கப் பட்டு விட்டது. இன்னும் காங்கிரஸை சமரசத்துக்கு வழி காண வேண்டுமென்று சொல்லுவது எப்படி அறிவுடைமையாகும்?

பிற கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஐக்கியமானாலும், பிரிட்டிஷ் சர்க்கார் மசியப் போவதில்லை. "காங்கிரஸையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றுதான் சொல்லும். காங்கிரஸோ 'கலகக்காரர்' கூட்டமாய், பிரிட்டனின் கண்களை உறுத்துகிறது. ஆகவே, காங்கிரஸ் மற்றவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவோ, சேர்ந்து கொள்ளவோ இடங்கொடுக்கப்படமாட்டாது. எனவே, இந்தியப் பிரச்னை, ஒரு நாளும் தீரவே தீராது; அதைத் தீர்க்கவும் முடியாது—இதுவே பிரிட்டனின் விசித்திரமான விபரீதமான போக்காகும்.

இவ் வாறிருக்க, தந்திரத்தினாலும், போலி ஒற்றுமைத் திட்டங்களாலும், வாத சாமர்த்தியத்தினாலும், சுயராஜ்யப் பழத்தைப் பறித்துக் கொண்டு வந்து விடலாம் என்று வீண் ஆரவாரம் செய்பவர்கள் பேசாதிருப்பதே நலம் அல்லவா?

## வந்தனம்

சக்தி **பொங்கல் மலரைப்** பலரும் பாராட்டுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்களுடைய மனப்பூர்வமான வந்தனம். வழக்கத்தைவிட அதிகமான பிரதிகளை ஏஜண்டுகளுக்கு அனுப்பியும், இன்னும் அதிகமான பிரதிகளைப் பலர் கேட்கிறார்கள்; சிலர் கோபமாயும் எழுதுகிறார்கள். அதிகமான பிரதிகள் அனுப்பச் சாத்தியமில்லாமல் இருப்பதற்கு, அவர்கள் அனைவரும் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம். 'பொங்கல் மலர்' தயாரித்ததில், எங்கள் முயற்சி சிறிது; கட்டுரையாளர்களும், சித்திரக்காரர்களும் செய்த உதவி பெரிது. பொங்கல் மலரின் சிறப்புக்கான பெருமை அவர்களையே சேர்ந்தது. அவர்களுக்கு எங்களது மனப்பூர்வமான நன்றி உரித்தாகும். முக்கியமாய், 'பொங்கல் மலர்' கலைச் சுவையோடு கூடிய அமைப்பைப் பெற்றதற்கு, பிரீமியர் அட்வர்டைஸிங் ஸெர்வீஸ் திரு வி. சத்ருக்னனின் உதவியைக் குறிப்பிட வேண்டும். 'ஆர்யா', 'சாகர்' முதலியவர்களின் சித்திரங்களும் மலரை அழகுபடுத்தியிருக்கின்றன. அனைவருக்கும் மீண்டும் எங்கள் வந்தனம்.

# காலச்சூழல்

**கைக்குத்தரிசி :** மில் அரிசியை விடக் கைக்குத்தரிசியே அதிக சத்துள்ளதென்று, ஆராய்ச்சி செய்த பலர் சொல்லுகிறார்கள். சாதாரண காலத்தில்தான் அதை நாம் கவனிக்க வில்லை. எங்கும் உணவு நெருக்கடி நேர்ந்துள்ள இந்தக் காலத்திலாவது அதை நாம் கவனித்தால், நன்மை யாகும். வார்தா மாடல் கைக்குத்தரிசி இயந்திரத்தைக் கொண்டு, நெல்லை அரைத்தால், 100 படி நெல்லுக்கு 5 படி அரிசி அதிகமாகவும் காணுகிறது. இந்த யந்திரத்தில் ஒரு பெண் ஒரு நாளைக்கு இரண்டரை மூட்டை நெல்லை அரைத்து விடலாம். ஏழை எளிய மக்களுக்கு இதனால் நல்ல கூலியும் கிடைக்கும். இத்தகைய கைக்குத்தரிசி நிலயம் ஒன்றை, புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ள ராயவரம் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் நிர்வாகிகள், பிப்ரவரி மீ 4-ஆம் தேதி திறக்கப் போவது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த முயற்சி, அந்தச் சமஸ்தானம் முழுதும் மட்டிலுமன்றி, நாடெங்குமே பரவ வேண்டும் என்பது நமது விருப்பமாகும்.

* *

**பாகிஸ்தான் பூதம் :** பிரிட்டிஷ்காரர்கள் அதி தீவிரமாக இப்போது பாகிஸ்தான் பிரசாரத்தில் இறங்கி யிருக்கிறார்கள். ஒரு புறத்தில் இந்தியா மந்திரி அமெரி, மாஜி சென்னை கவர்னர் எர்ஸ்கின் போன்றவர்கள், "ஐயோ! இந்திய ஒற்றுமையைக் குறைக்கவாவது!" என்று நீலிக் கண்ணீர் விடுகிறார்கள். மறு புறத்தில், புரொபஸர் கூப்லாண்டு போன்றவர்கள், பாகிஸ்தான் திட்டமெல்லாம் போட்டு, சர்ச்சையெல்லாம் செய்கிறார்கள். இப்போது, பாகிஸ்தானை விளக்கும் படம் ஒன்று, பிரிட்டனில் பிரமாதமாய் விற்பனை யாகிறதாம். ஜே. எப். ஹொராபின் என்ற பிரபல சித்திரக்காரர் எழுதிய இந்தப் படம் அடங்கிய ஓர் அட்லாஸை, பெங்குவின் கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்களாம். ஜனாப் ஜின்னா இதைக் கண்டு நன்றாய் ஆனந்தப்படட்டும். ஆனால், மலையாளத்தையும் இந்தப் பாகிஸ்தான் படத்தில் சேர்த்திருக்கிறார்களாமே; இதென்ன விபரீதம்? நாட்டை எப்படி யெல்லாம் கேலிக்கிடமாக்கி அலங்கோலப் படுத்தலாமோ அப்படி யெல்லாம் செய்ய, பிரிட்டனில் சூழ்ச்சி நடக்கிறதோ என்று தான் நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆனால், அதற்கெல்லாம் உடந்தையாக நிற்கும் ஜனாப் ஜின்னாவையும் அவருடைய லீக்கையும் நாம் என்னென்று சொல்லுவது? அவருடைய விபரீத புத்தி இன்னும் கூடவா மாறாதிருக்க வேண்டும்?

* *

**ஆர். எஸ். பண்டிட் மறைவு :** "நான் கைதியின் மகள்; கைதியின் சகோதரி; கைதியின் மனைவி-இதிலே நான் பெருமை கொள்ளுகிறேன். நானும் ஒரு கைதியாகலாம் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது" என்று 1930-ஆம் வருடம் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், ஒரு நண்பருக்கு எழுதினாளாம். நேரு குடும்பம் பூராவுமே தேச சேவையில் சகல தியாகமும் செய்ததாகும். அந்தக் குடும்பத்தின் மருமகனை ஆர். எஸ். பண்டிட்டும், அதே மாதிரி வந்து சேர்ந்ததுதான் ஆச்சர்யமாகும். அவரும் பலமுறை சிறைப்பட்டிருக்கிறார். 1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் கடைசியாக அவர் சிறை புகுந்தார். உயிருக்கு மன்றாடும் நிலைமையில் அவர் விடுதலை செய்யப்பட்டார். சில நாட்களில் உயிரும் துறந்து விட்டார். அவர் மனைவி விஜயலட்சுமிக்கும், மைத்துனர் ஜவஹர்லால் நேருவுக்கும், தேசத்துக்குமே இது பெருந் துயரம் தரும் துக்கமாகும். நேரு குடும்பத்தின் மகத்தான தியாகத்துக்கும் சோதனைக்கும், இது மற்றுமொரு சின்னமாகும். அந்தக் குடும்பத்துக்கு நமது மனங்கனிந்த அநுதாபம் உரியதாகும்.

# மௌன இன்பம்

கா. இராமநாதன் செட்டியார்

ஒரு நாள் இரவு என் நண்பர் ஒருவருடைய பங்களாவில் படுத்திருந்தேன். அந்த பங்களா, ஊரில் ஒரு மூலையில் இருந்தது. கட்டடம் பெரிது. கொஞ்ச தூரத்தில், வேலைக்காரர் குடிசைகள். பங்களாவுக்கும் குடிசைகளுக்கும் இடையில் ஒரு திண்ணை இருந்தது.

சுமார் இரண்டு அல்லது மூன்று மணிக்கு என் தூக்கம் கலைந்தது. பிறர் தூக்கத்தைக் கலைக்காமல் மெதுவாக எழுந்து வெளியில் சென்றேன். திண்ணையில் உட்கார்ந்தேன். என் முன் வீடுகளே இல்லை. வெட்ட வெளி. பங்களாவில் அனைவரும் தூங்குகிறார்கள். குடிசையில் யாவரும் களைத்துப் போய் உறங்குகிறார்கள். எங்கும் நடமாட்டம் இல்லை. மரங்களும் அசையவில்லை; செடிகளும் ஆடவில்லை. காற்றோட்டமும் இல்லை; புழுக்கமும் இல்லை. எங்கும் அமைதி. வானில் சந்திரனைக் காணோம். மேகமும் அசையவில்லை. இவைகளை ஒத்து, நானும் அசைவற்று அமர்ந்தேன். சத்தம் சிறிதுமில்லை. அண்டம் முழுதும், அசைவற்றுப் பேச்சற்று மூச்சற்றுக் கிடப்பது போலிருந்தது. அசைவற்ற அண்டத்தில் நானும் ஒரு பகுதியானேன். அந்த பெரியதொரு மோனக் கடலில் நானும் ஒரு துளியானேன். எங்கும் அமைதி, சாந்தி, ஆனந்தம். இதைவிட இன்பம் தருவதெது? இறைவன் இதைவிட உயர்வாக என்ன தரமுடியும்?

இப்பொழுது ஒரு பெரியவர் பாட்டு ஞாபகத்துக்கு வந்தது. பாட்டின் உண்மையும் ஓரளவு புலப்பட்டது:

> மோன குருவளித்த
> மோனமே ஆனந்தம்;
> ஞான அருளும் அது;
> நானும் அது; வானுதி
> நின்ற நிலையும் அது;
> நெஞ்சப் பிறப்பும் அது;
> என்று அறிந்தேன்;
> ஆனந்தமே.

மோன நிலையைவிட வேறெந்த நிலை ஆனந்தத்தைத் தரவல்லது? ஞானம் தரக்கூடிய உயர்ந்த நிலை அது. அந்நிலையை வானம் அடைந்தது; நட்சத்திரங்கள் அடைந்தன; மண்ணும் அடைந்தது. நானும் அவைகளுடன் ஒன்றாகி அந்நிலை அடைந்தேன். நெஞ்சம் அடைய வேண்டிய நிலையும் அது. இதனினும் வேறென்ன வேண்டும்? 'நானும் அது' என்றது எவ்வளவு அழகாக இருக்கிறது!

மௌனம் என்றால் பேசாமை என்று கருதுகிறோம். மௌனம்

---

'மௌனம் கலகம் நாஸ்தி' என்பது பெரியோர் வாக்கு. மௌனத்துக்கு அபாரமான சக்தியும் வல்லமையும் உண்டு. மௌனியைக் கண்டு உலகம் அஞ்சுகிறது; மரியாதை செலுத்துகிறது. உலக வாழ்க்கைக்கு மௌனம் முக்கியமானது. கண்டதை எல்லாம் பேசி நம் அறியாமையை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதைக் காட்டிலும், ஒன்றும் பேசாதிருப்பது நலம். அத்தகைய மௌனத்தின் பெருமையும் அதை அடையும் வழியும் இங்கே விரிவாகக் கூறப்படுகிறது.

அது மட்டுமல்ல. மௌனம் உரையற்ற நிலை; அசைவற்ற நிலை; உணர்வற்ற நிலை; மனம் அலையற்ற நீர் போல் நிற்கும் நிலை. இதனைச் ‘சும்மா இருக்கும் நிலை’ யென்றும் கூறுவர்.

மௌனம் மூன்று வித மென்பர். கரண அல்லது மன மௌனம்; பொறி அல்லது வாக்கு மௌனம்; காஷ்ட மௌனம் அல்லது காய மௌனம். வாய் பேசாதிருத்தலும், அத்துடன் கண் காது முதலிய இதர பொறிகள் அடங்கி நிற்றலும் ஒரு விதம். மனதும் புத்தி முதலிய இதர கரணங்களும் அடங்கி நிற்றல் ஒரு விதம். உடம்பு அசையாது நிற்றல் ஒரு விதம்.

இந்த மௌனத்தால் வரும் பலன் மிகவென்பர்.

“தண்ணார் கருணை மௌனத்தினால்
முத்தி சாதிக்கலாம்;
நண்ணுநது ஒன்றில்லை; எல்லா
நலமும் நமக்குள்ளே.”

மௌனமே பிறவாமைக்கும் இறவாமைக்கும் வழி.

மௌனத்தின் பெருமையை அளவிட முடியாது. ‘மோன மென்பது ஞான வரம்பு.’ ஞானத்துக்கு இரு கரைகள் இருக்கின்றன. ஒரு கரையின் முதல் படி, ஞானத்தில் ஆசையும் அதை அறிந்து கொள்ளவில்லையே என்ற எண்ணமும்; மற்றொரு கரையின் கடைசிப்படி மோன மென்னலாம். இதையே ஔவையார் அழகாக ‘ஞான வரம்பு’ என்றார்.

இந்த உண்மையைப் புலப்படுத்த, தக்ஷிணாமூர்த்தியும் உயர்ந்த உபதேசத்தைச் சொல்லாமற் சொல்லுகிறார். அவர் சொல்லித்தருவது ஓர் எழுத்து. அந்த எழுத்தும் ஊமை எழுத்து.

## சட்டமும் விவேகமும்

பால் ஷெங்க் என்பவர் ஒரு பிரபல அமெரிக்க வக்கீல். அவர் ஒரு வழக்கில் ஆஜரானார். எதிரி வக்கீல், ஒரு சாட்சியத்தைக் கோர்ட்டில் தாக்கல் செய்வதற்காகப் பிரமாதமான வாதமெல்லாம் செய்தார். சட்டப்படி அதை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று, பால் ஷெங்க் ஒரே பிடியாய் ஆட்சேபித்தார்.

எதிரி வக்கீலுக்கு இன்ன செய்வதென்று புரியவில்லை. கடைசியில் எரிச்சலோடு “ஒன்றும் வேண்டாம். இந்தச் சாட்சியத்தை ஒப்புக் கொள்ளுவது,விவேகத்துக்கு ஒத்ததியில்லையா?” என்று கேட்டார்.

பால் ஷெங்க் துள்ளி எழுந்து, “விவேகத்துக்கு ஒத்திருக்கலாம். ஆனால், நாம் இங்கே சட்டம் அல்லவா பேசிக் கொண்டிருக்கிறோம்?” என்றார்.

பால் ஷெங்கின் ஆட்சேபம்தான் வெற்றி பெற்றது!

திருமூலர் பல காலம் மௌன விரதம் பூண்டு, மரத்தடியில் நிஷ்டை செய்து திருமந்திரத்தை அருளினர். அவருடைய சிஷ்ய பரம்பரையும் மௌன விரதத்தை அனுசரித்தவர்கள். மூலன் மரபில் வந்த ஒரு மௌன சுவாமியாரே தாயுமானவரின் குரு. தாயுமானவர் பல இடங்களில் மௌனத்தை வற்புறுத்துகிறார். மௌனத்தை அனுசரியாதவர்களுக்காக வருந்துகிறார்.

அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவராகிய வாயிலா நாயனர், மௌன விரதம் பூண்டவர். ‘சொல் விளங்கு சீர்த்தொண்டை நாட்டில்’ திருமயிலாப்பூரில் வாயிலா நாயனர் தோன்றினர். அவர் மனக் கோயிலில் இறை

வனை இருத்தி, உணர்வு என்னும் ஒளி விளக்குச் சுடர் ஏற்றி, ஆனந்தமென்னும் திருமஞ்சனம் ஆட்டி, அன்பென்னும் அமுதத்தால் அர்ச்சனை செய்தார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் இறைவனைத் தொழுது, முடிவில் அவர் பாதம் அடைந்தார்.

பற்பல நாட்டு அறிஞர்களும் மௌனத்தை உயர்த்திக் கூறியிருக்கிறார்கள். சீன மகான் லோட்ஸ் கூறுகிறார்: "ஞானி சொல்லாமல் சொல்லுகிறார். முயற்சியின்றிச் செய்கிறார்."

உயர்ந்த உணர்ச்சிகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. பல நாள் பிரிந்த இரு நண்பர்கள் அல்லது காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால், வாய் பேச வருமோ? பைரன் என்ற ஆங்கில ஆசிரியர் சொல்லுகிறார்:

> *"வெகு நாள் பிரிந்தபின் நாம்
> இருவரும் சந்தித்தால், நான் எவ்
> வாறு உன்னை வரவேற்பேன்?
> மௌனத்தாலும் சிந்திய கண்ணீ
> ராலுமே."

உயர்ந்த நிலை மௌன நிலை. கார்லைல் என்ற ஆங்கிலப் பெரியார் சொல்லுகிறார்: "பேசாப் பெரியோனே, உலகம் முழுதும் எங்கே பார்த்தாலும் அறிவற்ற ஆரவாரம், அர்த்தமற்ற பேச்சு, பயனற்ற செய்கை நிறைந்திருக்கின்றன. இவைகளின் நடுவே, ஒருவன் மௌன ராஜ்யத்தைச் சிந்திக்க விரும்புகிறான். ஏ மௌனமே, மௌன அரசே, நீ நட்சத்திரங்களைவிட உயர்ந்தவன். மரணத்தைவிட ஆழ்ந்து நிற்கிறாய். நீயே பெரியவன். மற்ற யாவும் சிறியன."

'பேச்சு வெள்ளிக்கும், மௌனம் தங்கத்துக்கும் சமானம்' என்பது ஆங்கிலப் பழமொழி. நன்றாய்ப் பேசுதல் அருமை. அவ்வாறு பேசுபவர் ஆயிரத்திலொருவர். மௌனம் அருமையிலும் அருமை. அதை ஒழுங்காக அனுசரிப்பவர் கோடியிலொருவர் கூட அருமை. பேச்சு இன்பம் தரும்; மௌனம் அளவில்லாத ஆனந்தம் தரும். பேச்சு, பேசுவோரையும் கேட்போரையும் ஒன்றுபடுத்துகிறது. அறிந்தோர் பேச்சையே இங்கே கூறுகிறேன். ஆனால், மக்களைப் பிரிக்கும் பேச்சே இக்காலத்தில் மலிந்திருக்கிறது. மௌனம் நம்மை அண்டத்தில் கூட்டுகிறது. பல விஷயங்கள் பேச்சில் அடங்கும்; பேச்சைக் கடந்த பொருள் மௌனத்தில் அமையும். பேச்சு, பாஷைகளுக்கு உள்ளடங்கியது; மௌனம் எல்லாப் பாஷைகளையும் தாண்டியது. பேச்சு, காலவரம்புக்கு உட்பட்டது; மௌனம், காலவரம்பு கடந்தது. பேச்சைச் சுவைப்பது எளிது; மௌனத்தை அனுபவிப்பதற்குத் திறமை வேண்டும். மௌனம் ஞானிகளுக்கு உரிய மொழி. தங்கத்தின் மாற்றை, தகுதி உள்ளவர்களே அறிய முடியும். வாய்ப் பேச்சால் பலர் பெருமை அடைந்தனர்; செல்வாக்குப் பெற்றனர்; பொருள் அடைந்தனர்; புகழ் பெற்றனர். மௌனத்தால் அமைதி பெற்றனர்; ஆனந்தம் அடைந்தனர்; பிறர் வணங்கப் பெற்றனர்.

இவ் உலகப் பேச்சுக்கும் மௌனத்துக்கும் இடையில் நிற்பது கண்ணோட்டம். இதற்குப் பேச்சைக் காட்டிலும் சக்தி அதி

---

* If I should meet thee
After long years
How should I greet thee?—
With silence and tears.

கம். கண்ணோடு கண் கலக்கும் போது, பேச்சு என்ன செய்யும்? பேச்சுக்குக் கண் உதவி செய்யும். குருவின் முகத்தையும் கண்ணையும் கவனிக்க வேண்டும். அவருடைய உள்ளக்கிடையை, அவர் சொல்லாலறிவதுடன், அவருடைய முகச் சாடையாலும், கண்ணோட்டத்தாலும் தெளிவுபட அறியலாம். மௌனம் இந்த இரு நிலைக்கும் மேம்பட்டது. வார்த்தைக்கு அடங்காத பூரணப் பொருளைச் சொல்லாமல் சொல்லும் நிலையே மௌனம்.

ஆகையால், மௌனத்தைப் பயிலவேண்டியது அவசியம். முதலில் அனுவசியமான பேச்சைப் பேசுவதில்லை என்று வைத்துக் கொள்ளலாம். இதை, வள்ளுவர் 'பயனில சொல்லாமை' என்பார். மகாத்மா காந்தி 'பகுதி மௌனம்' (partial silence) என்பார். கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுவார். முக்கியமான விஷயங்களை மட்டும் பேசுவார்.

இதன் பின், வாய் மௌனம் ஆரம்பிக்கலாம். வாரத்துக்கு ஒரு தரமோ, தினம் ஒரு முறையோ, குறித்த காலத்தில் அனுசரிக்கலாம்.

ஆசனங்களுடன் மௌனத்தைக் கையாளலாம். உடல் அசைவற்றிருத்தல் முக்கியம்.

பின்னர், சிந்தையை விஷய நினைவுகளில் செல்லவிடாதிருக்கப் பழகவேண்டும்.

இறைவன் நமக்குத் தரும் பொருள்களில் உயர்ந்தது மௌனம் எனலாம். ஆகையால், தாயுமானவர் கூறுகிறார்:

"சூதொன்றும் இன்றி எனைச்
சும்மா இருக்க வைத்தாய்;
ஈதொன்றும் போதாதோ
இன்பம் பராபரமே."

நல்ல உணவு, தூய நினைவுகள், நல்லோர் இணக்கம், ஆசையறல் முதலியவைகள், இந்தப் பழக்கத்துக்கு மிக்க ஒத்தாசையாக இருக்கும்.

✲

## நல்ல நாவிதன்!

பெஞ்சமின் பிராங்க்ளின், அமெரிக்காவில் தோன்றிய ஒரு பிரபல விஞ்ஞானி. மின்சார யுகத்தின் தந்தை என்று அவரைக் கூறலாம். அவர் ஒரு சமயம் பிரான்ஸில் அமெரிக்க ஸ்தானீகராக இருந்தார்.

அவர் ஒரு முறை ராம்போலே என்ற பிரஞ்சு நகரத்துக்குச் சென்றிருந்தார். அங்கே க்ஷவரம் செய்துகொள்ள விரும்பி, ஒரு நாவிதனிடம் போனார். நாவிதன் அவரை வரவேற்று ஒரு நாற்காலியில் அமருமாறு கூறினான். நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு நாய் உட்கார்ந்திருந்தது. அது பிராங்கிளினை மிக்க ஆவலோடு உற்று நோக்கிக்கொண்டிருந்தது.

நாவிதனை நோக்கி, "இந்த நாய் ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறது?" என்று பிராங்கிளின் கேட்டார்.

"அதன் வழக்கம், எஜமான்! நான் க்ஷவரம் செய்யும்போது, கத்தி பட்டுக் காது கீது ஏதாவது அறுந்து கீழே விழுந்தால், இந்த நாய் அதைக் கௌவிக்கொள்ளும். அதற்காகத்தான் காத்திருக்கிறது" என்றான் நாவிதன்!

# கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய
வெண்மையாக்குவதில்
நிகரற்றது.

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் : டி. எஸ். ஆர். & கோ
கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி, மதராஸ்


## அன்பர்களுக்கு

சக்தி காரியாலய வெளியீடு
மின்னொளிப் பிரசுரம் —
இவைகளை விற்பதற்கு நாங்கள்
பூரண உரிமை பெற்றிருக்கிறோம்

சிலோனில் மேற்படி வெளியீடு
களுக்கு எங்களுக்கே எழுதித் தரு
வித்துக் கொள்ள வேண்டுகிறோம்

## அருணா டிரேடர்ஸ்

புத்தக வியாபாரம்

கண்டி : : சிலோன்

கரப்பான் வியாதி தீர

# எக்ஸ்-மா (X-MA)வை


உபயோகிக்கவும்

மற்றொரு சமீபகால நற்சாட்சி பத்திரம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

தங்கள் அரிய எக்ஸ்-மா ஆயின்ட்மெண்டால் குணமடைந்து, நான் இதை பம்பாயிலுள்ள ஒரு ஸ்திரீக்கு வெகுவாக சிபார்சு செய்கிறேன். பம்பாயில் உங்களுக்கு பிராஞ்சு இருந்தால், அவளுக்கு ஒரு புட்டி கொடுக்கும்படி செய்யவும். இல்லையேல் உங்களது மதராஸ் ஆபீஸிலிருந்து அவளுக்கு அனுப்பவும். உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்).....................................




கரப்பான் சொறி போன்ற சரும வியாதிகளுக்கு தக்க மருந்து ஸ்பென்ஸரின் எக்ஸ்-மாதான். இது கீழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றது. எல்லா நாடுகளிலும் அதை வாங்கியவர்கள் பரம திருப்தி அடைந்துளர். ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்த வண்ண மிருக்கின்றன. அதன் அபார விற்பனையே அதன் குணத்திற்குச் சான்று. இதற்குமுன் இதை 'ஸ்மித்ஸ்' அன்குவென்டம் டெடர்ஜென்ஸ்' (Smiths unguentum Detergens) என்றழைத்தார்கள். சரும வியாதிகளின் நிவாரணியான இதற்கிணை வேறெதுவுமில்லை. 'கரப்பான், வண்ணான்சொறி, எரிதிமா போன்ற சரும வியாதிகளுக்கு எரிச்சல் கொடாத மருந்து எக்ஸ்-மா ஒன்றுதான்.

## உபயோகிக்கும் விதம்

காலையிலும் மாலையிலும் சொறி கண்டவிடத்தில் நன்றாகத் தடவ வேண்டும். சொறிமீது காற்றுப் படாமலிருக்க மெல்லிய துணி போட்டு மூடுவது நலம்.

இந்த மருந்து தயாரிப்பவர்கள்

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

ஒன்றுதான்

கைக்கு அடக்கமான புட்டி

ரூ. 1-4-0

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள் கோரப்படுகின்றன:

## ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமி.,

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS.

# சர்வாதிகாரம்

வெ. சாமிநாத சர்மா

சர்வாதிகார ஆட்சியை 'டிக்டேட்டர்ஷிப்'' (Dictatorship) என்று சொல்கிறார்கள். சென்ற 1914-ஆம் வருஷம் தொடங்கிய ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு அதாவது வார்சேல் சமாதான ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்தச் சர்வாதிகார ஆட்சி முறைக்கு ஒரு பிரபலமும் சக்தியும் ஏற்பட்டிருக்கின்றன; ஆனால், அதே சமயத்தில் அதன்மீது ஒரு வெறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், இந்த ஆட்சிமுறை, யுத்த ஆரவாரத்தோடு, யுத்த முஸ்தீப்புகளோடு, கடைசியாக யுத்தத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதுதான்.

பரம்பரைப் பாத்தியத்தோடு கூடிய ஓர் அரசன், ஜனங்களுக்கு நன்மை செய்வதாகக் கருதிக் கொண்டு, ராஜ்யத்தின் சர்வ அதிகாரங்களையும் தன் சுவாதீனப்படுத்திக் கொண்டு ஆட்சி புரிவானாகில், அவனைச் சர்வாதிகாரி யென்று சொல்கிறோம்; அல்லது கொடுங்கோலன் என்று அழைக்கிறோம். அப்படியானால் சர்வாதிகாரி யார்?

ஹிட்லர், முசோலினி என்ற பெயர்களைக் கேட்டதும், சர்வாதிகார ஆட்சிமுறை நம் நினைவுக்கு வருகிறது. இன்று நடந்துவரும் மகாயுத்தத்துக்கு அவ்விருவருமே மூல கர்த்தர்கள். ஆகையால், சர்வாதிகாரத்தின் மேல், நமக்கு ஒருவிதமான வெறுப்பு உண்டாவது இயற்கை. சர்வாதிகாரமும் அரசியல் கொள்கைகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்தச் சர்வாதிகாரத்தால் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன, தீமைகள் யாவை என்பதை அன்பர் சர்மா இதில் விரிவாக விளக்குகிறார்.

எவனொருவன் ஜனங்களிலே ஒருவனாகப் பிறந்து வளர்ந்து, தன்னுடைய அசாதாரணமான திறமையால் பலவிதச் சூழ்ச்சிகள் செய்து, அவசியமானால் பலாத்காரத்தை உபயோகித்தும் அதிகாரப் பதவியைப் பெறுகிறானோ, தான் அப்படிப் பெறுவதோடல்லாமல் மற்றவர் யாருக்கும் எவ்வித அதிகாரமும் இல்லாமற் செய்துவிடுகிறானோ, பலாத்கார சக்தியின் துணைக்கொண்டு, தான் பெற்ற அதிகாரத்தைத் தன்னிடமே நிலைத்திருக்கும்படிச் செய்துகொள்கிறானோ, அவனையே சர்வாதிகாரி யென்று அழைக்கிறோம். இதற்கு முஸோலினியையும் ஹிட்லரையும் உதாரண புருஷர்களாக எடுத்துக் காட்டுகிறோம்; இவ்விருவருடைய நடவடிக்கைகளைக் கொண்டே, ஜனங்களுக்குச் சர்வாதிகாரத்தின்மீது ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இருவரின் நடவடிக்கைகளையும் புறக்கணித்து விட்டு, சர்வாதிகாரம் என்ற அரசியல் முறையை மட்டும் இங்கே கவனிப்போம்.

அரசியல் சாஸ்திரத்தில் சர்வாதிகார ஆட்சி முறைக்கு இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது; ஆனால், தற்காலிகமாகத்தான். அதாவது, ஒரு தனி மனிதனுடைய சர்வாதிகார ஆட்சியே சாசுவதமாக நிலைத்திருக்கத் தகுந்ததென்று எங்கும் சொல்லப்படவில்லை. ஒரு தேசத்திற்கோ, ஜன சமுதாயத்திற்கோ விபரீதமான ஆபத்து ஏற்பட்டுவிடும் பட்சத்தில், அந்த ஆபத்தினின்று

தேசத்தையும் ஜன சமுதாயத்தையும் மீட்க, ஜனங்களே தங்களுடைய ராஜ்யாதிகாரங்களனைத்தையும், தங்களிலே சிறந்த ஒருவனைத் தெரிந்தெடுத்து, அவனிடம் ஒப்படைக்கிறார்கள். அந்த ஒப்படைப்பு, சாசுவதமான ஒப்படைப்பல்ல. அந்த ஆபத்தைச் சமாளிக்கிற வரையில்தான் அவனுக்குச் சர்வாதிகாரங்களும் உண்டு. அது வரையிலேயே அவன் சர்வாதிகாரி. அவனுக்கு ஜனங்களும் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அந்த ஆபத்துக் கடந்து போய்விட்டால், அவன், அந்தச் சர்வாதிகாரி, ஜனங்களுடைய நன்றியைப் பெற்றுக் கொண்டு, தன் பதவியிலிருந்து விலகிக் கொண்டு விடுகிறான். இந்த மாதிரியான ஒரு சர்வாதிகார முறையை, ரூஸ்ஸோ கூட, தனது சமுதாய ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்கிறான்: "ராஜ்யத்திற்கு மகத்தானதோர் ஆபத்து ஏற்பட்டு, சாதாரணச் சட்டங்களைக் கொண்டு அந்த ஆபத்தைக் கடக்க முடியாத நிலைமையில்தான், அந்தச் சாதாரணச் சட்டங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, விசேஷச் சட்டமொன்றை நிறைவேற்றி, அதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும் பொறுப்பை, ஒருவனிடமோ அல்லது இரண்டு மூன்று பேரிடமோ ஒப்படைக்கலாம்... இத்தகையவனுக்குச் 'சர்வாதிகாரி'யென்று பெயர். இவன் எல்லாச் சட்டங்களையும், ஜனாதிக்கத்தையுங்கூட, வாயடக்கி விடலாம். இவன் ஜனாதிக்கத்தை அடக்கிவிட்டாலும், ஜன அபிப்பிராயத்தைத் தழுவியே நடக்கிறவனாகிறான்; ஜன விருப்பத்தைப் பூர்த்தி செய்தவனாகிறான். எப்படி யென்றால், ராஜ்யத்தை ஆபத்தினின்று காப்பாற்ற வேண்டு மென்பதுதான், ஜன அபிப்பிராயம்; ஜன விருப்பம். இந்த அபிப்பிராயத்தையும் விருப்பத்தையும் சர்வாதிகாரி பூர்த்தி செய்கிறானல்லவா?" என்பது ரூஸ்ஸோவின் வாக்கு. எனவே, ஜனநாயக சித்தாந்தத்தில் கூட, சர்வாதிகாரத்திற்கு ஓர் இடம் உண்டு, ஆனால் தற்காலிகமாக என்பது தெரிகிறது.

சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னர், அதிகார ஆடம்பரத்துடன் வாழ்ந்துவந்த ரோம ஏகாதிபத்தியத்தின் கீழ், இத்தகைய சர்வாதிகாரிகள் அவ்வப்பொழுது நியமிக்கப்பட்டு வந்தார்கள். இவர்களுடைய உத்தியோக காலம் ஆறுமாத மென்று வரையறுக்கப் பட்டிருந்தது. பிற்காலத்திலே சர்வாதிகாரிகளாக நியமிக்கப்பட்ட சிலர், தங்களுடைய பதவியை, சாசுவதமாக்கிக்கொண்டுவிட்டனர். இதனால் இந்தப் பதவி, கொடுங்கோன்மையின் மறுபுறமென்று கருதப்பட்டு விட்டது; இதற்கு ஒரு கெட்ட பெயரும் உண்டாயிற்று.

சர்வாதிகாரமானது, அதிகாரத்தையே பிரதானமாகக் கொண்டது. அந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விஷயத்தில், அது பலாத்காரமுள்பட சகல முறைகளையும் கையாள்கிறது. ஏனென்றால், அதனுடைய நோக்கம், நிலைகுலைந்து போன அதிகாரத்தை ஒழுங்குபடுத்த வேண்டு மென்பதுதானே? அதிகாரம் நிலைகுலைந்துபோன காலத்தில்தானே, தேசத்தில் குழப்பம் முதலியன ஏற்படுகின்றன; தேசத்திற்கு ஆபத்தும் உண்டாகிறது? சர்வாதிகாரம் நிலவுகிற காலத்தில், ஜனங்களுடைய உரிமைகள் தற்காலிகமாகப் பறிமுதல் செய்யப்படுகின்றன; ஆனால், அவர்களிட

மிருந்து அதிகமான கடமைகளும் எதிர்பார்க்கப் படுகின்றன. நிரந்தரமான நன்மையை முன்னிட்டுத் தற்காலிகமான சில தொந்தரவுகளைச் சகித்துக் கொள்ள ஜனங்கள் சம்மதிக்கிறார்கள்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியதென்னவென்றால், சர்வாதிகார முறையானது (1) பரம்பரைப்பாத்தியதையை அடிப்படையாகக் கொண்டதல்ல; (2) அதிகார நிலைநிறுத்தத்தை முக்கிய லட்சியமாகக் கொண்டது; (3) குறிப்பிட்ட ஒரு காலம் வரைக்குமே அமுலில் இருக்கக் கூடியது என்பவையாம்.

சர்வாதிகார ஆட்சிமுறை ஏன் தோன்றுகிறது அல்லது ஏன் அவசியமாகிறது என்பதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். ஒருவர் ஆட்சியோ அல்லது பலர் ஆட்சியோ அதாவது முடியரசோ அல்லது குடியரசோ நடைபெற்று வருகிறதென்று வைத்துக் கொள்வோம். அந்த அரசு எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகளினால் ஜனங்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுமேயானால், அந்த அரசியலிலே ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். மாற்றம் ஏற்பட்டால்தான், தங்களுடைய அன்றாட வாழ்க்கை எவ்வித முட்டுப்பாடுமின்றி நடைபெறும் என்று ஜனங்கள் உறுதியாகக் கருதக் கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகி விடுகிறது. பழைய அரசாங்கத்தின்மீது ஜனங்களுடைய அதிருப்தி அதிகரிக்கிறது. அப்பொழுது ஜனங்களிலே திறமைசாலியாயுள்ள ஒருவன், ஜனங்களுடைய இந்த அதிருப்தியைத் தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்கிறான். அதாவது, பழைய அரசாங்கத்தை அப்புறப்படுத்திவிட்டு, தான் ஒரு புதிய அரசாங்கத்தை ஸ்தாபித்து, அதன் மூலமாக ஜனங்களுக்கு விமோசனத்தைத் தேடித் தருவதாகச் சொல்கிறான். அரசாங்க மாற்றத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்கள், இவனுடைய பேச்சுக்குச் செவி சாய்க்கிறார்கள். இவனை அப்படியே நம்புகிறார்கள்; பின்பற்றுகிறார்கள். பழைய அரசாங்கம் மறைவதற்கும் புதிய அரசாங்கம் தோன்றுவதற்கும் துணை செய்கிறார்கள். இப்படித்தான் சர்வாதிகார ஆட்சி ஆரம்பிக்கிறது. 1914ஆம் வருஷ ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு, இத்தாலி, துருக்கி, ருஷ்யா, ஜெர்மனி முதலிய நாடுகளில் சர்வாதிகார ஆட்சி முறைகள் ஏற்பட்டதன் வரலாற்றை நாம் சிறிது ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், அரசியல் வாதிகளின் தடுமாற்றம், பொருளாதாரக் குழப்பம், ஜனங்களின் திகைப்பு ஆகிய இவைகளுக்கு மத்தியில், சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டிருப்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

சர்வாதிகாரிகள் அநேகமாக மத்தியதர வகுப்பிலிருந்தே தோன்றுகிறார்கள். இதனால்தான், இவர்களுடைய பேச்சுக்கும் ஆட்சிக்கும், மேல்தரத்துப் பணக்காரர்களும் கீழ்தரத்துத் தொழிலாளர்களும் கட்டுப்படுகிறார்கள். மத்தியதர வகுப்பிலிருந்து வருகிறவர்களாதலினால் தான், இந்தச் சர்வாதிகாரிகள், மேல் வகுப்பினருடைய ஆவலையும் கீழ் வகுப்பினருடைய தேவையையும் நன்றாகத் தெரிந்துகொண்டு, அவற்றிற்கு ஆவன செய்கிறார்கள். இவர்களுடைய ஆட்சி முறை, முதலாளிகளையும் தொழிலாளிகளையும் சரிக்கட்டிக் கொண்டு

போகிற ஆட்சி முறையாக இருக்கிறது.

சர்வாதிகாரிகள், தங்கள் அதிகாரத்தை, நிலைநிறுத்திக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமுடையவர்களா யிருப்பதனால், அந்த அதிகார ஊர்ஜிதத்திற்கு என்னென்ன அரண்கள் போட்டுக்கொள்ள வேண்டுமோ அவைகளை யெல்லாம் போட்டுக் கொள்கிறார்கள். உதாரணமாக, இவர்கள், தங்களைப்பற்றி எப்பொழுதும் உயர்வாகவே பேசுகிறார்கள். அப்படிச் சொல்வதை அழுத்தமாகவும் அதிகார தோரணையுடனும் சொல்கிறார்கள். பெரும்பாலும் சர்வாதிகாரிகள், தங்கள் நாவன்மையையே காரிய சாதனைக்குத் துணையாகக் கொள்கிறார்கள்.

மற்றும் சர்வாதிகாரிகள், அதிகாரத்தைத் தங்கு தடையின்றிச் செலுத்த வேண்டியதற்காக, எவ்வித எதிர்ப்பையும் விரும்புவதில்லை; எதிர்ப்பு இல்லாமலே செய்து கொள்கிறார்கள். எதிர்ப்புக் காட்டுகிறவர்களை நிர்த்தாட்சண்யமாக அடக்கிப் போடுகிறார்கள். வேறு கருத்துடைய கட்சிகளை ஸ்தாபித்துக் கொள்ள இடங் கொடுப்பதில்லை. தாங்கள் செய்கிற காரியங்கள், எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் ஆகிய இவைகளை அப்படியே அங்கீகரித்திருக்கிற ஒரு கட்சியை மட்டும் வைத்துக் கொண்டு மற்றக் கட்சிகளை யெல்லாம் அடக்கி யொடுக்கி விடுகின்றனர்.

இங்ஙனம் ஒரு கட்சியின் பலத்தைக் கொண்டே இவர்கள் ஆட்சி முறையை நடத்துகிறார்களாயினும், ஜனநாயகமே தங்களுடைய ஆட்சி முறைக்கு ஆணிவேராயிருக்கிறதென்று சொல்லிக் கொள்கிறார்கள். இதற்காகச் சட்டசபைகள் அல்லது பார்லிமெண்டுகள் என்கிற ஜனப்பிரதிநிதி ஸ்தாபனங்களையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால், இந்த ஸ்தாபனங்கள், இவர்களுடைய சொற்களையும் செயல்களையும், பதிவு செய்து கொள்கிற அல்லது எதிரொலி கொடுக்கிற கருவிகளாகவே இருக்கின்றன.

சர்வாதிகார ஆட்சியின் கீழ், சில சாதகங்களும் உண்டு. அரசாங்கக் காரியங்கள் துரிதமாக நடைபெறுகின்றன. ஜனப் பிரதிநிதிகளென்று சொல்லிக்கொண்டு ராஜ்ய விவகாரங்களில் யாரேனும் குந்தகம் விளைவித்தால், அதற்கு இடமே அளிக்கப்படுவதில்லை. உள்நாட்டுக் குழப்பங்கள் முதலிய எதற்கும் சந்தர்ப்பமே கிடையாது. நாட்டிலே பலவிதப் பட்ட அபிப்பிராயங்கள் தோன்றி, அவை காரணமாக ஜனங்களுடைய அறிவிலே ஒரு கலக்கம் ஏற்படுவதில்லை. அரசியல் விவகாரங்கள், மத அனுஷ்டானங்கள், சமுதாயப் பழக்க வழக்கங்கள் முதலிய பலவும் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே நடைபெறுகின்றன.

பொதுவாக, சர்வாதிகார ஆட்சியானது ஏதோ சில விசேஷ சந்தர்ப்பங்களில் தான் நடைபெறுவதற்குத் தகுதியுடையதே தவிர, சாசுவதமாக நடைபெறுவதற்குத் தகுதியுடையதல்லவென்பதே, அரசியல் அறிஞர்களின் அபிப்பிராயம்.

*

"படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால், தண்ணீர் படகில் இருக்கக் கூடாது. ஆத்மார்த்தி உலகத்தில் இருக்கலாம். ஆனால், உலக ஆசை அவனிடம் இருக்கக்கூடாது."—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# கூலி

'காங்கேயன்'

மாலை நேரம்.

கிராமத்துக்கு அருகாமையில் செல்லும் ஒரு பாதை வழியாக, ஐம்பது ஐம்பத்தைந்து வயதுள்ள ஒரு கிழவன் நடந்து போகிறான்.

இரு புறமும் வயல்கள் பசேலென்று காட்சியளிக்கின்றன. ஆங்காங்கே தோப்புகள், துரவுகள் தென்படுகின்றன. செடிகளும் கொடிகளும், மரங்கள் போல நீண்டு வளர்ந்து படர்ந்து பாதைக்கு வேலியாக நிற்கின்றன. அவற்றின் நடு நடுவே மரங்கள் துளிர்த்துப் பிஞ்சும் பூவுமாகச் சொரிகின்றன. வசந்த காலம்.......

ஆனால், அந்தக் கிழவன் இவ்வளவு அழகையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. இயற்கை எழில் அவன் மனத்தைக் கவரவில்லை. கால்கள் பாதை வழியே சென்றன. மனம் வேறு எதிலோ லயித்திருந்தது.

* * *

அவன் ஓர் எளிய தொழிலாளி. கூலி வேலை செய்து அன்றாட ஜீவனம். இந்த மாதிரியாக முப்பது, முப்பத்தைந்து வருடம் கழிந்திருக்கிறது. இன்று முதுமையின் சிகரத்தில் வந்து நிற்கின்றனர், அவனும் அவனுடைய மனைவியும். ஒரே ஒரு மகன். இரண்டு பேரும் அவனைச் செல்வமாக வளர்த்து வந்தனர்.

ஊருக்கு வெளியே ஒரு சிறு குடிசை. அதுவே அவர்கள் இல்லம்.

அந்த எளிய குடிசையிலே, அவள் - மனைவி - கண்ணுக்குக் கண்ணாக, தான் வளர்த்த மகனைக் கடைசியாக ஒரு முறை பார்ப்பதற்காகத் தவித்துக் கொண்டிருக்கிறாள். அவனோ, தேசாந்தரம் போய்ப் பல வருஷமாகிறது. அவன் குழந்தைப் பருவத்திலே நல்ல பையனாக இருந்தது என்னவோ, உண்மை. ஆனால், வயது அதிகமாக ஆகக் கெட்ட குணங்களும் பெருகின. ஒருநாள், பக்கத்து ஊர்ப்போலீஸ் ஸ்டேஷனில் அவனை மூடி யிருப்பதாகத் தகவல் வந்தது, பெற்றோர்களுக்கு. காரணத்தை விசாரித்த போது அவர்கள் திடுக்கிட்டனர்.

அவர்கள் ஏழையாக இருந்த போதிலும், மானத்திற்குப் பயந்தவர்கள். ஊரிலே அவர்களுக்கு நல்ல பேர். எல்லோருக்கும் அவர்கள் மேல் அன்பு. மகன் செய்த தப்பிதத்தைக் கண்டு அவன் மனம் புழுங்கினான். வெளியே தலைகாட்ட முடியாமல் தவித்தான். கடைசியில், அவனுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று ஒரு வரையறை

மனிதன் பிறக்கும்போதே முரடனாகத் தோன்றுவதில்லை. முரடனின் மனதிலும் அன்பும் அருளும் பூக்கும். அதற்குக் கால தேச வர்த்தமானங்களே காரணம். அவை தோன்றும்போது, மனிதன் அமரனாக மாறுகிறான். அவனுடைய உணர்ச்சியும் இதயமும் விரிவடைகிறது. அற்ப விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. ஏழைத் தொழிலாளி ஒருவன் வேலை தேடுகிறான். வேலை கிடைக்கிறது. ஆனால், கூலி வாங்கப் போகும் சமயம், அவன் மனம் மாறுகிறது. அதன் பின்னே.........

செய்து கொண்டுவேலை பார்க்கத் தொடங்கினன்.

மகனுக்கு ஆறு மாதச் சிறை வாசம் கிடைத்தது. சிறைவாசம் முடிந்த பின், அவன் சொந்த ஊர்ப் பக்கம் தலை காட்டவில்லை. அவன் எங்கு போனனே, என்ன ஆனனே-யாருக்கும் தெரியாது.

பதினைந்து வருஷத்திற்கு முன்பு நடந்த விஷயம்.........

ஆண்கள் எளிதிலே பாசத்தை உதறிவிடலாம். ஆனல், பெண்கள்! பெற்ற மனம் எதையும் ஏற்றுக் கொள்ளும். அவன் கொலைஞன யிருந்தாலும், குடியன யிருந்தாலும், இன்னும் பஞ்சமா பாதகன யிருந்தாலும், பெற்ற தாய் ஒதுக்கும் புத்திரன் யார்?

அவள் அழுதாள், ஏக்கத்தால் பொருமினள். நள்ளிரவிலே வாசவில் உட்கார்ந்து தன் ஏக புத்திரனை நினைத்து நினைத்து மௌனமாகக் கண்ணீர் பெருக்கினள். காலாகாலத்தில் கஞ்சி குடிப்பதில்லை. கண்களில் உறக்கம் குடி கொள்வதில்லை. அருந்துவதற்கு நெஞ்சமும் பருகுவதற்குக் கண்ணீருமாகக் காலங் கழித்து வந்தாள்.

அவளுடைய பலமும் உற்சாகமும் மறைந்தது. பாயும் படுக்கையுமாக ஆனள். இறந்துபோவதற்கு அவள் பலமுறை விரும்பினள். ஆனல், எமன் அவளைக் கொண்டு போக மறுத்தான்.

அவனை மீண்டும் ஒரு முறை கண்ணல் பார்க்கா திருந்தால் போதும் என்று கருதினன் கிழவன். ஆனல், அவளோ—அவனை எண்ணி எண்ணிப் புலம்பியவாறு, பஞ்சடைந்த கண்களால் வாசலை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனல், அவனைக் காணேம்.

பதினைந்து நாளாகக் கடுமையான நோய். சுய உணர்வு இல்லை. 'மகனே' என்ற வார்த்தைகள் மாத்திரம் அவள் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தன. இந்தப் பரிதாபத்தைக் கண்ணல் பார்த்துக் கொண்டிருக்க அந்த வயோதிகனல் முடியவில்லை.

* * *

கிழவன், நடந்து போய்க் கொண்டே இருந்தவன், நகர வாயிலை அணுகினன். எதிரே, கந்தை உடையணிந்த ஓர் ஏழை வந்தான். கிழவன் அவனை நோக்கினன்.

"கிழவரே, மருதூர் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று வினவினன் அந்த ஏழை.

கிழவன் பதில் பேசவில்லை. அவன் அசைவற்று நின்ருன். தலை குனிந்திருந்தது.

"என்ன, கேட்கவில்லையா?" என்ருன் அந்த இளைஞன்.

கிழவன் அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் "ஒரு வேலை செய்கிருயா? நான் ஏழை. கூலி கொஞ்சமாகத்தான் கிடைக்கும்......என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

வாலிபன், எதிரே நின்ற அம்மனிதனை நோக்கினன். மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

"வேலை செய்வதற்குத் தடை இல்லை. கூலி கொடுப்பதற்கு உன்னிடம் என்ன இருக்கப் போகிறது என்றுதான் யோசிக்கிறேன்" என்ருன்.

"அல்ல. உண்மையாகக் கொடுக்கிறேன்" என்ருன் கிழவன்.

வாலிபன் அவன் பின் தொடர்ந்தான். இருவரும் பேசிக்கொண்டே சென்றனர். அவன் வேலை விவரத்தைக் கேட்டான். கிழவன் சொன்னான்.

"கூலி எவ்வளவு கொடுப்பாய்?" என்று கேட்டான் அவன்.

"எட்டணாக் கொடுக்கிறேன்" என்று பணிவாகச் சொன்னான் கிழவன்.

"எட்டணாவுக்காகவா நாளை வரை உட்கார்ந்திருப்பது? நன்றாயிருக்கிறது!" என்று சிணுங்கினான் வாலிபன்.

"நாளை வரை எதற்கு? இன்றிரவே செத்துப் போவாள். செத்ததும் நீ போகலாம்......"

அவனுடைய குரல் தடுமாறியது. ஆனால், உடனே சமாளித்துக் கொண்டான்.

"அப்படிச் செத்துப்போனால் போகட்டும். கிழடு தானே, போய்த்தொலைகிறது" என்றான் வாலிபன்.

"கடைசிக் காலத்தில் சந்தோஷமாகச் சாகட்டுமே என்று தான் பார்க்கிறேன்......இதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அவளுக்குக் கண் தெரியாது. உன்னை அடையாளம் கண்டு கொள்ள அவளால் முடியாது."

"போனால் போகிறது. முக்கால் ரூபாய் கொடுத்து விடு. குழி தோண்டி வேண்டுமானாலும் புதைத்து விடுகிறேன்."

அவனுடைய பேச்சிலே பரிகாசமும் குறும்பும் நிறைந்திருந்தது. அவன் எதற்கும் இரங்காத நெஞ்சனைத் தோன்றினான். கருணை காட்டுமாறு அவனிடம் மன்றாடுவதில் பயன் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான் கிழவன்.

"எட்டணாவும் கொஞ்சம் சில்லரையும் இருந்தது. இவ்வளவு என்று நிச்சயமாகத் தெரியாது. இருப்பதை உனக்குக் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

வாலிபன் யோசனையில் ஆழ்ந்தான். அவனுடைய பார்வை நாலாபுறமும் சென்றது.

தலைக்கு மேலே பறவைகள் கூட்டங் கூட்டமாகச் சென்றன. உழவர்கள் வயல்களி லிருந்து வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால், மணியோசை செய்து கொண்டு மாடுகள் சென்றன. பயிர் பச்சைகளின் சுகந்தம் வந்து கொண்டிருந்தது. மெல்ல மெல்ல, பூமியை இருள் தழுவிக் கொள்ளும் நேரம்.

"சரி, போவோம்" என்றான் வாலிபன்—பாதி விருப்பமும் பாதி வெறுப்பும் தொனிக்கும் குரலில்.

இருவரும் ஒற்றையடிப் பாதை வழியே கிராமத்திற்குச் சென்றனர். யாரும் பேசவில்லை.

குடிசையை அடைந்தனர். கிழவன் உள்ளே சென்றான். வாலிபன் அவனைப் பின் தொடர்ந்தான்.

கிழவன் கீழே குனிந்து, எமலோக வாயிலை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த அந்தச் 'சவத்தை' நோக்கி, "இதோ, வந்திருக்கிறான், பார்த்தாயா!" என்றான்.

அதிசயம்!

அவள் கண்ணை விழித்துப் பார்த்தாள். இரண்டு மெல்லிய கரங்கள் அந்த இளைஞனை நாடின. "ஆ, மகனே" என்ற வார்த்தைகள் ஈன சுரத்தில் அவ

ளுடைய வாயிலிருந்து வெளி வந்தன. கண்ணிலே ஒளியும் முகத்திலே குதுகலமும் ததும்பின.

கிழவன் வெளியே போய் ஒரு கல்மேல் உட்கார்ந்து, தலையை இரு கையாலும் தாங்கியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். சென்ற கால வாழ்க்கையை ஒரு முறை நினைத்துப் பார்த்தான். துயரமும் வேதனையும் அளவுக்கு மீறிப் பொங்கின. வாழ்க்கையிலே, எந்த விதமான இன்பத்தையும் அவன் காணவில்லை. எல்லாவற்றிற்கும் சிகரம் போல, இதுவரை அவனுடைய இன்ப துன்பங்களிலே பக்தி சிரத்தையாகப் பணி செய்துவந்த அவளும்—அந்த வயோதிக மாதும் இன்று பிரியப் போகிறாள். இனித் தனியன். நாளையிலிருந்து உலகம் அவனுக்குச் சூனியமாக விளங்கும்.. நீண்ட பெருமூச்செறிந்தான்.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். நேரம் போனதே அவனுக்குத் தெரியவில்லை. எழுந்து போனான். அவள் மீளாத் துயிலில் ஆழ்ந்து கிடந்தாள். முகத்திலே ஒரு திருப்தியும் உதடுகளிலே குறுநகையும் தோன்றின. அவளுடைய விருப்பம் ஒருவாறு நிறைவேறியது. அவனும் தன் கடமையை நிறைவேற்றி விட்டான். கிழவன் வாலிபன் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் சித்திரம் போல் உட்கார்ந்திருந்தான்.

கிழவன், இருளடர்ந்திருந்த ஒரு மூலையிலே போய், அங்கிருந்த ஒரு சிறிய சட்டியில் கையை விட்டுத் துழாவினான். எல்லாம் காலணா நாணயம். இருப்பதை ஒன்று விடாமல் எடுத்தான். முக்கால் ரூபாய் இருந்தது.

வாலிபன் எழுந்து நின்றான். கிழவன் பணத்தை அவனிடம் நீட்டி "இனி, நீ போகலாம். நீ செய்த நன்றியை மறவேன். என்னால் கொடுக்க முடிந்தது இவ்வளவுதான். சந்தோஷமாக வாங்கிக் கொள்" என்றான்.

அந்தக் காசைப் பார்த்ததும், இளைஞன் 'மள மள' வென்று கண்ணீர் உதிர்த்து விட்டான். அதைத் தொடவும் அவன் கை கூசியது. அவன் மௌனமாயிருந்தான்!

கிழவன் மீண்டும் ஈன சுரத்தில், "என் விதி இது. நீ வருந்தாதே. உன்னிடம் பேசிய கூலியைப் பெற்றுக் கொள். போ" என்றான்.

வாலிபனுக்குத் துக்கம் கட்டு மீறிப் பொங்கியது. அவன் சொன்னான்: "பெரியவரே! என் தாய் பதினைந்து வருஷத்திற்கு முன் இறந்தாள். அன்று அவளருகிலும் இம் மாதிரியே நான் உட்கார்ந்திருந்தேன். ஆனால், துயரமோ வேதனையோ அப்போது எனக்கில்லை. இதோ இன்றுதான், என் தாயை இழந்தது போல், என் உள்ளம் வேதனைப் படுகிறது......இந்தக் காசை நான் எப்படி வாங்குவேன்? ஐயோ! வேண்டாம், வேண்டாம். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லியவாறு முகத்தைக் கையால் மூடிக் கொண்டான்.


*

"கிளி பறந்துபோன பிறகு கூண்டைக் கவனிப்பார் எவரும் இல்லை. உயிராகிய கிளி பறந்துபோன பிற்பாடு, பிணமாகிய உடலைக் கவனிப்பார் யாருமிரார்."

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# 400 மைல் பிரயாணம் செய்தார்கள்





நண்பர் : (பிரயாணம் செய்தவரைப் பார்த்து) என்ன ஸார்! பிரயாணம் எப்படி ?

பிரயாணி : பிரயாணம் என்னவோ நிரம்பச் சிரமமானதுதான். ஆனலும் அசோகா பாக்குத் தூள் இருக்கும் போது 400 மைல் அல்ல, 4000 மைல் வேண்டுமானலும் பிரயாணம் செய்துவிடுவேன், ஸார். அசோகா என்ன உற்சாகம் தருகிறது தெரியுமா !

RECD. No. 1506 அசோகா MILD SCENTED ASOKA ரிஜிஸ்டர் நெ. 1506

# அசோகா

# தேயிலையின் சரிதம்—3



டூவர்ஸில் தேயிலை பரித்தல்

## இரண்டு இலைகளும் ஒரு மொக்கும்

ஆகையால் நன்கு வளர்ந்த செடிகளின் கூட்டம் இளய பச்சை நிறத்துடன் பரிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறது.

நமது இந்திய தோட்டங்களில் இரண்டு இலைகளும் ஒரு மொக்கும் உயர்ந்த ரக தேயிலையின் பரிக்கவேண்டிய அளவு கோலாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி மொக்கும் அதை அடுத்துள்ள இரண்டு இலைகளுமே சேகரிக்கப்படுகிறது.

பரித்தல் சில இடங்களில் வருஷம் முழுவதும் நடைபெருகிறது. மற்ற இடங்களில் ஒரு சில மாதங்களிலே நடைபெருகிறது. இது தோட்டம் அமைந்துள்ள இடத்தை பொருத்தது. எல்லா இடங்களிலும் ஒருவார அவகாசம் விட்டே பரித்தல் நடைபெருகிறது. இதால் புதிய இலைகளின் உற்பத்திக்கு பங்கமில்லாமலிருக்கும்.

அதற்காக அமைக்கப்பட்ட கூடைகளை சுமந்து தேயிலை சேகரிப்பவர்கள் அறுவடைக்குச் செல்லுகிறார்கள். அவர்களின் கைலாகவமும், தொழில் வன்மையிலுமே தயாரிக்கப்பட்ட தேயிலையின் மேன்மை பொருந்தியிருக்கிறது.

வெகு சீக்கிரம் இரண்டு இலைகளும் ஒரு மொக்கும் அளிக்கும் ருசியையும் சந்தோஷத்தையும் அனுபவிப்பீர்கள்.

# ப்ரூக் பாண்ட்

# தலைவர் லெனின்

**வ. ரா.**

மகத்தானதொரு புதிய சமுதாயத்தைக் கனவு கண்டவர் மார்க்ஸ். அதைக் கண் முன்னே ஸ்தாபித்தவர் லெனின். இன்று உலகத்துக்கே புதுமையாக வாழ்ந்து போரிட்டு, உலகெங்கும் வியக்க வீரங்காட்டி வருகிறதே அந்த ஸோவியத ருஷ்யாவை உருவாக்கிய மகாபுருஷன் லெனின்தான். சிலநாட்களுக்குமுன் அவர் தினம் எங்கும் கொண்டாடப் பெற்றது. அவருடைய குணதிசய சித்திரத்தை வரைந்திருக்கிறார் பிரபல எழுத்தாளர் வ. ரா.

எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்பது ஏட்டில் இருக்கும் ஆசை. அதை, மனித இதயத்துக்குள் வேர் ஊன்றச் செய்ய வேண்டும் என்பது புத்த பிரானது ஆவேசம்; அதுவே, ஏசுவின் உபதேசம். மண்ணில் தோன்றிய சாதுக்களும் தீர்க்க தரிசிகளும், இதைப் பூர்த்திசெய்வதற்காகவே, அரும்பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி பூரணமாகப் பலித்ததாகத் தெரியவில்லை.

எல்லோரும் இன்புறுவது, இதய மாற்றத்தைப் பொறுத்திருக்குமாகில், அது எளிதில் அடையக் கூடிய லக்ஷியம் அல்ல. பல நூற்றாண்டுகள் மட்டுமல்ல, பல யுகங்கள் ஆக வேண்டும். ஆனால், எல்லோரும் இன்புற்று இருப்பதற்கு, இதய மாற்றத்தைத் தவிர, வேறு உபாயம் இல்லையா? நிச்சயமாக உண்டு. இதைத்தான் கார்ல் மார்க்ஸ் என்ற மகா மேதாவி கண்டு பிடித்தார்.

கார்ல் மார்க்ஸ் கண்டு பிடித்த உண்மையும் வெற்று உரையாகப் போயிருக்கலாம். புத்த பிரானின் ஆவேசத்தையும் ஏசுவின் உபதேசத்தையும், சிலர்தானே கைக்கொள்ள முடிந்தது? கார்ல் மார்க்ஸ் கண்ட உண்மையும் பாலை வனத்தில் சோறிப் போகும் ஆற்று நீரைப் போல ஆகிவிடலாம். நல்ல வேளையாக, உலகத்தின் க்ஷேமத்துக்காகவும் முற்போக்குக் காகவுமோ என்னமோ, அது அவ்வாறு ஆகவில்லை.

கவியின் உள்ளத்தைக் கொண்டு கார்ல் மார்க்ஸ் கண்ட தரிசனத்தை, கர்ம வீர உள்ளத்தைக் கொண்டு, லெனின் அனுபவத்துக்குக் கொண்டு வந்தார். எல்லோரும் இன்புற்று இருக்க முடியாது என்று போலி வேதாந்தம் பேசும் வீணர்களின் வாய் அடைத்துப் போகும்படியாக, லெனின் ரஷ்யாவிலே, அற்புதத்தைச் செய்து காண்பித்தார்.

இந்த ஆச்சரிய புருஷன் லெனின், பார்வைக்கு எப்படி இருப்பார்? நல்ல கட்டுமஸ்தான தேகம்.

உயரமல்ல; குள்ளம். தலையில், முன் வழுக்கை. பிரத்தியேகமான முகப் பொலிவு. சந்தர்ப்பத்தின் நுட்பத்தை நொடிப் பொழுதில் உணர்ந்து கொள்ளும் வல்லமை, அவரிடம் அபரிமிதமாக இருந்தது. ஆபத்தைச் சமாளிக்கும் சமயோசித புத்தியும், அதே ஆபத்தைக் கண்டு அஞ்சாத நெஞ்சமும் லெனினுடைய சிறப்பான குணங்கள்.

உண்மை என்று கண்டதை விடாப் பிடியாகப் பிடித்துக் கொள்ளும் பிடிவாதமும் தவறு என்று கண்டதை உடனே உதறித்தள்ளி, தவறு என்று ஒப்புக்கொள்ளும் தைரியமும் லெனினது உள்ளத்தில் குடி கொண்டிருந்தன.

சிறு பிராய முதல், ரஷ்யாவில் புரட்சி வெற்றிகரமாக முடியும் வரையில், லெனின் அனுபவித்த துன்பங்களும் இன்னல்களும் எழுத்துக்கு அடங்காதவை. துன்பத்துக்கே பிறந்தவர் என்று வாழ நேர்ந்த லெனின், கோடை இடி இடிப்பதைப் போல் சிரிப்பார் என்று சொன்னால், அது வியக்கத்தக்க விஷயமல்லவா? 'சதிகார' லெனின், இப்படிச் சத்தம் போட்டு,சிரித்தல் கூடுமா? ரஷ்ய ரகசியப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய்விட மாட்டார்களா? ஆனல், லெனின் எதற்கும் பயப்படுபவர் அல்ல.

ஏழை ரஷ்யர்களின் கதி என்ன? அவர்களுக்கு விமோசனம் உண்டா? அவர்கள் சுகமாயும் சுதந்திரத்தோடும் வாழ வழி உண்டா? இதைப்பற்றித்தான், லெனினுடைய ஓயாத கவலை. இது சம்பந்தமாகத்தான் அவரது தளர்விலாத உழைப்பு. எப்பொழுதும் கவலையிலே இணங்கி இருக்கும் லெனினுக்கு ஊணைப்பற்றியும் உறக்கத்தைப் பற்றியும் நினைவு இருக்குமா?

கார்ல் மார்க்ஸ் கண்ட முடிவை, சாதிப்பது எவ்வாறு? ரஷ்யாவிலே எப்படிப் புரட்சியை உண்டாக்குவது? தமது திட்டத்தை எவ்வாறு பிரசாரம் செய்வது? தம்மை ஆதரிப்பவர்கள் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? தாம் நடத்தும் இயக்கத்துக்குத் தேவையான பணத்தை எவ்வாறு சேகரிப்பது? ரஷ்யாவை விட்டு வெளியேறிய லெனின், எப்பொழுதும் யோசித்துக் கொண்டிருந்தது இவைகளைப் பற்றித்தான்.

'நம்ம ஜனங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். அவர்களை நம்பி எந்தப் பெரிய காரியத்தையும் ஆரம்பிக்கக் கூடாது. அவர்கள் வெறும் நெல்லிக்காய் மூட்டைகள்' என்று நம் தேசத்தில் இப்பொழுது பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, இந்த மாதிரி ரஷ்யாவில் யாரும் சொன்னதே இல்லையா? அதை என் கேட்கிறீர்கள்? லெனின் காலத்து ரஷ்யா, இந்தியாவைவிட ரொம்ப மோசமான நிலைமையில் இருந்தது.

'இம்' என்றால் சிறைவாசம்; 'ஏன்' என்றால் வனவாசம். அரசாங்க உளவர்கள் நுழைந்து சின்னா பின்னப்படுத்தி, அலங்கோலம் செய்யாத நாள் இல்லை, நபர் இல்லை, இடம் இல்லை. 'நாம், நாளைக்கு, சுகமாக வீட்டிலே தான் இருப்போம்' என்ற நம்பிக்கையோடு யாரும் வாழ முடியாது. தூக்குக்கு இரையானவர்கள் அனந்தம். ராஜாங்கத்தைச் சேர்ந்த குலாம்களையோ எண்ணித் தொலையாது. ஜார் என்ற கொடுங்கோலனும் அவனைச் சூழ்ந்து நின்ற பிரபுக்களும்

ராணுவ உத்தியோகஸ்தர்களும் ரஷ்யப் பொதுமக்களின் வாழ்வை நரகமாக்கி வந்தார்கள்.

இந்த நிலைமையிலிருந்து ரஷ்யாவுக்கு விமோசனத்தைத் தேடிய லெனினும் அவருடைய தோழர்களும் எத்தகைய திடசித்தர்களாக இருக்க வேண்டும்? வார்த்தைகளால் அதை வர்ணிக்க முடியுமா?

பெரு முயற்சியில் ஈடுபடுபவர்கள், விரைவிலே வெற்றியைக் காண முடியுமா? பணத்தாலும் பலத்தாலும் திமிர் பிடித்து நிற்கும் ராஜாங்கத்தோடு போராடும் லெனினின் தோழர்கள் மனச் சோர்வு அடைய மாட்டார்களா? லெனினைத் தவிர, மற்ற யாவரும் அடிக்கடி மனச் சோர்வுக்கு, பலியானார்கள். அருமையான தோழர்கள் சோர்வு கொண்டு, பலவீனப்படும் காலையிலும், லெனின் மட்டும் தமது லக்ஷியத்தில் தவறினதில்லை: வழியினின்று மயிர்க்காப்பு அளவு கூட, புரண்டதில்லை. தைரியத்தையும் நம்பிக்கையையும் அணு அளவுகூட, இழந்ததில்லை. என்ன அபூர்வமான பிறவி!

துக்க நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூட, லெனின், காதலுக்கு, தமது உள்ளத்தில் ஒரு ஸ்தானத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டார் என்றால், அவருடைய தவயோகத் திறமையைப்பற்றி என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.

தம் கக்ஷியினர் சட்ட சபைகளுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று லெனின் ஒரு சமயம் சொல்லுவார்; அதே லெனின், இன்னொரு சமயம், தம்மைச் சேர்ந்தவர்கள் சட்ட சபைகளினின்றும் வெளியேற வேண்டும் என்பார். தங்கள் தலைவர் லெனின் ஸ்திரபுத்தி யில்லாதவரோ என்று கூட, தோழர்கள் சந்தேகங் கொண்டு, அவரை விட்டுப் பிரிந்து போயிருக்கிறார்கள். அவர்களுடைய பிரிவைக் கண்டும், லெனின் நெஞ்சம் கலங்கினதில்லை.

லெனினுடைய தோழர்களில், ட்ராட்ஸ்கி ஒருவித ஆசாமி; ஸ்டாலின் வேறுவிதப் பேர்வழி. இருவரும் புரட்சிக்குத் தேவை என்பதை லெனின்தான் உணர்ந்தார். முரண்கொண்ட மனப்பான்மைகளையுடைய இவ்விருவரும் தம்மிடம் எல்லையற்ற நம்பிக்கையுடன் இருக்கும்படியாக லெனின் செய்தாரே, அந்த ஜாலவித்தை எப்பேர்ப்பட்டது? அவ்விருவருக்கும் தனித்தனியே, வெவ்வேறு வகையான வேலை கொடுத்து, அவர்களிடமிருந்து வேலை வாங்கின அவரது சாமர்த்தியத்துக்கு, இணை காணுவது அரிது.

ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர், லெனின், மூன்று மாத காலம் வேலை செய்தது அசுர வேலையாகும். முப்பது வருஷத்து வேலையை மூன்று மாதத்துக்குள் அவர் செய்து முடித்தார் என்றால், அதை அற்புதம் என்று சொல்லி, மூக்கின்மேல் கைவைக்க வேண்டியதுதான். மண்ணை வெல்லத்து இனிப்புவரச் செய்வதைப் போல, சாமான்ய ரஷ்யர்களை, லெனின், வீரர்களாக்கினர். ஏழை என்றும் அடிமை என்றும் யாரும் இல்லை, அந்த நாட்டிலே.

லெனினுக்கு இவ்வளவு அபாரமான சக்தி இருந்ததே, அது அவருக்கு எவ்வாறு கிடைத்தது?

நம் நாட்டுத் திண்ணை தூங்கிகள், லெனின் அவதார புருஷன் என்று, உடனே, காரணமும் சமாதானமும் சொல்லிவிட்டு, கொட்டாவி விடுவார்கள். ரஷ்யாவிலே, லெனின் மூலமாக இப்படியெல்லாம் சம்பவிக்க வேண்டும் என்று இருந்ததனுலே அவருக்கு அவ்வளவு சக்தி கிடைத்தது என்று, தலையெழுத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பிதற்றுவார்கள். ஆனால், காரணங்கள் வேறு.

லெனினுக்கு, ரஷ்யக் குடியானவர்களிடமும் தொழிலாளிகளிடமும் அபரிமிதமான வாஞ்சை. அவர்களுடைய கூட்டு வல்லமையில், அவருக்கு எல்லையற்ற நம்பிக்கை. எந்த சந்தர்ப்பத்தையும் ஆராயாமல், அவர் நழுவவிட்டதே இல்லை. அந்த ஆராய்ச்சியிலிருந்து தாம் கண்ட உண்மைகளை, பிரயோகம் செய்து பார்த்து, அதனின்றும் படிப்பினை கொள்ளுவதில், அவர் சாமர்த்தியசாலி. அவர் ஓயாமல் உழைத்தார். சலிப்பின்றி உபதேசம் செய்தார். சிறிது சிறிதாக, சக்தியைத் திரட்டினர். திரட்டின சக்தியை, உருவான வேலையில் புகுத்தினர். அவ்வாறு செய்து, தமது கட்சியின் எதிர்ப்பு வல்லமையை, பன்மடங்கு பெருக்கினர். சந்தர்ப்பத்துக்குக் காத்துக் கொண்டிருந்து, ரஷ்ய ராஜாங்கத்தை, சிறு சிறு சங்கதிகளில் கலங்கும்படி செய்தார். இவ்வாறு பல ஆண்டுகள் செய்து, புரட்சிக்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் ஒன்று சேர்த்தார். எனவே, லெனினது வல்லமை, அவரது உழைப்பின் பயன்; அவரது மதியூகத்தின் விளைவு; அது சந்தர்ப்பத்தின் சன்மானம்; அதுவே, அவருடைய எதிரிகளின் பலவீனத்தையும் பொறுத்திருந்தது.

யாரோ ஒரு முட்டாள், லெனினைச் சுட்டான். சுட்ட குண்டு, அவரது தோள்பட்டைக்குப் பக்கத்தில் சில வருஷங்கள் இருந்தது. அதை வெளியே எடுத்தால், லெனினது உயிருக்கு அபாயம் என்று டாக்டர்கள் எடுக்கவில்லை. அந்த குண்டோடு, லெனின் சில வருஷங்கள் உயிரோடு இருந்தார். அப்பொழுதும் அவரது உழைப்பு ஓய்ந்ததில்லை.

சகோதர மனிதனிடம் வாஞ்சை என்ருல், லெனினைப் போல அல்லவா இருக்கவேண்டும்? பொய்யையும் வஞ்சகத்தையும் பட்டினியையும் நோயையும் ரஷ்யாவில் தலைகாட்டாமல் செய்ய எண்ணி, அதற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த லெனின், சாகா வரம் பெற்றவர். உலக சரித்திரத்திலே அவருக்கு இணையாக, யாரையாவது சொல்லக் கூடுமானல், அவர் காந்தி; இருவருடைய தன்மைகளும் ஒரே வகை. லட்சியமும் ஒன்றே. ஆனல், அதை அடையும் மார்க்கங்கள் மட்டும் வெவ்வேறு. இவர்கள் இருவரும் மனிதவர்க்கத்தின் 'ஈடு ஜோடி' இல்லாத சிகரங்கள்.

✲

"துன்பப் பறவைகள் தலைக்குமேல் பறந்து போவதைத் தடுக்க யாராலும் இயலாது. ஆனல், அவை தலைமயிரில் கூடு கட்டுவதைத் தடுக்க இயலும்."

—ஒரு சீனப் பழமொழி

# மங்கம்மாள் மைந்தன்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

இன்றும்தான் இந்தியாவில் எத்தனையோ ராஜாக்கள் இருக்கிறார்கள் — பொம்மை ராஜாக்கள். நீதிக்கும், வீரத்துக்கும் எத்தனை பேருண்டு? மதுரை நாயக்க வம்சத்திலே பிறந்த ரங்ககிருஷ்ணனின் சரித்திரம் போல் எத்தனை பேருக்குண்டு? அது தாஜ்மகால் ஒட்டல் கதை அல்ல: ஒருத்தியிருக்க ஒருத்தியை மணந்து சந்திசிரிக்கும் விபரீதமல்ல. மெய்சிலிர்க்கச் செய்யும் வீரனின் சரித்திரம்.

அரசரின் அந்தப்புரம் என்றால், அனர்த்தத்தின் இருப்பிடம், பொச்சாப்பின் பிறப்பிடம், கொலைகளின் விளைநிலம், சூதுகளின் சூழ்நிலம்! அழகிய மாதர் ஒருவரா, இருவரா? நூற்றுக் கணக்கு. ஏன் — ஆயிரக் கணக்குமாம்! தற்கால மன்னவரைப் பற்றிப் பேசவேண்டாம்; பழங்கால வேந்தரைப் பார்ப்போம்.

அக்பரின் அந்தப்புரத்திலே ஐயாயிரம் மாதர்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசம், ஒவ்வொரு ஜாதி. ஆனால், எல்லாரும் அழகின் அவதாரம். தக்காண முகம்மதிய அரசுகளின் அந்தப்புரத்திலோ நூற்றுக் கணக்கு. பற்பல ஜாதிமத வகுப்புக்களின் வனிதா ரத்தினங்கள்! விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் அந்தப்புரத்திலே ஐந்நூறுக்கு அதிகம். எல்லாரும் பொறுக்கி யெடுத்த பூவையர் திலகங்கள்.

மதுரை நாயக்க மன்னவரின் அந்தப்புரத்திலோ, இருநூறு அல்லது முந்நூறு. அனைவரும் ஆய்ந்தெடுத்த மாதரசியர்; அழகின் வடிவம் போன்றவர்! அனைவரும் ஒருவனையே நச்சிக் கிடக்கையில், அந்த ஒருவனும் பலரை நாடி நிற்கையில், சூதும் வாதும், கோளும் குறளும், பொய்யும் பகையும் பொங்கி யெழுதல் இயற்கையே.

புராண இதிகாசங்களிலும் சரி, சரித்திர நிகழ்ச்சியாலும் சரி, இராமபிரான் ஒருவனையே ஏக பத்தினி விரதன் என்பர். ஒருத்தியுடன் உவந்து நின்ற அரசனைக் காண்பதரிது. ஆயினும், மதுரை நாயக்க மன்னவரிலே, மங்கம்மாள் மைந்தன், ரங்ககிருஷ்ணன் என்பவன், தன் மனைவியைத் தவிர வேறெவரையும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

பட்டமேறும் பொழுது, ரங்ககிருஷ்ணனுக்கு வயது பதினாறே. நல்ல காளைப் பருவம். கட்டமைந்த சரீரம்; வனப்பின் பிரதிமை. பரந்த செல்வம், விரிந்த ராஜ்யம். விரும்பியதை யெல்லாம் கூட்டுவிக்கும் அதிகாரம். இந்நிலையில் ரங்ககிருஷ்ணன் தன் தேவியிடமே மெய்யன்பு கொண்டான்; உண்மைக் காதல் பூண்டான்; உயரிய நலமும் எய்தினான். அவன் மனையாளும் அப்படியே; அவன் குணாதிசயங்கள் கூறுவோம்.

அவன் காலம் கி. பி. 1682 முதல் 1689 வரை. திரிசிராப்

பள்ளியே அவனுக்கு ராஜதானி. ஒரு தினம் மாலை நேரம், அவன் குதிரை சவாரி போனான். திருவெறும்பூருக்குப் பக்கம் ஓர் ஆல மரத்தடியில் சிறிது நின்றான். வழிப்போக்கர் இருவர் அங்கே பேசியிருந்தனர். "தஞ்சை வேந்தனே வேந்தன்" என்றான் ஒருவன். அப்போது தஞ்சை ஒரு தனியரசு. "தஞ்சை வேந்தன் கட்டுங் காவலும் சொல்லப் போமோ" என்றான் மற்றவன். மீண்டும், "நம் திருச்சி யரசன் பச்சைப்பாலன்" என்றான் ஒருவன். "காளை கட்டுக் கடங்குமோ, கொண்டியாய்த் திரியுமோ" என்றான் மற்றவன். "போகப் போகத் தெரியும்" என்றான் அங்கு வந்து சேர்ந்த மூன்றாமவன்.

அவ்வளவையும் கேட்டுக் களித்தான் ரங்ககிருஷ்ணன். மூவரும் அவனை யாரென அறியார். யாரோ செல்வவான் மைந்தன் என்றே எண்ணினர். மூவரும் திருச்சி நோக்கிப் பயணமாயினர். ரங்க கிருஷ்ணனோ, தஞ்சைமாநகரை நோக்கிக் குதிரையைத் தட்டிவிட்டான். அப்போது இரவு புகுந்துவிட்டது. பெரு நடையாகவே பாய்மா சென்றது. தஞ்சையின் நகர்ப்புறம் சேர்கையில் இரவு நாழிகை பத்து.

குதிரை சவாரி வந்த களைப்பு. அத்துடன் பசியினால் நேர்ந்த துடிப்பு. ரங்ககிருஷ்ணனிடம் கையிலே காசில்லை. வேற்றரசனது ஊர். என்ன செய்வது? காசுக் கடைக்குச் சென்றான். கணையாழியைக் கொதுவை வைத்தான். பூவராகனென்று வாங்கிக் கொண்டான். சத்திரமொன்று சேர்ந்தான். முதலில் குதிரைக்குக் கொள்ளும் புல்லும் வாங்கினான். பின்னரே தன் பசிக் களைப்பை நினைத்தான்.

பாலும் பழமும் வாங்கிப் பசியாறினான் அவ்விளைஞன். சத்திரக்காரனிடம் குதிரையை ஒப்படைத்தான். இரவு நாழிகை பன்னிரண்டு இருக்கும். அரண்மனைச் சிப்பாய் ஒருவனைச் சரிப்படுத்தி, அவன் உடுப்புக்களை வாங்கித் தரித்துக் கொண்டான். தஞ்சை வேந்தனது அத்தாணி மண்டபம் புகுந்தான். ஒரு முகூர்த்த நேரம் காவலாளியாக விளங்கினான். தஞ்சை யரசன் தன் அமைச்சருடன் மந்திராலோசனை செய்ததைக் காதாரக் கேட்டான்.

ஒரு முகூர்த்த நேரம் நீங்கியது. முறைப்படி காவலுக்கு வேறொரு சிப்பாய் வந்துவிட்டான். உடனே ரங்ககிருஷ்ணக் காவலன் அந்தச் சிப்பாயிடம் காவலை ஒப்படைத்தான். வந்த வழி நோக்கினான். நோக்குகையில் அத்தாணி மண்டபத்திலிருந்து அந்தப்புரம் செல்லும் பாதையிலே சுவரின் மீது, "தஞ்சை வேந்தே! உன் கட்டும் காவலும் நன்று! நன்று!! மந்திராலோசனை அனைத்தையும் என் காதாரக் கேட்டேன். இங்ஙனம் ரங்ககிருஷ்ணன்" என்று எழுதத் தவறவில்லை.

கடை யாமத்தில் சத்திரஞ் சேர்ந்தான் அச்சத்திரபதி. கிழக்கு வெளுக்கும் வரையில் ஆங்கிருந்தான். அங்கே இளைப்பாறும் பாட்டைசாரிகள் பேசிக் கொள்வதையும் கேட்டு உணர்ந்தான். பின்பு தன் பஞ்சகல்யாணியின் மீதமர்ந்து, சூர்யோதயத்துக்குள் திருச்சி சேர்ந்தான். அவ்வளவு தான் தாமதம். தஞ்சை ஸ்தானீகனை வரவழைத்தான். காசுக் கடைக்காரனின் விலாசத்தைக்

கூறிப் பூவராகனைக் கொடுத்துக் கணையாழியை வரவழைக்குமாறு கூறினன். தஞ்சை வேந்தனும் ஸ்தானீகனும் விஷயம் அறிந்து திடுக்கிட்டனர், வியப்பும் கொண்டனர்.

அந்நாளில் அரியலூர் ஜமீன்தார் அல்லது பாளையக்காரர் மதுரை நாயக்க மன்னவருக்கு உட்பட்டவர். அவரிடம் அருமையான கரியொன்று, பரியொன்று, ஒட்டை யொன்று, பட்டாக் கத்தியொன்று நான்கும் இருந்தன. அவை விலை மதிக்க முடியாதவை. அந்நான்கின் மீதும் மதுரை மன்னவர் மோகங் கொண்டனர். ஜமீன்தார் அஃதறிந்தும் மௌனஞ் சாதித்தார். படைவலி கொண்டு பிடுங்கிக் கொள்ளப் பார்த்திபர் விரும்பவில்லை.

ரங்ககிருஷ்ணன் அது அறிந்தான். மனமொப்பி ஜமீன்தார் கொடுக்கும் வகை யாது என்று ஆராய்ந்தான். நாட்கள் சில சென்றன. ஒருநாள் பகல் பத்து நாழிகை இருக்கும். ஜமீன்தாரின் மாளிகை வாயில் சேர்ந்தான் ரங்ககிருஷ்ணன். அப்போது அவனுக்குத் துணை அவனது பரிமா ஒன்றுதான். மாளிகையின் புறத் திண்ணையிலே அப் பார்த்திபன் குந்திக் கொண்டான்.

மாளிகையின் காவலாளர் அவனை எற இறங்கப் பார்த்தனர். இன்னனெனக் கண்டு கொள்ள முடியவில்லை. தோற்றமோ கம்பீரமாக இருந்தது. யாரென்று கேட்கவும் துணிவு பிறக்கவில்லை. பார்த்தான் ரங்ககிருஷ்ணன். "மதுரை மன்னவன் வந்திருப்பதாக ஜமீன்தாரிடம் சொல்லுக" என்றான். காவலரும் அங்ஙனமே சென்று உரைத்தனர். அப்போது ஜமீன்தார் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்.

"திடீரென வேந்தன் வந்தனனே, என்னமோ, ஏதோ? புதிய வேந்தன் ஆயிற்றே. காளைப் பருவமும் வாய்ந்தவனே" என்று ஜமீன்தாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆண்டவனை வேண்டிக் கொண்ட வண்ணம், குழந்தை குட்டிகளுடன் வந்து, மன்னவனை வணங்கினர். "முன்னதாகவே தெரிவித்தால், ராஜோபசாரமாக வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்குமே. அடியேனால் ஆகவேண்டியது என்ன! சொன்னபடி நடக்கக் காத்திருக்கிறேன். குலதெய்வத்தின் மீது ஆணை" என்றார்.

அந்நான்கும் வேண்டும் என்றான் ரங்ககிருஷ்ணன். சீட்டனுப்பியிருந்தால், சமுகத்தில் கொணர்ந்து சேர்த்திருப்பேனே என்றார் ஜமீன்தார். மறுதினம் திருச்சியிலிருந்து ஏவலாளர் பலர் வந்து சேர்ந்தனர். நான்கையும் இட்டுச் செல்ல ஏற்பாடுகள் ஆயின. யானையோ அரியலூரை விட்டகல மறுத்தது; அண்டினோர்மீது சீறியது. கைதேர்ந்த பாகரும் கரியை நெருங்க அஞ்சினர். கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போவதா என்று ரங்ககிருஷ்ணன் நினைத்தான்.

முடிவில் அவனே அக்குஞ்சரத்தை அணுகினன், தட்டிக் கொடுத்தான். அப்போது அது சிணுங்கியது. மாவுத்தர் அனைவரும் மருண்டு ஓடினர். ரங்ககிருஷ்ணன் சிறிதும் மருளவில்லை. தன் பஞ்சகல்யாணி மீதமர்ந்த வண்ணம், யானையின் மீது தாவி ஏறினன். பாசக் கயிற்றில் தன் இரு கால்களையும் செருகிக் கொண்டு, அங்குசத்

தைக் கைதனில் கொண்டு, மத்த கத்தில் குத்துவதுபோல் போக்குக் காட்டினான்.

இளைஞனது தோற்றத்தையும், தாவி அமர்ந்த சமர்த்தையுங் கண்டது குஞ்சரம். வாலிப மாவுத்தன் வீற்றிருக்கும் பான்மையையும் பார்த்தது. இடக்குச் செய்வதில் பயனில்லை யென்று உணர்ந்து கொண்டது. ரங்க கிருஷ்ணன் ஓட்டிய வண்ணம் நடக்கத் தலைப்பட்டது. பஞ்ச கல்யாணியோ யானையின் பாரிசமாக, உயிர்த் தோழனே போல், ரங்ககிருஷ்ணனைப் பார்த்த வண்ணம் நடக்கலாயிற்று.

திருச்சி சேரும் வரையில் அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டவர்கள் போல் பாகர் பலரும் நடந்து வந்தனர். திருச்சி சேர்ந்த பின்னரும் ரங்ககிருஷ்ணனே யானையைப் பழக்கி வர நேர்ந்தது. "இப் பாலன் பாகர் தொழில் எங்கே பழகினான்? அத்தொழிலில் பழுத்து நரைத்த நம்மை யெல்லாம் வென்று விட்டனனே" என்று பாகர் அனைவரும் மெச்சினர். மதயானையை வழிக்குக் கொணர்ந்த பாலன், நாயக்க வரசையும் நன்கு நடத்துவான் என்றும் பேசிக் கொண்டனர்.

ஆதிகால வேந்தர் மாறுவேஷத்தில் நகர்சோதனை வருவர்; மக்களின் மனப்போக்கை மதித்தறிவர்; உள்ள நிலையை உணர்வர் என்பர் பெரியோர். அங்ஙனம் நகர்சோதனை வருவதில் ரங்ககிருஷ்ணனுக்கு ஆவல் அதிகம். ஏழை எளியவரென்று இலேசாக நினையான். எல்லாரையும் சோதர சோதரிகளென்றே எண்ணுவான்.

நாயக்கர் காலத்திலே திருநெல்வேலிச் சீமைக்கு ராஜப்பிரதிநிதியாக இருந்தவன் திருவேங்கட நாத ஐயன். இவன் படாடோபக்காரன்; டாம்பீகன். தினம் திருநெல்வேலி நகரிலே இரவில் பிரமாதமாகப் பவனி வருவான். நாளொன்றுக்கு ஐந்நூறு வராகன் பவனிச் செலவு. அங்ஙனம் காசைக் கரியாக்குகிறான் என்று ரங்ககிருஷ்ணனுக்குத் தகவல் எட்டியது. நேரில் சென்று பார்த்தறியுமுன், பிரதிநிதியை முகாந்தரம் கேட்க அவன் விரும்பவில்லை.

புறப்பட்டான் ஒருநாள் அவ்வாலிபன். ஏறிய குதிரையொன்றே துணை. ஐந்தாறு காதம் ஓயாது சவாரி போனான். ராஜபாளையத்தை நெருங்கினான். களைப்பு மேலிட்டுவிட்டது. பசி நோயும் வந்து கூடிக் கொண்டது. ஒரு மரத்தடியில் தங்கினான். மகனுக்குச் சோறு எடுத்துச் செல்லும் மறவர் குலக் கிழவி யொருத்தியும் அம்மரத்தடியில் சேர்ந்தாள். இளைஞனின் முகத்தைப் பார்த்தாள். "பசிக் களைப்பா?" என்று கேட்டாள். "கூழ் குடிக்கமாட்டாய் நீ; பசுவின் மோர் இருக்கிறது, குடித்துக் களை தீரப்பா" என்றாள்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பதில்லை. கிழவியின் அன்புரை கண்டு சொக்கிப் போனான் ரங்ககிருஷ்ணன். ஏழைகளின் உணவையும் ருசிபார்க்க விரும்பினான். "மோரை விட்டுக் கலக்கிக் கொஞ்சம் கூழ் கொடு" என்றான். கிழவியும் பரிந்தளித்தாள், அப்பழங் கூழை மோர் கலந்து. வயிறார வாங்கிப் பருகினான் அவ்வாலிப வேந்தன். பசிப் பிணி தீர்ந்ததும், "பாட்டீ! போய் வருகிறேன்" என்று விரைந்தான். கிழவியின் ஊரையும் பெயரையும் கேட்டறிந்து கொள்ள அவன் தவறவில்லை.

மதுரை நாயக்க மன்னவர் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அடிக்கடி செல்வது வழக்கம். அதற்காகக் காத தூரத்துக்கு ஒரு மாளிகை கட்டியிருந்தனர். அம் மாளிகையில் தங்கி, வேறொரு பரிமீதேறி விரைதல் அவ்வேந்தரின் ஏற்பாடு. அத்தகைய மாளிகையொன்றினைக் குறுகினான் ரங்ககிருஷ்ணன். மாளிகையின் முகப்பில் சற்றே தங்கவும் நினைத்தான்.

பார்த்தனர் அம் மாளிகையின் காவலாளர். "யாரடா நீ, இங்கே குதிரை கட்டுகிறாய்?" என்று அதட்டினர். வழிப்போக்கன், "அப்பா! நிரம்பக் களைப்பு. சற்றே ஆறிச் செல்ல உத்தேசம்" என்றான் ரங்ககிருஷ்ணன். "மன்னவன் வந்து தங்குமிடம் இது. மற்றையோர் தங்க ஒண்ணாது" என்றனர் பணியாளர். "மற்றையோர் இருந்தால்தானே மன்னவன் கோபிப்பான்" என்றான் இளவரசன். "வம்பும் தும்பும் பேசினால் நெட்டித்தள்ள நேரும்" என்றனர் அக்காவலர்.

"சுக்கிரீவ ஆக்ஞையாக இருக்கிறதே. மதுரை நாயக்க மன்னவரின் ஆணையா இது? உங்கள் இஷ்டம். கடுகி வழி வந்தேன். என் குதிரையும் களைத்துவிட்டது. அசுவம் சற்றே இளைப்பாறட்டும், புறப்பட்டு விடுகிறேன். கோபம் வேண்டாம்" என்று கூறினான் ரங்ககிருஷ்ணன். "நயவுரை எல்லாம் பயன்படாது. நீயும் உன் குதிரையும் உடனே இங்கு விட்டு அகலவேண்டும்" என்று அக்காவலர் கடுகடுத்தனர். அனைத்தையும் மலர்ந்த மனத்துடன் கேட்டு நின்றான் அக்காளை.

இதற்குள் திருநெல்வேலிச் சீமையின் ராஜப் பிரதிநிதி, திருவேங்கடநாத ஐயன் அங்கு வந்தான்; அரசனைக் கண்டு சாஷ்டாங்க தண்டனிட்டான். "மன்னவனை அவமதித்தோமே; இன்றோடு வாழ்வு போய்விடும், உயிருக்கும் உலைதான்" என்று அக்காவலாளர் குலை நடுங்கி நின்றனர். அன்னவரின் அகத்தழகை முகத்தில் கண்டான் ரங்ககிருஷ்ணன். "அஞ்ச வேண்டாம், கடமையைச் செய்தீர்கள். மெத்த சந்தோஷம்" என்று கூறிப் பரிசளித்தான் அப்பணியாளருக்கு.

பூசுரர் என்றால் ரங்ககிருஷ்ணனுக்குப் பரம பயபக்தி விசுவாசம். அன்னவருக்கு அவன் அமைத்துத் தந்த அக்கிரகாரங்கள் பல; கட்டிவைத்த அன்ன சத்திரங்களும் பல; அளித்த மானியங்களும் பல. ஆயினும் நீதி வழங்குவதில் வேதியர் என்றும் பிறர் என்றும் பாரான். நடுக்கண்ட நியாயமே வழங்கு

## வருமானவரித் தொல்லை!

இங்கிலாந்தைச் சேர்ந்த லிவர்ப்பூல் நகரில், இரண்டுபேர் மீது சமீபத்தில் ஒரு வழக்கு வந்தது. அவர்கள் ஒரு கடைக்குள் கன்னம் வைத்து நுழைந்துவிட்டார்களாம்.

கோர்ட்டிலே இருவரில் ஒருவன் சொன்னான்: "நான் என் சிநேகிதனுக்கு உதவி புரிவதற்காகத்தான் வந்தேன். உடனே வருமான வரி கட்டும்படி, சர்க்காரிடமிருந்து, அவனுக்கு ஒரு சம்மன் வந்திருக்கிறது."

மற்றவன் சொன்னான்: "அவன் சொல்வது வாஸ்தவம். நான் பத்து நாளைக்குள் வருமான வரி கட்டியாகவேண்டும். அதற்குத் தேவையான பணம் சம்பாதிக்க, எனக்குத் துணை புரியவே அவன் வந்தான்."

வான். உதாரணமொன்று தருவோம்.

ஆலயங் கட்ட வேண்டுமென்று, அந்தணரில் சிலர் ஒரு கிறிஸ்தவனது நிலத்தை எடுத்துக் கொண்டனர். அக்கிறிஸ்தவன் ரங்ககிருஷ்ணனைக் குறுகி நீதி வேண்டினன். இரு திறத்தாரையும் தருவித்து, விஷயத்தை உணர்ந்தான் அவ்வேந்தன். வேதியருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிப்பான் நிருபன் என்று கிறிஸ்தவன் எண்ணி நின்றான். நம்மைக் கைவிடான் நரேந்திரன் என்று மற்றையவரும் நம்பி நின்றனர். யாது தீர்ப்பளித்தான் ரங்ககிருஷ்ணன்?

"நிலத்தை ஆலயத்துக்காக அந்தணர் கொண்டது உண்மையே. ஆயினும் பிறர் நிலத்தைக் கொண்டது குற்றம். விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தாய் விட்டதே என்று வாதிக்கின்றனர். நியாயம் கெடுவதினும், விக்கிரகத்தை ஆற்றில் எறிந்துவிடுவதே மேல்!"

அவ்விதமெல்லாம் நேர்மையும் நெறியும் வீரமும் தீரமும் வாய்ந்தவன் ரங்ககிருஷ்ணன். கட்டிளங் காளை மதோன்மத்தனாக நடப்பான் என்றே பலரும் அஞ்சினர். அவனோ பண்பட்ட வேந்தனைப் போல் விளங்கினான். மக்கள் மெச்ச, மனச் சாட்சியை மதித்து வாழ்ந்தான். உத்தமர் ஒரு சிறிது காலமே உலகில் உலவுவர் என்பது உண்மையல்லவா? ஆறுண்டானதும் அவனுக்கு வைசூரி கண்டது. அத்துடன் அவன் உலக வாழ்வும் முடிந்தது.

அது சமயம் அவன் மனைவி—அருந்ததி போன்றவள் – உடன் கட்டையேற முயன்றாள். பூரண கருப்பவதியாக இருந்தமையால், கூடாதென்று பலரும் பேசினர். அரச வமிசம் நசிக்கக் கூடாதெனவும் வேண்டிக் கொண்டனர். கருவுயிர்க்கும் வரையில் அம்மாது உயிர் தாங்கி நின்றாள்! அத்தகைய அரசனும் அரசியும் உதித்தல் அருமை அருமை என்று அனைவரும் போற்றினர்.

✲

## எப்படி ஆரம்பிப்பது?

சிறு கதை எழுதுவதில் கீர்த்தி பெற்ற ஓர் ஆசிரியர் என்னிடம் இவ்வாறு சொன்னார்:

"ஒரு மனிதன், டிராமிலிருந்து இறங்குகிறான்; ஓர் ஆபீசுக்குள் நுழைகிறான்; 'விட்டு' க்காகக் காத்திருக்கிறான்; மாடிக்குப் போகிறான்; ஓர் அறைக்குள் நுழைகிறான்; பின்பு திடீரென்று ஓட்டம் பிடிக்கிறான்; ஜன்னல் வழியாய் வெளியே குதிக்கிறான்—இவ்வாறெல்லாம் எழுதுவதாய் வைத்துக் கொள்வோம். அந்த மனிதன், ஜன்னல் வழியாய் வெளியே குதிக்கும் கட்டம் வரும்வரையில், வாசகருக்குச் சுவாரஸ்யம் ஏற்படுவதில்லை. சுவாரஸ்யம் ஏற்படாததால், அந்த மனிதன் குதிக்கிற இடம் வரும்வரையில் படிக்காமல், இடையிலேயே வாசகர் நிறுத்திவிடுகிறார். கதை பயனில்லாமல் போகிறது. இப்படியில்லாமல், கதையின் முதல் வாக்கியத்திலேயே, அந்த மனிதன் ஆபீஸ் ஜன்னல் வழியாக உள்ளே நுழைவதாய் வைத்துக் கொள்வோம். பின்னால் அந்த மனிதன் செய்யும் அத்தனை காரியத்திலும் வாசகருக்குச் சுவாரஸ்யம் உண்டாகிறது."

—பிரெட் ஸி. கெல்லி

# குருவின் உபதேசம்



சி. தேசிக விநாயகம் பிள்ளை

வாக் கிறந்த பொருள் — நமது
மனதிற் கெட்டாப் பொருள்;
யார்க்கு மப்பொருளை — அளக்க
இயல மாட்டா தப்பா.

ஒரு திரை நீங்கின் — மேலும்
ஒரு திரை வீழும்;
ஒரு கணப் பொழுதும் — திரை தான்
ஒழிய மாட்டா தப்பா.

ஆதி யெது வென்று — வினவும்
அவனோ ரறி விலான்;
ஆதி யிது வென்று — கூறும்
அவனு மோர் மூடன்.

மண்ணில் வாழ்வதுண்டு — பின்னால்
மரண மாவ துண்டு;
நண்ணும் இன்ப துன்பம் — எந்த
நாளும் உண் டப்பா.

நன்மை விதைத் திடில் — என்றும்
நன்மையே விளையும்;
தின்மை விதைத் திடில் — அதுபோல்
தின்மையே விளையும்.

கரும்பில் என்றுமே — வேம்பின்
கனி கனிவ தில்லை;
விரும்பிடா வேம்பில் — கரும்பும்
விளைவ தென்று மில்லை.

பொய் களைந்திடுவோம் — மெய்யைப்
போற்றி நின்றிடுவோம்;
செய் கடனை நிதம் — உலகில்
செய்து வாழ்ந் திடுவோம்.

# சமர்ப்பணம்

**லா. ச. ராமாமிருதம்**

நாழி கழிவதே தெரியவில்லை. சாத்தியிருந்த ஜன்னல் கதவை, யாரோ விரல் கணுவால் தட்டும்பொழுதுதான் விழித்துக் கொண்டேன்.

ஜன்னல் கதவைத் திறந்தேன். வெளியில் இருள் இறங்க ஆரம்பித்து விட்டது. ஒன்றிரண்டு நக்ஷத்திரங்கள் மின்னின. ஜன்னலின் கீழ், ஓர் உருவம் கைகளால் உடம்பை இறுகக் கட்டிக் கொண்டு நின்றது. கார்த்திகை மாதம். நாங்கள் இருந்த இடமோ மலைப்பிரதேசம். குளிரால் உடல் 'வெட வெட' என்று நடுங்கியது.

"யார்? என்ன வேணும்?"

"வயிற்றைப் பசிக்கிறது—"

"இதென்ன, பிச்சையெடுக்கும் வேளை கூட இல்லையே! சந்தி கூடும் நேரத்தில்—"

"பசிக்கு வேளை பொழுதெல்லாம் உண்டா? சரி; குளிருக்கு இடமாவது கொடு—" எனக்கும் கொஞ்சம் பரிதாபமாயிருந்தது. வாசற் கதவைத் திறந்து அவனை உள்ளே விட்டேன். அவன் சர்வ சாதாரணமாய் உள்ளே வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். 'ரேழியோடு நில்' என்று திட்டம் பண்ண நாவெழவில்லை. பேசாமல் விளக்கையேற்றித் திரியைச் சரியாய்த் தூண்டினேன்.

கிழிந்த ஆடை. சிக்கேறிய பரட்டை மயிர். க்ஷவரஞ் செய்யாது, ஒழுங்காய் வளராத முரட்டுத் தாடி. குளிக்காது அழுக்கும் நாற்றமுமேறிய உடல். இருந்தும் பிச்சைக்காரனல்ல.

'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, கோட்டெல்லாம் தேடி ஒரு துண்டு சிகரெட்டைக் கண்டுபிடித்து விளக்கில் பற்றவைத்து, பலமாய் இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு, மறுபடியும் 'உஸ்' என்று பெருமூச்செறிந்தான்.

"அப்பா, பொறுத்துக் கொள்—குளிர்க் கஷ்டம் உனக்கென்ன தெரியப்போகிறது? தவிர, இதை ஒரு தரம் இழுத்தால், பசி வேகம் தணியும்—இதென்ன மேஜையெல்லாம் ஒரே கூளம்?"

"இதெல்லாம் அச்சிலிருந்து பிழை திருத்த வந்திருக்கின்றன—"

"ஹூம், என்னது?"

"ஒரு கதைத் திரட்டு, வெளியிடப் போகிறேன்—"

"அப்படிச் சொல்லு—நானும் அதேதான் சந்தேகித்தேன்—உனக்கு என்ன வயது?—"

"இருபத்திரண்டு—"

எங்கிருந்தோ ஒரு பைத்தியக்காரன் வந்தான்? யாருக்குத் தன் கதைகளைச் சமர்ப்பணம் செய்வது என்று தத்தளித்துக் கொண்டிருக்கிற ஆசிரியனை, அவன் என்ன திணறல் திணறும்படி செய்கிறான்! அவன் பிச்சைக்காரனா? பரதேசியா? பைத்தியமா? அப்படியானால், அவன் பேச்சுக்கு அவ்வளவு அர்த்தபுஷ்டி ஏது? ஆசிரியர் பிரச்னையை அவன் தீர்க்கவில்லை. ஆயினும், அது தீர்ந்துவிடுகிறது.

"சரி சரி—வயதுக் கோளாறு தான், கவலைப்படாதே—இது ஒரு வியாதி—ஒன்று 20, 25 வயதில் அல்லது 50, 55 வயதுக்குமேல் பிடிக்கும்—அப்புறம், தானே விட்டுவிடும்—"

"நீர் அப்படிப் புரளி பண்ணும் படி நான் அவ்வளவு மோசமில்லை. என் கதைகளும் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன—வெறுமையே ஒரு 'கப்' காப்பி குடித்துவிட்டு, அந்த வெறியில் எழுதுபவன் நானல்ல—வாழ்க்கையில்—"

"ஐயையோ, போதுமே—பிரசங்கத்துக்கு ஆரம்பித்து விட்டாயே! இதற்குக் குளிரே தேவலை யென்று நினைத்து நான் வெளியே ஓடும்படி என்னை விரட்டி யடித்து விடாதே! சரி என்ன மாதிரி எழுதி யிருக்கிறாய்? —'வாழ்க்கைப் புயல்'—'துக்கக் கடல்' 'விதியின் விளையாட்டு'—'நினைவுச் சுழல்'—'உணர்ச்சி வெள்ளம்'—ஹா—ஹா—இந்தத் தினுசிலா? கதைகளில் கொள்ளை யடித்திருக்கிறாயா? கொலை கிலை, துப்பாக்கிப் பிரயோகம், டுப்டிப் டுமீல்..."

"இதோ பாரும். என்னை வம்புக் கிழுக்காதேயும். டுப் டிப் டுமீல் ஒன்றுமில்லை. கொலை!—ஒன்றிரண்டு தற்கொலைகள் பண்ணி யிருக்கிறேன்—"

"அதான் சரி, தற்கொலைதான் சரி. வேறு கொலை செய்தால், துப்புத் துலக்கியாக வேண்டும். துப்புத் துலக்க, சாமர்த்தியம் வேண்டும். அப்படியே துப்புத் துலக்கினாலும், பூ! கேவலம் நவீன மாகிவிடும். ஆனால், தற்கொலைதான் கலை.வாழ்க்கையில்... இரு, உன் பாஷையிலேயே கொஞ்சம் பேசிப் பார்க்கிறேன். நம்மவர்க்கு வாழ்க்கையில் ஏதேனும் பிரச்னை யேற்பட்டால், தற்கொலை பண்ணிக் கொள்ளத் தெரியுமே யொழிய, அதைச் சமாளிக்கத் தெரியாது. நடு வழியில் குட்டிச் சுவர் ஒன்று முளைத்தால் அதைத் தாண்ட வழி தேட மாட்டோம். முட்டிக் கொண்டு மண்டையை உடைத்துத்தான் கொள்வோம். அதுதான் கலை. சரி, ஏதாவது வேடிக்கை, தமாஷ்? இந்த நீதியிலே ஏதாவது—"

"இல்லை. எனக்குச் சிரிக்கச் சிரிக்க எழுத வரவில்லை. நாம் சிரிக்கவா பிறந்தோம். மேலும் வாழ்கையில்—"



"போரும் போரும், பல்லவி ஆரம்பித்து விட்டாயே! ஆமாண்டாப்பா. நாம் சிரிக்கவா பிறந்தோம், சிரிக்கத் தெரிந்தால் உருப்பட்டு விடுவோமே. ஒரு தம்படி இருட்டில் கெட்டுப் போனால், ஓரணா மண்ணெண்ணெய் செலவழித்துக் கொண்டு தேடுவோமே. நாம்

எங்கே சிரிக்கப்போகிறோம்? ஒரு வேளை எப்படிச் சிரிப்பதென்று தான் அவ்வளவு கவலையாய் யோசனை பண்ணிக் கொண்டிருந்தாயோ?''

"இல்லை, புத்தகம் தயாராகி விட்டது. இதை யாருக்குச் சமர்ப்பணம் செய்வதென்று—''

"சமர்ப்பணமா? இப்பொழுது ஒரு சந்தர்ப்பனை யிருந்தால் நன்றாயிருக்கும். யாருக்குப் பண்ணப் போகிறாய்?''

"அதுதான் தெரியவில்லை. யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறேன்—''

"உம், பெண்டாட்டி செத்துப் போயிருந்தால், அவளுக்குச் செய்யலாம்—''

"அதென்ன, பெண்டாட்டி மேல் அவ்வளவு அக்கறை?''

"என் இல்லை? அந்த மட்டுக்கும் நம்மை முந்திக் கொண்டதற்கு—'என் உள்ளத்தின் உள் சுடராயிருந்த வாழ்க்கைத் துணைவிக்கு.' என், பிறந்த வீட்டிலிருந்து கொஞ்சம் சொத்தையும் கொண்டு வந்திருந்து, போகிற போக்கில் திண்டாடட்டுமே என்று ஒரு குழந்தையை நம் தலையில் கட்டாமல் போய்விட்டாளானால், அவளைவிட உத்தமியும் உண்டோ? என்ன சொல்கிறாய்?''

"இன்னும் கலியாணத்துக்கே வழியில்லை; அதற்குள் கட்டினவளைச் சாகடித்து விட்டீரே, ஐயா!''

"அட ராமா, கலியாணங்கூட ஆகாமலேயா சம்சாரத்தின் கரையைக் கண்டுவிட்டவன் போல் கதை யெழுத ஆரம்பித்து விட்டாய்?''

"என் அப்பா அம்மா இல்லையா?''

"அடடா! யாருக்குச் சமர்ப்பித்தாலும் சமர்ப்பிக்கலாம் அவர்களுக்கு ஆகாதப்பா. தங்கள் பிரியத்தாலேயே நம்மைக் கொன்றுவிடும் புண்ணியாத்மாக்கள் அல்லவா அவர்கள்? அவர்களுடைய அன்பிலும் தியாகத்திலும் உள்ள முரட்டுத்தனம், மிருகத்துக்குக் கூடக் கிடையாது. ஒருநாளும் நம்மை நம் வழி போக விடாமல், அவர்களுடைய பாசமெனும் கயிற்றாலேயே நம் கழுத்தைச் சுருக்கி விடுவார்களே! அட்டையாய் ஒட்டிக்கொண்டு, நம்மை உள்ளூரச் செல்லரித்து, நம் திடசித்தத்தைக் குலைக்கும் அவர்களுடைய சுயகாரியப் பிரியத்தைவிட, பகையாளியின் பகிரங்க வைரமே மேல். இதோ பார், நான் சொல்வதைக் கேள். ஒருத்தருக்குமே சமர்ப்பிக்க வேண்டாம்—''

"என்?''

அவன் எழுந்து, முதுகின் பின் கையைக் கட்டிக்கொண்டு, தரை

### பாதிரி கவலை

பல வருஷங்களுக்கு முன்னே ஒரு பாதிரியாருக்கு, உலகத்தைப் பார்த்துப் பெருங் கவலை உண்டாயிற்றாம். "ஐயோ, பகவானே! இந்தப் பாழாய்ப் போன உலகம் இப்படி நாசமாய்ப் போய்க் கொண்டிருக்கிறதே. விமோசனத்துக்கு வழியே காணோமே!'' என்று, ஓர் இரவு பூராவும் தூக்கமில்லாமல் உட்கார்ந்து, அவர் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாராம்.

நடு ராத்திரியில் கடவுள் அவருக்குப் பிரத்யட்சமாகி, இவ்வாறு சொன்னாராம்: "பக்தா! போதும், படுக்கப் போ. மீதி இரவை நான் விழித்து, உட்கார்ந்து, கவலைப் பட்டுக் கொள்கிறேன்.''

யைப் பார்த்த வண்ணம் முன்னும் பின்னும் உலாவ ஆரம்பித்தான்.

"என், எதற்காக யாருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்? நம்மிலும் மேலானவராய், நமக்கு வழி காட்டியாய் நிற்பவருக்குச் செய்ய வேண்டும். அம்மாதிரி யார் இருக்கிறார்கள்? எவனுக்கு, மற்றவன் உருப்பட வேண்டுமென்று அக்கறையிருக்கிறது? அவனவனுக்கு அவனவன் காரியம்தான். நமக்குப் புத்தி சொல்பவர்கள், நாம் சுகப்பட வேண்டுமென்று புத்தி சொல்கிறார்கள்? இல்லை, ஒரு நாளும் இல்லை. அவர்கள் சொல்வதை நாம் கேட்க வேண்டுமென்றுதான் அவர்களுக்கு ஆவல். 'யார் சொன்ன வார்த்தையையும் நீ கேட்காதே, நான் சொன்ன வார்த்தையை நீ கேளு' என்பதுதான் அவர்கள் தத்துவம். தவிர, எதற்கு வழி காட்டுகிறார்கள்? வழி காட்ட என்ன இருக்கிறது? கடைசியில் எல்லாம் ஒன்றுமில்லை என்றுதான் முடிகிறது. 'காக்கா ஊஷ். இஸ்ராம பள்ளியாட்டம். குளோஸ். சர்வம் பூஜ்ய மயம். ஆகையால் நமக்கு நாம் தான் ஒசத்தி. நமக்கு நாம்தான் சமர்ப்பணம்.' என்ன, நான் சொல்வது ஏதாவது புரிகிறதா? அல்லது ஏதோ பிதற்றலா யிருக்கிறதா?"

உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்தேன். "ஏதோ ஒரு தினுசா யிருக்கிறது." கொஞ்ச நேரம் ஜன்னலண்டை சும்மா அப்படியே நின்று கொண்டிருந்தான். திடுக்கென்று திரும்பி மேஜைமேல் எரிந்து கொண்டிருந்த விளக்கைப் 'பூ' என்று ஊதி அணைத்து விட்டான். அறையில் இருள் சூழ்ந்தது. "இங்கே வா" என்று அவசர அவசரமாய்க் கூப்பிட்டான். எனக்கு அடி வயிறு பகீரென்றது.

"இதன்ன அவஸ்தை! இருப்பதைப் பிடுங்கிக் கொண்டால் கொள்ளட்டும், அடிக்காமல் இருந்தால் போதும்!" என்று மனதில் பட்டது.

"அதோ பார்!"

பார்த்தேன். ஒரு நட்சத்திரம் விழுந்து கொண்டிருந்தது.

விழுந்து கொண்டி—ருந்—த—து என்று எழுதத்தான் இந்நேரம்.

என்னதான் படித்து, மூட நம்பிக்கைகளை விட்டு விட்டோம் என்று மீசையை முறுக்கிக் கொண்டு மார்பைத் தட்டிக் கொண்டாலும், நட்சத்திரம் விழுவதில் மாத்திரம் ஒரு தனிச்சங்கடமிருக்கிறது. (என், எல்லாவற்றிற்கும் அப்படித்தான். மனத்தின் அச்சானியம் எங்கே விடுகிறது?)

வான மண்டலத்தில் கூடிய அத்தனை மீன் கூட்டங்களினின்றும் கழன்று, தன் செயலற்று, ஏதோ பின் வரும் பெரு விபத்தின் முன்னெச்சரிக்கை போன்று அது விழும் போது...!

என் கண்கள் என்னையறியாமல் பச்சை மரத்தை நாடின. மனத்தின் துணுக்கால், கால்கள் ஓர் 'இம்மி' பின்னடைந்தன.

"என், உண்மையைக் கண்டால் பயமா யிருக்கிறதா? பயப்படாதே, அது விழுந்த இடம் ஒன்றும் பற்றிக் கொள்ளாது. எந்த மஹோன்னதத்தி னின்றும் அது விழுந்து மண்ணாய்ப் போகிறது பார்! என்னதான் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தாலும் எதற்கும் உபயோகம் இல்லை. வாழ்க்

கையின் முழு வியர்த்தத்திற்கும் அது ஓர் அத்தாட்சி. அதற்குச் சமர்ப்பணம் பண்ணுகிருயா ?''

ஓர் அரை நிமிஷம் நான் பேச வில்லை. விளக்கை ஏற்றிக்கொண்டிருந்தேன். எனக்குச் சற்றுக் கோபமும் அலுப்பாயும் தானிருந்தது. வார்த்தையும் கொஞ்சம் காரமாய்த்தான் வந்தது.

"உம்மைப் போல் அஸ்துப் போட, இன்னும் நாலு பேர் இருந்தால் போதும்; உலகம் விடிந்தாற் போல்தான். என்னை விட வயதிலும் அனுபவத்திலும் பெரியவரா யிருக்கிறீர். படிப்பாளியாயும் தோன்றுகிறது. நீங்களெல்லாம் என்னைப் போன்றவரை முதுகைத் தட்டிக் கொடுத்துத் தைரியம் சொல்வதை விட்டு, விடியா மூஞ்சிமாதிரி.......''

நான் முற்றிலும் பேசி முடிக்க வில்லை. அவன் திடீரென்று, பைத்தியம்போல், அவுட்டுச் சிரிப்பாய்க் கல கலவென்று சிரித்து விட்டு, 'தூ' என்று ஒரு வாய் எச்சிலை எதிர்ச் சுவரின்மேல் துப்பிவிட்டு, கதவைத் தடாலென்று சாத்திக் கொண்டு, கொட்டும் பனியில் வெளியில் சென்றுவிட்டான்.

நான் அப்படியே அயர்ந்து விட்டேன். இவன் பைத்திய மானுலும், இவ்வளவு பைத்தியம் என்று நான் நினைக்கவில்லை. கொஞ்சநேரம் நினைவுகூட ஓட வில்லை. உலகத்தை ருசிபார்த்து, சப்பென்று கண்டு, துப்பிவிட்டது போன்ற அவனெச்சில், சுவரில் நீராகி வழிவதைச் சற்று நேரம் நோக்கிக் கொண்டிருந்தேன். என் முகத்தில் ஏகமாய் அசடு வழிந்திருக்கு மென்று நினைக்கிறேன்.

அவன் போய் விட்டான். மனம்போனவாறு, கால் சென்ற திசையில், வந்ததுபோலவே, போய்விட்டான். ஆனல், என் கதைத் திரட்டு இருக்கிறதே; அதற்குச் சமர்ப்பணம் எப்படி? வெகுநேரம் யோசித்தேன். கடைசியிலே, அத்தனை யோசனையையும் உதறித் தள்ளி, வெகு எளிதாய் அது தயாராகிவிட்டது. அது இதுதான்: 'சமர்ப்பணம்: என்ரு வந்த அந்தப் பைத்தியத்துக்கு!'

✲

## சமாதான சமிக்ஞை

அமெரிக்காவில் ஒரு கனவானும் அவருடைய மனைவியும் வீட்டிலே சண்டை யென்பதே யில்லாமல், வெகு சந்தோஷமாய் வாழ்கிருர்களாம். இதன் ரகஸ்யமென்ன என்று கேட்டால், அவர்கள் செய்துகொண்டுள்ள ஓர் ஏற்பாடு தானம். புருஷன் நாள் முழுவதும் கச்சேரியில் வேலை செய்த களைப்பால், வீட்டுக்கு வரும்போது எரிச்சலோடிருந்தால், தமது தொப்பியை வழக்கத்துக்கு மாருக இடது பக்கம் சாய்த்து வைத்துக் கொண்டே வீட்டில் நுழைவார். "சரி; புருஷன் எரிச்சலா யிருக்கிருர். தனுக்காய் நடந்துகொள்ளவேண்டும்'' என்று மனைவி தெரிந்துகொள்வாள். அதேமாதிரி மனைவி மனங்கோணியிருந்தால், தன் தாவணித் தலைப்பை வழக்கத்துக்கு மாருன பக்கத்தில் அணிந்திருப்பாள். அதைக் கண்டு கணவன் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வார். இவ்வாருக, அந்தத் தம்பதிகளுக்குள் சச்சரவே கிடையாது.

# காதலும் காமமும்

ராய. சொ.

**கா**தலுக்கும் காமத்துக்கும் உள்ள வேறு பாட்டைக் காணவேண்டும். இவ் இரண்டு சொற்களேயும் வேறு படுத்தாம லேயே ஒரே பொருள் படப் பண்டு பேராசிரியர்கள் கூட ஆண்டு வந்திருக்கின்றூர். இரண்டையும் பிரித்து ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட பொருள் பட ஆள்தலே பொருத்தமாகத் தோன்றுகிறது. 'காதல்' என்ற சொல் 'பேரன்பு' என்னும் பொருளிலும் 'காமம்' என்னும் சொல் 'பேராசை' என்ற பொருளிலும் ஆளப்படுவதே சிறப்புடைத்து. முழுதும் வேறுபட்ட பொருள் தரும் இவ் இரண்டு சொற்களேயும் கலந்து கையாண்டு மயக்கத்தை உண்டாக்காமல், இனி வரையறுத்து ஆள்வதில் தீதொன்று மில்லே.

'காதல்' கொள்ளத்தக்க இடத்தும், 'காமம்' தள்ளத்தக்க இடத்தும் கையாளப்படல் வேண்டும். முன்னேர் வனே இச் சொற்களே வேற்றுமைப்படுத்தி ஆண்டா ரல்லர். "காதல், கவருடல், கள்ளுண்டல், பொய் மொழிதல்" என்று, காதலே நீக்கத் தக்க பொருள்களோடு சேர்த்து எண்ணி விட்டார் புகழேந்திப் புலவர். "ஏந்து புயத்து இராவணனர் காதலும்" என்று இயம்புகின்றூர் கம்பரும். சீதையின் மீது இராவணன் கொண்ட காம இச்சை இங்குக் காதல் என்று கூறப்படுகிறது கவிச் சக்கரவர்த்தியால். பிறன் மனேவியாகிய சீதையின் வடிவழகை விரும்பி அவள் நலனேச் சுவைக்க எண்ணினன் இராவணன். இது அன்பல்ல; ஆசை! தனக்கு உரிமையல்லாத ஒன்றை அடையப் பேராசைப்பட்டான் இராவணன். காமத்தை இழிந்த பொருளிலும் காதலே உயர்ந்த பொருளிலும் வைத்து எண்ணினல், இராவணன் சீதைமீது காதல் கொள்ள வில்லே; அவன் சீதை மேல் காமம் கொண்டான். "ஏந்து புயத்து இராவணனர் காமமும்" என்று இருக்கலாம். அக்காலத்து இவ்விருசொற்களுள் வேற்றுமை கருதப்படாமையால், இங்கு காதல் பெய்யப் பட்டு விட்டது போலும்!

**'காதல்' உயர்ந்தது; 'காமம்' தாழ்ந்தது—இவ்வாறு வெவ்வேறு பொருள்களிலே இரு சொற்களேயும் இன்று நாம் உபயோகிக்கிரும். ஆனல், முற்கால இலக்கியத்திலே இரண்டு சொற்களும் இரு பொருள்களிலும் வேற்றுமையின்றிப் பிரயோகமாகி யிருக்கின்றன. அதற்காக நாமும் அப்படியே செய்ய வேண்டு மென்ப துண்டா? தேவை யில்லே. புலமை நிறைந்த இக் கட்டுரையாளரே நமக்கு ஆதரவு தரும்போது, நமக்கென்ன?**

**நு**ணுகி நோக்குங்கால் இவ்விரண்டு சொற்களின் வேறுபாட்டை, உள்ளங் கண்டுபிடித்து விடுகிறது. குகனேப் பற்றிக் கம்பர் "கரை காணுக் காதலான்" என்று கூறினர். எல்லேயற்ற அன்பு உடையவன் என்பது இதன் பொருள். "கரைகாணுக்

காமத்தான்'' என்று சொன்னல், நன்ருக இருக்குமா? 'அவன் காமுகன்' என யாரைச் சொல்லு கிரோம்? பிற மாதர் பொற்பை உண்ண நச்சும் பேதையை யல்ல வா? அத்தகையோனை அவன் 'காதலன்' எனச் சொல்லுவ தில்லை இந்நாளில். பழங்கால மரபு வேறு விதமாக இருந்திருக் கிறது.

இராவணன் சீதையின் மீது கொண்ட மோகம் காதல் என்று உரைக்கப் பட்டது. இந்திரன் அகலிகையின் இளநலம் துய்க்கச் செய்த மோசமும் காதலாகக் கழறப்பட்டது. ஆசிரியர் வள்ளு வனர் கூடக் காதலுக்கும் காமத் துக்கும் வேற்றுமை கண்டு வழங்கினரல்லர். பழங்கால இம் மரபை இன்று நாம் குறை சொல்ல வேண்டாம். அக்காலத் துக்கு அது பொருத்தமாக இருந் திருக்குமோ என்னவோ? இவ் விரண்டு சொற்களையும் வேற் றுமை உணர்ச்சியோடு அன்று நோக்கி யிருக்க மாட்டார் போலும்! காதல், காமம் என்ற இரண்டும் மிகவும் மாறுபட்ட நிலையில் உணரப்படும் இந்நாளில், அவ் இரண்டையும் ஒன்றுபடுத் திக் குழப்ப வேண்டுவதில்லை யன்றே? "காமம் வெகுளி மயக் கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்'' என்ற குறளில் கூறப்படுவது போல, இழிந்த பொருளிலேயே காமத்தை நிறுத்திவிடல் வேண் டும்.

காதல் பெரிதும் உயர்வுடைய ஒன்று. காதலைத் தொன்று தொட்டு உயர்த்தி உரைத்திருப்ப தற்குச் சான்று பல உள.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு
உய்ப்பதும்
வேதம்நான்கினும் மெய்ப்பொருள்
ஆவதும்
நாதநாம நமச்சிவாயவே!''

என இறைவனிடத்துக் காதல் கொண்டு, அதாவது பேரன்பு கொண்டு கண்ணீர் விட்டுக் கசிந்து உருகுகின்ருர் திருஞான சம்பந்தர்.

"போதெல்லாம் போதுகொண்டுஉன்
பொன்னடி புனையமாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுஉன்
திருக்குணம் செப்பமாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன் அதுதன்னலே
ஏதிலேன் அரங்கற்குஅல்லேன்
என்செய்வான் தோன்றினேனே"

என்று திருவரங்கனுக்கும் தனக் கும் உள்ள பெருங் காதலின் தொடர்பை வெளியிடுகின்ருர் தொண்டர் அடிப்பொடி ஆழ் வார்.

### கடைசி இட்டலி

ஓர் ஓட்டலில் ஒரு கனவான் இட்டலி கொண்டு வரும்படி, பைய னிடம் சொன்னர். சிறிது நேரத் தில் பையன் அவசர அவசரமாக இட்டலியைக் கொணர்ந்து அவர் முன் வைத்துவிட்டு, "இன்று நான் கொடுக்கும் கடைசி இட்டலி இதுதான்'' என்று சொல்லிக் கொண்டே, வாயிற் பக்கமாக நகர்ந்தான்.

"ஏன்?'' என்று கேட்டார் மேஜை அடியில் உட்கார்ந்திருந்த மானேஜர்.

"ஒன்று மில்லை, அண்ணு!'' என்று சாவதானமாகத் தொடங் கிய பையன், "ஒன்று மில்லை. சமையல் அறை தீப்பற்றி எரி கிறது'' என்ருன்.

M211, N5.. N44·9·4

பெரும் பேரன்பிற்கு உரியார் அனைவரும் காதலராகக் குறிக்கப் பெறுகின்றனர். கணவன் மனைவிக்குக் காதலன் ஆகின்றான்; மனைவி கணவனுக்குக் காதலி ஆகின்றாள்: பெற்றோர்க்குப் பிள்ளைகள் காதலராகின்றனர்; தந்தைக்கு மகள் காதலி யென்றும் தாய்க்கு மகன் காதலன் எனவும் பாராட்டப்படுவதை விபரீதமாகக் கொள்ளுமாறு இல்லை. பெருநட்புடைய இருவர், ஒருவரையொருவர் காதலராகக் கொள்வதில் தவறொன்றும் இலது. தலைவனும் தலைவியும் புனைந்து ஒருவரையொருவர் போற்றும் காதல் சொற்கள் பெரிதும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன.

'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலா'ளான 'கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை' 'தீராக் காதலில் திருமுகம் நோக்கி', கோவலன் கூறிய கட்டுரைகளைச் சிலப்பதிகாரம் செப்பும் அழகு பெருநயம் வாய்ந்தது. வள்ளுவர் தந்த இன்பப் பூங்கொடி, தன் கண்ணுள்ளும் மனத்துள்ளும் வைத்துப் பேணும் நுண்ணிய காதலவர் மிக அருமை யுடையவராகக் காட்சி அளிக்கின்றார்.

'கண்ணுள்ளிற் போகார்
இமைப்பில் பருவரார்
நுண்ணியர் எம் காதலவர்.'

காதலியின் கண்ணைவிட்டு நீங்க மாட்டார்; கண்ணை இமை கொண்டு மூடினல்கூட அதனல் வருத்தப்பட மாட்டார்; அவ்வளவு நுட்பமானவர் காதலர்.

'கண்ணுள்ளார் காதலவராகக்
கண்ணும்
எழுதேம் அரப்பாக்கு அறிந்து'

காதலியின் கண்ணுக்குள்ளேயே எப்பொழுதும் வீற்றிருக்கின்றார் காதலவராதலால், மை எழுதும் சமயம் அவர் மறைந்து விடுவதற்கு அஞ்சிக் கண்ணுக்கு மை கூடத் தீட்ட மறுக்கின்றாள் காதலி.

"நெஞ்சத்தார் காதலவராக வெய்
[துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து."

காதலியின் உள்ளத்திலே இடையறுமல் இருக்கின்றார் காதலராகலான், சூடான பொருள்களை உண்ணப் பயப்படுகின்றாள் காதலி. ஏன்? சூடுள்ளதை உள்ளே தள்ளினல், அங்கே உட்கார்ந்திருக்கிற காதலர் வெந்து விடுவா ரல்லவா?

எவ்வளவு அன்பு பூண்டிருக்கின்றாள் காதலனிடம் காதலி யென்பதை, வள்ளுவனாரின் இச்சித்திரங்கள் காட்டுகின்றன. 'காதல்' என்ற சொல் இக்குறள்களில் உரிய பெருமிதத்தோடு விளங்கித் தோன்றுகின்றன.

"தீராக் காதலன்" எனக் குகனை இராமன் கூறுவதும், "அகன் அமர் காதல் ஐயா" என வீடணனை இராகவன் விளிப்பதும், "உன்மேல் காதலால் உரைத்தேன்" என இந்திரசித்தன் இராவணனைப் பார்த்துச் சொல்லுவதும், இன்ன பிறவும் 'காதல்' ஆண்-பெண் இருபாலார்க்கும் இடையே மட்டும் தோன்றுவதன்று என்பதையும், அன்பு முதிர்ந்த ஒரே பாலாரிடமும் உரிமை பெறுவது என்பதையும் காட்டுகின்றன.

"கோத்று கற்பினய்!
கொழு நன் கைத்தலம்
காதலன் கைத்தலம்
அன்றிக் கன்றிவால்
இம் மூன்றிலொன்று
அங்கை பற்றியே
ஓதநீர் ஆடுதல்
மரபென்று ஓதினர்"

ஆவணக்காப்பகம்
88842

என்ற பரஞ்சோதி முனிவர் செய்யுளில், கொழுநன் என்ற சொல் கணவனையும், காதலன் என்ற சொல் மைந்தனையும் குறித்தல் காண்க! இங்கே, பிறந்த மகன் பெற்ற தாய்க்குக் காதலன் ஆகின்றான். அன்பிற்கு உரியவன் என்பதே பொருள்.

மகளின் கணவனாகிய மாப்பிள்ளை நளனை, மாமனாகிய வீமன் கண்டான் என்று சொல்லும் போது, "காதலி தன் காதலனைக் கண்ணுற்றான்" எனப் பேசப்படுகின்றது. இங்கே பெற்ற தந்தையாகிய வீமனுக்கு, பிறந்த மகள் தமயந்தி, காதலியென்று உரைக்கப் பெறுகின்றாள் உழுவல் அன்பு காரணமாக. இவை கிடக்க, அழுத்தமான மேம்பாடு தோன்ற, "காலம் ஈதெனக் கருதிய இராவணன் காதல்" என்ற பாட்டில் இராவணன் மகனை 'இராவணன் காதலன்' என்று கம்பர் சொன்னது பெரிதும் அருமைப்பாடுடையது.

✲

## எழுத்தாளர் துயரம்

சில பிரசுரகர்த்தர்கள், ஆசிரியர்களிடமிருந்து கையெழுத்துப் பிரதிகளை வாங்கி வைத்துக்கொண்டு, அவற்றை வெளியிடாமல் காலந்தாழ்த்துவதால், அந்த ஆசிரியர்களின் மனம் எவ்வளவு நோகிறது என்பதற்கு ஓர் உதாரணம்:

இர்விங் என்பவர் ஒரு பிரபல நடிகர். ஒருமுறை அவருக்கு ஜார்ஜ் பெர்னாட் ஷா ஒரு நாடகம் எழுதிக் கொடுத்தார். அதன் பெயர் 'தலைவிதி மனிதன்' என்பதாகும். எழுதிக்கொடுத்து வெகு காலமாகியும், இர்விங் அதை நடிக்கவில்லை.

ஒருநாள், பெர்னாட் ஷா, இர்விங்கைச் சந்தித்து, "என்னுடைய நாடகத்தை எப்பொழுது நடிக்கப்போகிறீர்?" என்று கேட்டார்.

"திட்டமாகச் சொல்லமுடியாது. எனக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. அநேகமாக, அமெரிக்காவிலிருந்து வந்ததும் நடிக்கலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்களுக்குப் பணம் வேண்டுமானால்........."

"வந்தனம், பணத்தைப்பற்றி அக்கறை இல்லை. ஆனால், நான் இன்று எழுதிய நாடகத்தை, இருபது வருஷத்துக்குப் பின்னால் நடிப்பதை விரும்பவில்லை" என்றார்.

இர்விங் நிரம்பச் சாமர்த்தியமாக, "அதைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? பத்திரிகைகளுக்கும் ஜனங்களுக்கும் என்ன சமாதானம் சொல்லுவது என்பது எனக்குத் தெரியும். பெண்டால் என்று ஒருவர்..." என்று கூறி முடிப்பதற்குள், ஷா இடைமறித்துக்கொண்டார்.

"போதும், போதும். அந்த பெண்டாலை எனக்கும் தெரியும். ஒரே ஒரு விஷயம் கேட்கிறேன்: நீர் இருபத்து மூன்றாவது வயதில் 'ஹாம்லெட்' நாடகத்தை ருசிகரமாய் நடித்தீர். இன்று உமக்குப் பேரும் புகழும் திறமையும் அதிகமாக இருக்கிறது. ஆனால், அன்று நடித்த நடிப்புத்தான் மிகவும் சிறந்ததென்று கருதி அதேமாதிரி இன்றும் நடிக்க முன்வருவீரா? நான் உம்மிடம் கொடுத்த நாடகத்தைக் காட்டிலும் சிறந்ததாக மற்றொன்று எழுதக் கருதியிருக்கிறேன். ஆகையால், இது நடிக்கப்படுவதற்காக நான் வெகுகாலம் காத்துக்கொண்டிருக்க முடியாது."

# 'என்று வந்தாய்?'

மு. அருணாசலம்

பொங்கல் திருநாள், மங்களகர கரமாகப் பானையிலே பால் பொங்கிய நாள்; இதயத்தில் அன்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே நிறைந்து பொங்கிய நல்ல நாள். நண்பரொருவர் என்னைப் பார்க்க வந்தார். நான்கு வயதுள்ள தமது குழந்தையையும் தூக்கிக் கொண்டு வந்திருந்தார்.

மாலைநேரம். சூரியன் மேற்குத் திசையில் அத்தமிக்கிறான். அவனுடைய செங்கதிர்கள் தம் ஒளி குன்றி மறைந்துவிட்டன. வானம் சிறிதும் களங்கமற்றிருக்கிறது. எங்கும் இனிமையான ஒரே நீலநிறம். நீல வானத்திலே சில வெண் மேகங்கள், காற்றிலே பஞ்சுத் துகள் பறப்பது போல, சஞ்சரித்துக்கொண்டிருந்தன.

நண்பரும் நானுமாகத் தெருத் தாழ்வாரத்தி லிருந்து பேசிக் கொண்டிருந்தோம். அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டின் பிரசங்கம் முதல், அன்று வெளியான பத்திரிகையில் 'தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் தான் தோன்றி' எழுதிய கட்டுரை வரையில், நாங்கள் பேசாத விஷயமே கிடையாது.

நான்கு வயதுள்ள சிறு குழந்தை எங்கள் பேச்சிலே எப்படிக் கலந்துகொள்ள முடியும்? எங்களைச் சிறிதும் கவனியாமலே அது தன்பாட்டிலே தோட்டத்திற் சென்று பாட்டுப் பாடிக் கொண்டும் பூப்பறித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டு மிருந்தது. சற்று நேரமானபின் திடீரென்று ஓடிவந்து, தகப்பனர் மடியிலேறிக்கொண்டு, "அதோ பாருங்கள் அப்பா, யானை!" என்றது.

பொதுவாய்க் குழந்தைகளுக்கு யானையினிடத்து மிக்க ஈடுபாடு உண்டு. அதன் பெரிய உருவமும், அண்ணந்து பார்த்து முடிவு காணமுடியாத உயரமும், முறம் போன்ற அதன் காதுகளும், தொங்கி ஊசலாடிக் கொண்டிருக்கும் அதன் துதிக்கையும், குழந்தைகளுக்குப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத காட்சிகள். குழந்தைகளுக்கு மட்டுமா? பெரியவர்களுக்குங் கூடத் தான். எனவே, குழந்தையானது ஓடிவந்து 'யானை' என்றவுடனே, நண்பருக்கும் எனக்குமே கூடச் சற்று உற்சாக மேற்பட்டது. "எங்கே அம்மா, யானை?" என்று கேட்டேன். யானை வரும் முன்னமே மணி ஓசை வருமே, மணி ஓசையைக் காணேமே என்ற திகைப்பு ஒரு கணம் எங்களுக்கு இருந்தது உண்மை தான்.

**மேகத்திலே யானையைக் காணுகிறது சின்னஞ் சிறு குழந்தை. பாலும் கூடக் கசந்து விடுகிறது காதலனைப் பிரிந்த காதலிக்கு. தில்லையிலே ஆடும் கூத்தனின் திருநடனம், 'என்று வந்தாய்?' என்னும் திருக்குறிப் பாய்க் காட்சி தருகிறது அப்பருக்கு. இதற் கெல்லாம் காரணம் என்ன? இந்த மனோ பாவங்களின் மூல சூட்சுமம் யாது? அதை நாம் அறிந்தோமானால், கலையும் கவியும் நமக்கு விளங்கிவிடும்.**

"அதோ பாருங்கள் மாமா, ஒசக்கே" என்றது குழந்தை. என்னையே பார்த்துப் பேசிக் கொண்டிருந்த நண்பர், "போடி, ஒசக்கே ஏதுடி யானை? யானை, கீழே தெருவிலல்லவா போகும்! பேசாமலிரு" என்று சொல்லி விட்டு, மறுபடியும் பேச்சில் ஈடு படலானார்.

குழந்தையோ, விடுவதாயில்லை. "அதோ பாருங்கள் அப்பா, நன்ருய்த் தெரிகிறது யானை! வெள்ளை வெளேரென்று! அதோ பாருங்கள் என் கைக்கு நேராக" என்று கையால் சுட்டிக் காட்டிற்று. நண்பர் குழந்தை சொன்ன தைக் கவனிக்கத் தயாராயில்லை. ஆனல், வெள்ளை யானை என்ற வுடனே எனக்குக் கொஞ்சம் ஊக்கம் பிறந்தது. 'குழந்தை ஏதோ உற்சாகமாய் வேடிக்கை காட்டுகிறது, என்னவென்று தான் நாமும் கொஞ்சம் பார்ப் போமே!' என்றெண்ணி, அது காட்டிய திசையில் வானத்தைப் பார்த்தேன். நான் பார்த்ததைக் கண்டவுடனே, அதுவும் உற்சா கம் மிகுந்து, தகப்பனர் மடியை விட்டிறங்கி என்னருகில் ஓடி வந்து, என் தலையைப் பிடித்துத் திருப்பி நிமிர்த்துக் காட்டிற்று. நானும் குழந்தை காட்டிய திசை யிலே வானத்தை அண்ணாந்து பார்த்தேன்.

"அதோ பாருங்கள் மாமா என் கைக்கு நேரே, தெருப் பக்க மாய்ப் போகிறது யானை, வெள்ளையாய்த் தெரியலையா உங் களுக்கு?" என்று கேட்டது.

ஆம், அப்போது எனக்கும் தெரிந்தது, அந்த வெள்ளை யானை! வானத்திலே, வடக் கிருந்து தெற்கு நோக்கிச் சிறிய மேகமொன்று காற்றிலே மெல்லத் தவழ்ந்து சென்றது. அதன் முன்புறத்திலும் கீழ்ப்புறத் திலும் தனித்தனியாகப் பிரிந்து நின்ற சில பகுதிகள், யானை யின் துதிக்கை போலவும் கால் கள் போலவும் காட்சியளித் தன. "யானையைப் பாருங்கள்" என்று குழந்தை காட்டிய வுடனே பார்த்தால், அம் மேகம் ஒரு வெள்ளை யானை போலவே தோற்ற மளித்தது. வெள்ளை யானை என்ற நினைவைக் குழந்தை தோற்றுவித்தவுடனே, வானத் தில் கண்ட மேகமாகிய சித்திரத் தில் குறைவாயுள்ள பகுதிகளை யும் மனமானது கற்பனையினல் நிறைவு செய்து, உண்மையி லேயே அங்கே முழு வடிவம் படைத்த ஒரு யானையைத்தான் கண்டது.

"ஆமாம் அம்மா, யானைதான், இப்போது எனக்கு நன்ருய்த் தெரிகிறது. ரொம்ப வேகமாய்ப் போகிறது, உங்கள் வீட்டை நோக்கித்தான் போகிறது" என்று குழந்தையிடம் வேடிக் கையாய்ச் சொன்னேன். அப் போது அதற்கு ஏற்பட்ட ஆனந் தத்தைச் சொல்லி முடியாது. அப்படியே கூத்தாட ஆரம்பித்து விட்டது.

நண்பரும் அப்போதுதான் நிமிர்ந்து பார்த்தார். "நீங்கள் ஏனப்பா நான் காட்டியபோது பார்க்கவில்லை? உங்களுக்கு யானை அகப்படாது. சூ, மறைந்து போ, ஓடிப்போ" என்று வேடிக்கைபண்ணிற்று குழந்தை. அதற்குள் காற்றினல் அலைப் புண்ட மேகமும் கலைந்துபோய் விட்டது. முன்னமே நாங்கள் கண்ட யானையுருவம் அப் போது இல்லை; உண்மையாகவே அது ஓடிப் போய்விட்டது. "வாருங்கள் அப்பா, நம் வீட்டுக்

குப் போவோம், அங்கே வந்திருக்கும் அந்த வெள்ளை யானை'' என்று சொல்லிக் குழந்தையானது தொந்தரவு பண்ணித் தகப்பனாரை யழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டது.

அவர்கள் போனபிறகு, சிறிது நேரம் வரையில் என் மனமானது வேறொன்றிலும் செல்லவில்லை. குழந்தை காட்டிய காட்சியையும் அது பெற்ற அனுபவத்தையுமே எண்ணிக்கொண்டிருந்தேன். சாப்பாட்டையும் காசு பணத்தையும், மனிதர்களையும், வாழ்க்கையிற் காணும் பொருள்களையும் நிகழ்ச்சிகளையுமே எண்ணத் தோன்றுகிற நமக்கு, இந்தச் சிறு குழந்தையின் மனம் போகிற போக்கை நினைக்க நினைக்க, ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அண்ணாந்து பார்த்து, வானத்தில் தோன்றும் நீல நிறத்தின் அழகையும் வெண்ணிறத்தின் பொலிவையும் கண்டு அனுபவிப்பதே நம்மால் இயலாத காரியம். ஆனல், இந்தச் சிறிய குழந்தையோ, வானத்தைப் பார்க்கிறது; அதில் தவழ்ந்து செல்லும் மேகத்தைப் பார்க்கிறது; தன் களங்கமற்ற மனோதர்மத்தினலே அம் மேகத்துக்குள்ளே ஒரு யானையையும் பார்க்கிறது! 'யானை எங்கேயாவது வெள்ளையா யிருக்குமா?' என்ற ஆராய்ச்சி நமக்குத் தோன்றலாம். ஆனல், உணர்ச்சி வசப்பட்ட குழந்தையானது இன்னும் ஆராய்ச்சி வசப்படவில்லை. ஆகவே, வெள்ளை யானையை மிக எளிதாய்க் கண்டுவிடுகிறது. கண்டதோடில்லாமல், காணத் தெரியாத எனக்கும் காட்டி வெள்ளை யானையைக் கண்ட ஆனந்தத்தை எனக்கும் ஊட்டிவிட்டது. இது ஒரு பெரிய அற்புதந்தான்.

இந்த அற்புதம் எதனல் சாத்தியமாயிற்று? குழந்தையானது அற்புதத்தைக் காணக் கண் படைத்திருக்கிறது. நமக்கும் அற்புதத்தைக் காணக் கண் வேண்டும்; ஒரே பொருளிலே உணர்ச்சி முழுவதையும் செலுத்தி, பிற வற்றை யெல்லாம் ஒதுக்கித் தூரத்தே நிறுத்திவிட்டுக் கண்டு அனுபவிக்கத் தெரிந்த கண் வேண்டும். குழந்தையானது யானையை மேகத்தினுள் காணும்போது, யானையின் பெருத்த உருவையும், அதனிடத்துத் தான் அனுபவித்த பிற அழகு அனைத்தையும் அம் மேகத்தினிடமாகப் பார்க்கிறது. நிறம் வேறு என்ற உணர்ச்சி அதற்கு எழவேயில்லை.

அனுபவத்திற்கு இடமாயுள்ளவையாவற்றிலும், இப்படிப் பார்க்கின்ற பார்வையே வேண்டும். மேகத்தைப் பார்த்துச் சிறு குழந்தை அனுபவிக்கின்ற இந்தச் சிறு விஷயம் முதல், இறைவனைக் குறித்த பேருண்மை வரையில், வாழ்க்கையோடொட்டிய எல்லா விஷயங்களுக்கும், நாம் பார்க்கிற பார்வையைப் பொறுத்துத்தான் பொருள் ஏற்படுகிறது. முக்கியமாகக் கலையுலகிலே பார்க்கும்போது—அது ஓவியமாகட்டும், சிற்பமாகட்டும், கவிதையாகட்டும், வேறு எதுவாகத்தான் இருக்கட்டும்—பார்க்கிற பார்வையானது முன்னமே குழந்தை பார்த்ததைப் போல அமையாவிட்டால், யாவும் கோணலாயும், உண்மைக்கு மாறானவையாயும், பொருளற்றவையாயும் போய்விடும்.

இலக்கியத்திலே பார்க்கும் போது, காதல் துறையிலே எத்தனையோ செய்திகளை நாம் காண்கிறோம். காதலி யொருத்தி தனியே இருக்கிறாள். காதலனைப்

பிரிந்திருக்கிருள். அவனை எண்ணி எண்ணி ஏங்குகிருள். பிரிந்த காதலன் மீண்டும் தன்னுடன் வந்து கூடவேண்டும் என்ற ஒரே ஆவல்தான் அவளுக்கு. அப்படிப்பட்ட தணிக்க முடியாத வேட்கை மனத்திலே குடி கொண்ட காதலிக்கு, வாழ்க்கையிலே எதையும் அனுபவிக்க இயலாமற்போகிறது. 'பாலும் கசந்ததடி' என்று தோழியிடம் கூறிப் புலம்புகிருள். கசந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. இனிமையான மாலைப் பொழுது, அவளுக்கு, சொல்ல முடியாத மனவேதனையைத் தருகிறது. மெல்ல வீசுகின்ற தென்றற் காற்று, வெப்பம் மிகுந்த கோடைக் காற்றினும் கொடிதாயிருக்கிறது. சந்திரன் பொழிகின்ற பால்போன்ற தண்ணிலவு கூட, சூரிய வெப்பத்தினும் கடுமையா யிருக்கிறது. மலர் விரித்த மெல்லணையானது, நெருஞ்சி முள்போலத் தைக்கிறது. சோலையிலிருந்து இனிமையாகக் குயில் பாடும் பாட்டானது, அவளுடைய வேதனையைப் பெருக்கி இதயத்தைத் தொளைக்கிறது. அவளுடைய உள்ளத்தைப்போல உடலும் காந்துவதைக் கண்ட தோழிகள், மணம் மிக்க சந்தனத்தை அரைத்துக் குளிர்ச்சி தரும்படி அவள் உடம்பெங்கும் பூசுகிருர்கள். குளிர்ச்சிக்கு மாருக அவளுக்கு இதனல் வெப்பமே இன்னும் மிகுதியாகி, "ஐயோ, செந்தழலின் சாற்றையல்லவோ பிழிந்துகொண்டுவந்து சந்தனமென்று சொல்லி என் மீது பூசுகிறீர்கள்! என்னை இது நெருப்பாக எரிக்கிறதே!" என்று கதறுகிருள்.

இப்படி யெல்லாம் இலக்கியத்திலே நாம் மிக்க சாதாரணமாய்ப் பார்க்கிருேம். இவை யாவும், கவிஞருடைய கற்பனையிலே உதித்த சம்பிரதாயமான செய்திகள், முழுதும் பொருளற்றவை என்று கருதி இவற்றை ஒதுக்கிவிட்டோமானல், அருமையான கவிதையை இழந்துவிட்டோமென்றுதான் சொல்ல வேண்டும். நாயகனைப் பிரிந்த நாயகியின் மனத்தினுள்ளே புகுந்து அவள் நிலையிலே சிறிது நேரமாவது நாமும் நின்று அவள் படுந் துன்பத்தையும் துயரத்தையும் நாமும் ஒரு சிறிதேனும் உணரத் தெரிந்து கொண்டோமானல், கவிஞர் சொல்வன யாவும் உண்மையே என்பது தெளிவாகப் புலப்படும். அந்த நிலையிலேதான் கவிதை நமக்குப் புலப்பட்டது என்று சொல்லலாம். அந்த நிலையிலே நிற்க நம்மால் இயலாவிட்டால், கவிதைக்கும் நமக்கும் வெகு தூரந்தான்.

உண்மையைக் காண்பதற்கு வேண்டிய பார்வையானது இலக்கியத் துறையிலேயே இவ்வளவு அவசியமானது என்ருல், சமயத் துறையிலே அது இன்னும் பல மடங்கு அவசியமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கடவுள் தத்துவமானது பிரபஞ்சமெங்கும் ஒன்ருய் வியாபித்திருக்கிறது. உலகெங்கும் நிகழும் செயல்கள் யாவும், அவனுடைய ஆணைப்படியே நிகழ்கின்றன. எந்தப் பொருளிலும் அவனுடைய வியாபகத்தைக் காணவும், எந்தச் செயலிலும் அவனுடைய செயலையே காணவும் தெரிந்த ஞானிகளுக்குப் பின்னர் எதனிடத்தும் விருப்போ வெறுப்போ நிகழ்வது இல்லை. எனவே, அவர்களுக்கு இன்பமென்றும் துன்பமென்றும் தனித் தனியே கிடையா. இரண்டும் ஒன்றே; ஒரே ஆனந்தந்தான். கடவுள் தத்துவத்தையே

ஒரே ஆனந்தமயமாகப் பார்க்கிருர்கள். பிரபஞ்ச மெங்குமே அவனுடைய ஆனந்தக் கூத்து நிகழக் காண்கிருர்கள்.

எங்கும் அவனுடைய கூத்து நிகழ்ந்தாலும், அதைக் கண்ணுரக் காணவும் கண்டு போற்றவும் எளிதாயிருக்கும் பொருட்டு, தில்லை என்ற ஓர் இடத்திலே ஆனந்த நடனத்தோடு கூடிய நடராசப் பெருமான் என்ற ஓர் அடையாளத்தை — ஒரு திருவுருவத்தைக் கற்பித்து வைத்திருக்கிருர்கள். இந்த அடையாளத்தைக் கண்டு, இதன் மூலமாக அவனுடைய உண்மையான ஆனந்த வடிவத்தை உணர்ந்து போற்றத் தெரிந்தவர்களுக்கு, இவ் வடிவமே எல்லா நன்மையையும் செய்கிறது. அவர்களுடைய ஆனந்த வாழ்க்கையிலே, இறப்பு என்பது இல்லை. இதையே கதை மூலமாக நம்மவர்கள் சொல்கிருர்கள்.

சிவபெருமானுக்கு ஆட்செய்து, அவனையே தியானித்து வந்த மார்க்கண்டன் உயிரைக் கவர யமன் வந்தான். அப் பெருமானுடைய திருவடியிலே மார்க்கண்டன் அடைக்கலம் புகுந்து விட்டான். உடனே பெருமானும் வெளிப்பட்டு, தன் அடியவன் பொருட்டு, யமனைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டான்.

எனவே, மார்க்கண்டனைப் போன்ற மனேபக்குவம் பெற்று இறைவனுடைய திருவுருவத்தை வழிபடுவோருக்கு, உண்மையாகவே இறைவன் அவ்வுருவத்தில் குடிகொண்டிருந்து அருள் செய்கிருன். அவ் வுருவத்தை வெறும் கல்லென்றும் செம்பென்றும் எண்ணுமல், பெரியதோர் ஆனந்தத்தை வெளியிடவல்ல அடையாளம் என்றெண்ணத் தெரிந்தோருக்கு, அவ் வடையாளமே உண்மையை உணர்த்த வல்லதா யிருக்கிறது.

**அவர் என்ன செய்வார்?**

1904-ஆம் வருஷம் பம்பாயில் காங்கிரஸ் மகாசபை கூடியது. விஷயாலோசனைக் கமிட்டி நடவடிக்கைகளின் போது பலமான விவாதம் உண்டாயிற்று. சர் பிரோஷ் ஷா மேத்தா, எதிர்ப்பைச் சற்றும் பொருட் படுத்தாமல் தன்னிச்சையாக எல்லாம் செய்து கொண்டு போகிருர் என்று பல பிரதிநிதிகளுக்குக் கோபம். கமிட்டி நடவடிக்கைகள் முடிவடையும் சமயம். சர் பிரோஷ் ஷா எழுந்து, "கமிட்டியில் உங்கள் அபிப்பிராயத்தை ஏன் வற்புறுத்தக் கூடாது?" என்று கேட்டார். ஒரு பஞ்சாலப் பிரதிநிதி எழுந்து, "உங்கள் செல்வாக்குக்கு முன்னல், நாங்கள் சொல்வது எங்கே ஏறப் போகிறது?" என்றுர். "அதற்கு நான் என்ன செய்வது?" என்றுர் பிரோஷ் ஷா. தங்களையும் அறியாமலே பிரதிநிதிகளுக்குச் சிரிப்பு உண்டாயிற்று.

அப்பர் சுவாமிகள் இவ்வாறு அடையாளத்தின் மூலமாக உண்மையைக் கண்டவர். இறைவனுடைய திருவுருவத்தைக் கோயிலிலே சென்று வழிபடும் போது, அவ்வுருவத்தினுள்ளாகவே ஒரு பெரிய ஆனந்தத்தைக் காணவேண்டும், அப்படிக் கண்டோர்க்கு எவ்விதத் துன்பமுமின்றி, என்றும் ஆனந்தமே விளையும் என்கிருர்.

**ஒன்றி யிருந்து நினைமின்கள் :**
**உந்தமக்கு ஊனமில்லை.**
**கன்றிய காலனைக் காலாற்**
**கடிந்தான் அடியவற்கா ;**
**சென்று தொழுமின்கள் :**

என்கிருர்.

அப்பர் சுவாமிகள் தில்லையிலே நடராசப் பெருமான் ஆடும் ஆனந்தத் திருக்கூத்தை எத்தனையோ முறை சென்று தரிசித்தவர். ஒவ்வொரு முறையும் அந்தத் திருக் கூத்திலே புதிய உண்மைகளைக் கண்டார்; அதனின்றும் புதிய புதிய ஆனந்தத்தைப் பெற்றார்.

அப்படி ஒரு முறை சென்றார். மனத்திலே எவ்வளவோ கனிவும் பக்தியும் பிறந்து உள்ளத்தைக் குழைத்தன. ஆலயத்தினுள் புகுந்து பொன்னம்பலத்தின் எதிரே வந்தார். வந்து, குழைந்த உள்ளத்தோடு, இறைவன் திருவடியிலே வைத்த கண்களைச் சற்று உயர்த்தி நிமிர்ந்து அவனுடைய திருமுக மண்டலத்தை ஒரு கணம் பார்த்தார். அந்தத் திருமுகத்தை முன்னமேயும் பல முறை கண்டிருக்கிறார். அதனிடத் தமைந்த குனித்த புருவத்தையும், கொவ்வைச் செவ் வாயையும், குமிண் சிரிப்பையும் அனுபவித்திருக்கிறார். ஆயினும் இடையிலே பலநாள் பிரிந்த பின்னர், மீண்டும் இப்போது காணும்போது, இறைவன் திருமுகத்திலும், அவனுடைய திருநடனத்திலும் புதியதொரு கனிவையும் அன்பையும் கருணைப் பெருக்கையும் காண்கிறார். இறைவன் அவரைப் பார்த்து, இறைவன் திருமுகத்தைக் காண வேண்டும் என்ற வேட்கை இவரிடத்து எவ்வளவு அதிகமாக எழுந்ததோ அவ்வளவுக்கு அந்தத் திருமுகத்தில் கனிவும் மிகுந்திருக்கக் காண்கிறார். "எப்பொழுதப்பா வந்தாய்? சௌக்கியமா யிருக்கிறாயா?" என்று கேட்பது போன்ற குறிப்பு அவருக்குப் புலப்படுகிறது:

சென்று தொழுமின்கள்; தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்,
'என்றுவந் தாய்?' என்னும் எம்பெரு
மான்தன் திருக்குறிப்பே!

என்று அவர் பாடுகிறார்.

களங்கமற்ற மனமான குழந்தை மனம், உலகம் யாவும், கண்ணிற் காணும் பொருள்கள் யாவும், தான் பார்க்கவும் அனுபவிக்கவும் விளையாடவுமே படைக்கப்பெற்றுள்ளன என்று கருதுகிறது. வானத்தில் அசையும் மேகமும் யானையாகவே உருவங் கொண்டு அக் குழந்தையோடு வந்து விளையாடத் தயாராயிருக்கிறது என்று சொன்னால் தவறில்லை.

அடியவர் மனம், களங்கமற்ற மனம், வாழ்க்கையிலே எப்பற்றும் வேண்டாமென்று துறந்த மனம், தாயைத் தேடும் கன்று போல, இறைவனுடைய திருவருளைத் தேடிப் போற்றுகின்ற மனம். கோயிலி லமைந்துள்ள இறைவன் திருவுருவத்திலேயே அம் மனம் பேரன்பைக் காண்கிறது, தாயன்பு கனிந்து நிற்கக் காண்கிறது; பரிவோடு வந்து தன்னை விசாரிக்கும் குறிப்பைக் காண்கிறது:

ஒன்றி யிருந்து நினைமின்கள்;
உந்தமக்கு ஊனமில்லை.
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான் அடியவற்கா;
சென்று தொழுமின்கள்; தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
'என்றுவந் தாய்?' என்னும் எம்பெரு
மான்தன் திருக்குறிப்பே!

ஆகவே, என்ன வேண்டும்? காணக் கண் வேண்டும். எந்தக் கண்? புறக்கண் அல்ல; அகக்கண் வேண்டும்.

✲

# புது உலகத்துக்கு வழி

பி. கோதண்டராமன்

ஸ்ரீ அரவிந்தரின் பூரண யோக சித்தாந்தத்தில், பரிணாம தத்துவம் மிகவும் முக்கியமான அம்சமாகும். அது இறைவனின் சிருஷ்டி தத்துவத்தை நன்கு விளக்குவதாயும், இவ்வுலக வாழ்க்கைப் பிரச்னைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்குரிய வழி காட்டுவதாயும் அமைந்துள்ளது. ஆதலால், பரிணாமம் என்றால் என்ன? இக்கால மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் அதை எவ்விதமாக விவரித்துள்ளனர்? அதை அரவிந்தர் தம் சித்தாந்தத்தில் எவ்விதமாகக் கையாண்டுள்ளார்?—ஆகிய விஷயங்களை நன்கறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இவற்றை இங்கே சுருக்கமாக விளக்க முயலுவோம்.

இக்கால மேல்நாட்டு இயற்கைச் சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள், பூமியையும் பூமியில் முன்பு வாழ்ந்தனவும் இன்று வாழ்வனவுமான உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி, வடிவம், உறுப்புக்கள், இனப் பெருக்கம் ஆகிய யாவற்றையும், பல ஆதாரங்களையும் கருவிகளையும் கொண்டு ஆராய்ந்து வந்திருக்கின்றனர். இந்த ஆராய்ச்சியிலிருந்து, விவிலிய நூல் கூறுவதைப்போல, உயிர்கள் யாவும் ஒரே காலத்தில் பூரண வளர்ச்சியடைந்து விடவில்லை என்றும், பல்லூழி காலமாகப் படிப்படியாகவே வளர்ந்து இன்றுள்ள நிலையை அடைந்துள்ளன என்றும் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.

அவர்கள் கொள்கைப்படி, ஆதியில் உலகம் முழுதும் ஒரே சட மயமாக இருந்தது. பூமி முதலில் ஒரே தீப்பிழம்பாக இருந்து, பின்னர் மெல்ல மெல்லக் குளிர்ந்தும் இறுகியும் வந்தது. வெகு காலத்துக்குப் பின் நீர்ப் பரப்பாகவும் நிலப் பரப்பாகவும் ஆயிற்று. மேலும் சில காலம் கழிந்தது. இச் சடப்பரப்பில் உயிர்த் துடிப்பு ஏற்பட்டது. உயிர்ப் பொருள்கள், உருவும் உறுப்புக்களும் பெற்று, மேன்மேலும் வளர்ச்சியுற்று, இடையறாது பெருகலாயின. முதலில் புற்பூண்டுகள், செடி மரங்கள் போன்றனவும், பின்னர் புழு, பாம்பு போன்றனவும், வானில் இயங்கும் புள்ளினங்களும், நீரில் வாழும் மீனினங்களும் மெல்ல

**மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்பது மேனாட்டினர் கண்ட பரிணாம தத்துவம். ஆனால், சடத்திலிருந்து உயிர் எப்படி வந்தது? மனித பரிணாமத்தின் முடிவான லட்சியம் என்ன? இதையெல்லாம் ஆராய்கிறது 'அரவிந்தரின் பரிணாம தத்துவத்'தைப் பற்றிய இந்தக் கட்டுரை. மனிதன் அமரனாக வேண்டும்; புது உலகம் அமைய வேண்டும்—அதற்கு வழி காட்டுவது அரவிந்தரின் தத்துவம்.**

மெல்லத் தோன்றலாயின. இந்த உயிரினங்களில் தாழ்ந்த ரக மானவை முதலிலும், உயர்ந்த ரகமானவை பின்னரும் படிப் படியாக உண்டாயின.

ஒவ்வோர் உயிரும் தன்னை ஈன்ற உயிரின் உருவம், அமைப்பு, இயல்பு முதலியவைக ளுடனேயே பெரும்பாலும் தோன்றுகிறது. ஆனால், குறித்த உடலமைப்பும், வளர்ச்சியு முடைய ஓர் உயிரினம், நாளடை வில், பெரிய சிக்கலான உட லமைப்பையுடைய மற்றோர் உயி ரினமாக மாறுதலடைவதும் சாத் தியமாகிறது. ஆயினும், வித்தில் மரம் அடங்கி யிருப்பது போல, முன் சென்ற உயிரினத்தில், பின் னர் வளர்ச்சியுற்ற உயிரினத்தின் மூலாம்சம் மறைந்துள்ளது என் பதும், இவ்விதம் மறைந்துள் ளதே பின்னர் வெளிப்படுகிறது என்பதும் தெளிவு. இவ்விதமாக வளர்ச்சியடையும் உயிர்களுள், விலங்கினத்தில்தான் முதல் முத லாக மனம் என்பது ஓரளவு தோன்றுகிறது. இறுதியில் தோன்றும் மனிதனிடம் அது பூரண வடிவில் விளங்குகிறது. இவ்விதமாக, சடத்தில் உயிரும், உயிரில் மனமும் தோன்றி, இயந் திரம் போன்று இயங்குகின்றன. இந்த அற்புதத்தைச் செய்வது, சடத்திலுள்ள ஒரு சக்தி அல்லது ஆற்றலேயாகும். உயிர்களுடைய சிருஷ்டி ஆராய்ச்சியைப் பற்றிய இக் கொள்கையே பரிணமம் என வழங்குகிறது. பரிணமம் என் றால், உள்ளடங்கி யிருப்பது வெளிப்படுதல் என்று பொருள்.

**19**ஆம் நூற்றாண்டிலிருந்து இயற் கையை முறையாக ஆராய்ந்த அறிஞர் பலருடைய கொள்கை இதுவே. இதன் மூலம் உலகில் ஒரு வளர்ச்சி முறை உண்டு என்பது விளங்குகிறது. ஆனால், சடத்திலிருந்து உயிர் எவ் விதமாகத் தோன்றுகிறது? உயி ரில் மனம் தோன்றுவது எப்படி? உயிரின் பரிணமம் மனத்தோடு நின்று விடுகிறதா? சிருஷ்டியின் லட்சியந்தான் என்ன?—ஆகிய கேள்விகளுக்கு இது பதிலளிப்ப தில்லை. இது அசேதன அல்லது புற இயற்கையின் வளர்ச்சியை மட்டுமே விளக்குகிறது. சேதன அல்லது ஆத்மீக வாழ்க்கையின் வளர்ச்சியை இது அடியோடு புறக்கணித்து விடுகிறது.

இக்கொள்கை, முதல் முதலாக இப்பொழுதுதான் ஆராய்ச்சி முறையில் விளக்கப் படுகிறது. ஆனால், பண்டைக்கால அறிஞர் இதன் மூலாம்சத்தை ஒருவாறு அறிந்திருந்தனர். நம் நாட்டு உப நிடதங்கள், புராணங்கள், தாந் திரிக நூல்கள் முதலியன இக் கொள்கையின் பல உண்மை களைக் கதையுருவில் நமக்கு வெளியிட்டுள்ளன. அவற்றை யெல்லாம் எடுத்துக்கூற, இங்கே இடமில்லை. தசாவதாரத்தை மட் டும் எடுத்துக் கொள்வோம். இறைவன் முதலில் நீரில் வாழும் மீனாகவும், பின்னர் நீரிலும் நிலத் திலும் வாழும் ஆமையாகவும், பின்னர் பன்றியாகவும், பாதி மனிதனும் பாதி மிருகமுமான நரசிம்மனாகவும், குள்ளனாகவும், காட்டு மனிதனை பரசுராமனாக வும், இறுதியில் பூரண மனித னை இராமனாகவும் அவதரித்த கதை, பரிணம தத்துவத்தின் விளக்க மல்லவா?

ஆனால், இக்கால அறிஞர்களின் கொள்கைக்கும் நம்முடைய பெரி யோர்களின் கருத்துக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் என்ன? நம்மவர்கள், சடமே வாழ்க்கையின் முழு ரகசியம்

என்று கருதியதில்லை. ஆன்மாவின் வளர்ச்சியே முக்கியம். அது பல பிறவிகள் எடுத்து அறிவு விளக்கம் பெறுகிறது. உடல்—உயிர்-மனத்தின் பரிணாமமானது, ஆன்மாவின் பரிணாமத்திற்குரிய இடைச் சம்பவமே யன்றி வேறல்ல. உணர்வின் பரிணாமமே முக்கியம். ஆயினும், உணர்வு நிலை மாறும்போது உடலிலும் மாறுதல் ஏற்படும். நம்முடைய பரிணாமக் கொள்கை, இறைவனோடும், மனிதனின் ஆத்மீக வளர்ச்சியோடும் தொடர்புடையதாகும். நம்முடைய பெரியோர்கள் பரிணாம விஷயமாகக் கண்ட இவ் வுண்மையை ஸ்ரீ அரவிந்தர் ஏற்று விரிவுபடுத்தி, அதைத் தமது சித்தாந்தத்திற்கு அடிப்படையாகக் கொள்ளுகிறார். அவர் விளக்கும் பரிணாம தத்துவம் வருமாறு :

சத்—சித்—ஆனந்த சொரூபியாகிய இறைவன், தானே இந்நானாவித உயிர்களாகப் பரிணமிக்கிறான். தனி உருவும் தனி உணர்வும் பெறும் உயிர்கள், தமக்கும் ஆதிமூலமான இறைவனுக்கும் உள்ள உண்மைத் தொடர்பை மறந்து அஞ்ஞானத்தில் ஆழ்ந்துவிடுகின்றன. பார்க்கப்போனால், இது இறைவனின் 'யோக மாயை' அல்லது திருவிளையாடலின் பயனேயாகும். ஆயினும், அஞ்ஞானத்தில் உழலும் இவ்வுயிர்களிலும் அவன் புகுந்து மறைகிறான். இவ்விதமாக, அவனது சேதனம் அல்லது பேருணர்வு அடங்கியிராத சிருஷ்டிப் பொருளே கிடையாது. சிருஷ்டியானது மேல் நிலைகளிலிருந்து மனம் உயிர் உடல் என்னும் கீழ் நிலைகளில் படிப்படியாக இறங்கும்போது, அவற்றில் அடங்கியுள்ள உணர்வும் படிப்படியாகக் குன்றி மழுங்கி விடுகிறது. இறுதி நிலையான சடத்தில் அவ்வுணர்வு அடியோடு மறைந்துவிடுகிறது. அதனால்தான், சடம் முற்றிலும் உணர்வற்றுப் போகிறது. அது தன் ஆதி நிலையை முற்றிலும் மறந்து, தன்னுள்ளே அடங்கியுள்ள சேதனத்தை ஒரு சிறிதும் அறிவதில்லை. உலகுயிர்களாகப் பரிணமித்த சத்—சித்—ஆனந்தனாகிய இறைவன், அஞ்ஞானத்தில் ஆழ்ந்துள்ள இவற்றிலும் புகுந்து மறைந்துவிடும் தத்துவத்தைத்தான், ஸ்ரீ அரவிந்தர் "உட்புகும் முறை" (Involution) என்கிறார்.

இவ்வாறு இறைவன் உயிரினங்களில் புகுந்திருப்பதால் தான் அவை ஒவ்வொன்றும் தன்னிலும் மேம்பட்டதாகத் தோன்ற விரும்புகிறது. உள்ளடங்கியிருப்பது என்றாவது ஒருநாள் வெளிப்பட்டுத்தானே ஆகவேண்டும்? சித் – மயமான இறைவன், உடல்-உயிர்-மனத்தில் புகுந்திருப்பதால், உயிர்கள் சேதனத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தி இறைவனை நோக்கி உயர்ந்து செல்ல முடிகிறது. இங்ஙனம் சேதனம் படிப்படியாக வெளிப்படுவதைத்தான், ஸ்ரீ அரவிந்தர் "வெளிப்படு முறை" (Evolution) என்கிறார். அவர் இது சம்பந்தமாக மேலும் கூறுவதாவது :

"சேதனம் உட்புகும் பொருள்களுள், சடமே இறுதியானது. ஆதலால், சடத்தில்தான் அது முதல் முதலாக வெளிப்படுகிறது. பல காலமாக உணர்வற்றுக் கிடந்த சடத்தில், உணர்ச்சி வெளிப்பட்டு உயிர் துடிக்க ஆரம்பிக்கிறது. உயிருள்ள சடப் பொருள் தோன்றுகிறது. உயிரினம் பெருகுகிறது. உயிரில் மெல்லமெல்லச் சேதனம் வெளிப்

பட்டு மனம் தோன்றுகிறது. அம்மனம், முதலில் உயிருக்கு உதவியாக நின்று, அதற்கு ஊழியஞ் செய்கிறது. பின்னர் வளர்ந்து, உடலின் மேலும் உயிரின் மேலும் ஆட்சி செலுத்தத் தொடங்குகிறது. மனோமய புருஷன் தோன்றுகிறான். மனிதன் சிந்தனையாளனாகவும் ஞானியாகவும் விளங்குகிறான். பல தொழில்களும் கலைகளும் வளர்கின்றன. இன்று மனிதனின் மனோ நாகரிகமே மேலோங்கி நிற்கிறது.

"ஆனால், பரிணாமம் இத்துடன் நின்றுவிடவில்லை. மனிதனின் மனதில் பரஞான வாசனை வீசுகிறது. அவனுடைய ஆத்மீக ஆர்வம் மேன்மேலும் பெருகுகிறது. அவன், தான் அடைந்துள்ள உணர்வு நிலையைவிட உயர்ந்ததோர் உணர்வுநிலை யுண்டென்று கண்டு, அதையடைய முயலுகிறான். ஆனால், அவன் மனோமய ஜீவன். அவனுடைய வாழ்க்கை அஞ்ஞானம் மிகுந்தது. அஞ்ஞானத்திலிருந்து, ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட ஆத்மீக நிலையை அடைய வேண்டியவனாக இருக்கிறான். மனத்திலும், உயிரிலும், உடலிலும் உருமாறுதல் அமையப் பெறாத அவன், இவ்வுலகிலிருந்து கொண்டே இப்பெரு நிலையை அடைவது எப்படி?

அவனுக்கு இவ்வுலகமும் இயற்கையும் தடையாய் நிற்கின்றன. அவனுடைய உடல்—உயிர்—மனம், உயரிய நிலைக்குத் தயாராகவில்லை. அவை இன்னும் விருப்பு வெறுப்புக்கள், இன்ப துன்பங்கள், பிணி, சாக்காடு, அழிவு ஆகியவற்றுக்கு உட்பட்டுள்ளன. ஆகவே, அவை அவனுடைய ஆத்மீக வளர்ச்சியைத் தடுத்து, அதைக் கீழே இழுக்கின்றன. இந்நிலையிலிருந்து மீளும் வகை யறியாமல் மனிதன் கஷ்டப்படுகிறான். ஆத்மீக வேட்கை மிகுந்த மனிதன், இந்த நிலையில் உயிரையும் உடலையும் இவ்வுலக வாழ்வையும் வெறுத்து, இவற்றினின்றும் விலகி, உள்முகமாகச் சென்று, சமாதி நிலையில் உலகாதீதமான இறைவனுடன் கலக்கிறான்.

**வா**ழ்க்கைப் பிரச்னைகளில் சிந்தனை செலுத்திய பெரியார் பலரின் போக்கும் இவ்விதமாகவே இருந்தது. உலக வாழ்க்

---

**சரிக்குச் சரி !**

ஒரு முறை, இக்னேஷ் என்ற பிரபல டாக்டர் ஒருவர், ஒரு விருந்துக்குப் போயிருந்தார். விருந்து முடிந்ததும், ஒரு பணக்கார மாது, டாக்டரின் அருகே வந்து, தன்னுடைய கால் நோயைப் பற்றி வெகு நேரம் விஸ்தரித்தபின், "இதற்கு என்ன செய்ய வேண்டும், டாக்டர்?" என்று கேட்டாள்.

"குடிக்கக் கூடாது. நேரத்தில் படுக்க வேண்டும். எப்போதும் முழங்காலைக் கத கத என்று வைத்திருக்கவேண்டும்" என்றார் டாக்டர்.

அந்த மாது, டாக்டருக்குத் தன் நன்றியைக் கூறிவிட்டு, மிக்க சாமர்த்தியமாக, "விருந்துக்கு வந்த இடத்தில் சொன்ன வைத்திய ஆலோசனைக்கு நான் பணங் கொடுப்பது நன்றாகவா இருக்கும்! அதுதான் யோசிக்கிறேன்" என்றாள்.

டாக்டருக்கு விஷயம் புரிந்தது.

"வாஸ்தம். நீங்கள் பணம் கொடுப்பதும் சரியல்ல; நான் அதை வாங்குவதும் சரியல்ல. ஆனால், விருந்துக்கு வந்த இடத்தில் நான் சொல்லும் வைத்திய ஆலோசனை எதுவும் பலிப்பதும் வழக்கம் இல்லை" என்றார்.

கையிலிருந்து மீளுவதற்கு, அதை அடியோடு துறந்து, உள்ளே சிறைப்பட்டிருக்கும் ஆன்மாவை விடுதலை செய்து, அது பரநிலையிலுள்ள பரமான்மாவுடன் ஐக்கியமடைந்து விடுமாறு செய்வதைத் தவிர, வேறு வழியே கிடையாதென்றும் அவர்கள் கூறினார்கள். இதுவே பெரும்பாலும் வாழ்க்கையைப் பற்றிய கருத்தாக இருந்து வந்திருக்கிறது. தனி மனிதர் தம் விடுதலையின் பொருட்டு வாழ்க்கையிலிருந்து தப்பியோடினர். உலக இயல்பு, பொதுவாக மக்களின் வாழ்வு, முன்னிருந்த நிலையிலேயே இருந்தது.

உலக வாழ்வைப் பற்றிய இம்முடிவை ஸ்ரீ அரவிந்தர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் கூறுவதாவது: "வாழ்க்கையின் இன்னல்களுக்கெல்லாம் மூலகாரணம் அறியாமை அல்லது அஞ்ஞானமேயாகும். இவ்வஞ்ஞானம் வாழ்க்கையின் நிரந்தரமான இயல்பன்று. இது இறைவன் சிருஷ்டி முறையில், இடையே ஏற்பட்ட நிலையாகும். மனிதன் இதுவரை அடைந்துள்ள மனநிலையோடு அவனுடைய பரிணமம் முடிவடைந்து விடவில்லை. மற்றொரு பரிணமமும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையோடு பரிணமம் முடிவடைந்து விடுமாயின், மானிடப் பிரச்னைகள் தீருவதற்கு வழியே கிடையாது. மனத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக்குள் இருந்துகொண்டே, மானிடப் பிரச்னைகளைத் தீர்ப்பது எங்ஙனம் இயலும்? மனிதன் முன்போலவே இன்றும் அஞ்ஞானம் பொருந்திய மனோமய புருடனாக இருக்கிறான். இன்னும் பரிபக்குவமடையாத சேதனத்தின் தோற்றமே அவன். அவன் தன் மன அறிவையும் பகுத்தறிவின் சக்தியையுங் கொண்டு, இம்மானிட இயல்பையும் உலக இயல்பையும் மாற்றிவிட முடியாது.

ஞானிகள், தங்களைப் பொறுத்தவரையில், ஆன்ம விடுதலை பெறலாம். ஆனால், மக்களினம் உய்வதற்கு வழியில்லை. சமூக, ராஜீய, பொருளாதாரத் திட்டங்களாலும் சர்வதேசச் சங்கத்தின் மூலமாகவும் உலகத்தைத் திருத்தவும், மக்களின் துன்பங்களைப் போக்கவும் அரசியல் வாதிகள் முயலுகின்றனர். அவர்களது முயற்சியால் தற்காலிகமாகச் சில நன்மைகள் ஏற்படலாமேயொழிய, நிரந்தரமான பரிகாரங்கள் ஏற்படப் போவதில்லை. பழைய துன்பங்கள் புது உருவெடுத்து வருவதையே காண்போம். ஆகவே, மனித இயல்பும் இவ்வுலக இயல்பும் முற்றிலும் மாறுவது இன்றியமையாததாகும். இவ்வியல்புகள் மாற வேண்டுமானால், மனம் தன்னைவிட உயர்ந்ததொரு சாதனமாக உருமாற வேண்டும். இவ் அஞ்ஞான உலகில் இருந்துகொண்டே இது எப்படி முடியுமெனக் கேட்கலாம். உலகில் அஞ்ஞானமே யாவுமாக இல்லை. அது உலக இயற்கையின் ஓர் அம்சமேயாகும். ஆதியில், ஞானம் தன்னைத் தானே பந்தப்படுத்திக் கொண்டது. உணர்வு சடத்தில் அமிழ்ந்து மறைந்தது. உள்ளடங்கியுள்ள அவ்வுணர்வு, மெல்ல மெல்ல வெளிப்பட முயலுகிறது.

மனத்திற்கு அப்பால், பல உயர்ந்த உணர்வு நிலைகள் உள்ளன. மனோமய மனிதன் தன் மன உணர்வைக் கடந்து சென்று

அவ்வுயரிய உணர்வு நிலைகளுடன் உறவாட வேண்டும். அவன் தன் மனத்தைப் பண்படுத்தி, அது எவ்வளவு தூரம் உயர முடியுமோ அவ்வளவு தூரம் உயரும் படிச் செய்யவேண்டும். அந்தர் ஞான திருஷ்டியைப் போன்ற அனுபவங்களால், அது உயர்வடையலாம். ஆனால், இவையெல்லாம் போதா. இவை நிரந்தரயான பலன் தருவதில்லை. மிக உயரிய உணர்வு நிலையாகிய விஞ்ஞானத்தை, அவன் எட்டவேண்டும். அந்நிலையிலுள்ள தெய்விக சக்தி, கீழே இறங்கவேண்டும்.

மனிதனின் உணர்வு மேலே செல்லச் செல்ல, விஞ்ஞான உணர்வின் சக்தி கீழே இறங்கி வந்து மனத்தையும் உயிரையும் உடலையும் உருமாற்றுகிறது. உயிரும் உடலும் மனமும் அஞ்ஞானத்தின் கருவிகளாக இருப்பது ஒழிந்து, விஞ்ஞானத்தின் கருவிக ளாகின்றன.விஞ்ஞானத்தின் இறக்கமானது, தனி மனிதனை உருமாறுத லடையும்படி செய்வதோடு நின்றுவிடுவதில்லை. அது மக்கட் குலம் முழுவதையுமே, இப்புவி முழுவதையுமே, மெல்ல மெல்ல உருமாற்றி ஒரு புது உலகத்தை அமைக்கிறது. மனிதன் அதி மனிதனாகி, அமரனாகி, இவ்வுலகிலேயே தெய்விக வாழ்க்கையை நடத்துகிறான். இம்மண்ணுலகம் விண்ணுலகமாக விளங்குகிறது. இப்பெரு மாறுதலுண்டாவதற்கு மனிதன் யோக சாதனை செய்வதும், இறைவனிடம் சம்பூரணமாக அடைக்கலம் புகுவதும், அவன் அருளுக்கு உள்ளத்தைத் திறந்து அமைதியாகக் காத்திருப்பதும் இன்றியமையாதன. திறந்த உள்ளத்தில் தெய்விக விஞ்ஞான சக்தி, அருள் பொழிவாள். அப்போது பூரண பரிணாமம் நிகழும்.

இதுவே மனிதன் அடைய வேண்டிய பரிணாமத்தின் இறுதியான படி. இப்பரிணாமத்தை மனிதன் அடைய வேண்டுமென்பதே, இறைவனின் திருவுள்ளக் கருத்தாகும். இதைத் தவிர, அவனது சிருஷ்டிக்கு வேறு பொருள் இருக்கமுடியாது.

✲

## ஏழை நாட்டுப்புறத்தான்!

நாட்டுப் புறத்தான் என்றால், கபடமே யில்லாத பரம சாது என்று எல்லாரும் சொல்லுவது வழக்கம். உண்மையில் அவர்களுடைய சூதும் வாதும் தந்திரமும் நம்மால் சமாளிக்க முடியாது. புரொபஸர் கில்பர்ட் மர்ரே என்ற ஆங்கில ஆசிரியர் ஓர் உதாரணம் தருகிறார்:

"என் சொந்தக் கிராமத்தில், ஒரு கடைக்காரர், ஜிஞ்சர் பீர், லெமனேட் முதலியவைகளை விற்பார். அவைகளின் காலி பாட்டில்களைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுப்போருக்கு, பாட்டில் ஒன்றுக்கு இரண்டு பென்ஸ் பணம் வாபஸ் செய்து, அந்தக் காலி பாட்டில்களை யெல்லாம் கொல்லைப் புறத்தில் குவித்து வைப்பது அவர் வழக்கம். ஒரு நாட்டுப்புறத்தான், இதிலிருந்து பணம் சம்பாதிக்க ஓர் அருமையான யுக்தி செய்தான். கடையின் கொல்லையிலிருந்து காலி பாட்டில்களைப் பொறுக்கி, அதே கடையின் வாசலில் கொணர்ந்து விற்றுக்கொண்டிருந்தான்."

# பிள்ளை வளர்ப்பு



தி. சு. அவிநாசிலிங்கம்

பிள்ளைகளைப் பேணல் என்பது, தற்காலத்தில் அதிமுக்கியமான ஆராய்ச்சிகளில் ஒன்றாகும். மேல் நாடுகளில் பல கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் இத்துறையில் அரும்பாடு பட்டு வருகின்றன. இதன் காரணமாகக் 'குழந்தை மனோதத்துவ சாஸ்திரம்' (child psychology) என்ற ஒரு பெரிய சாஸ்திரமே தற்காலத்தில் தோன்றியிருக்கிறது. அச்சாஸ்திரம், இப்போது அதன் ஆரம்ப நிலையிலிருப்பதாகத்தான் சொல்லவேண்டும். அது நாள்தோறும் வளர்ந்துகொண்டு வருவதைக் காண்கிறோம். வீட்டில் பெற்றோர்களும் பள்ளியில் ஆசிரியர்களும் பிள்ளைகளிடம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், எவ்வாறு அவர்களை வளர்க்கவேண்டும் என்பதுபற்றி, அச்சாஸ்திரம் நமக்கு எடுத்துரைக்கிறது. எத்தகைய பழக்க வழக்கங்கள் எவ்விதமான உணர்ச்சியையும் பயனையும் அளிக்கின்றன; ஒரு நாட்டின் கல்வி முறை எத்தகையதாயிருக்கவேண்டும்; மக்களிடம் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் முதலிய குணங்கள் இருக்கவேண்டுமானால், அவர்களை எவ்விதம் வளர்க்கவேண்டும்; ஒவ்வொரு குழந்தையையும் இளைஞனையும் சமூகத்திற்குப் பயனுள்ளவனாக எவ்விதம் செய்யமுடியும்—என்ற இது போன்ற பல மகத்தான பிரச்னைகளை இச்சாஸ்திரம் ஆராய்கிறது. எதிர்கால மக்களை உயர்ந்த முறையில் வளர்க்க இது பெரிதும் பயன்படுவதால், உலகில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகள் பலவும் இந்தச் சாஸ்திரத்திற்கு உன்னதமான இடம் கொடுத்து வருகின்றன. அமெரிக்காவில் பல சர்வகலாசாலைகள் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றன. பல அறிஞர்கள் இவ்வாராய்ச்சியின் பயனைப் பாகுபடுத்தி, வருஷந்தோறும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வெளியிடுகின்றனர். எனவே, நமது நாட்டிற்கும் இவ்வரிய சாஸ்திரம் எவ்வளவு முக்கியமானது என்பது கூறாமலே விளங்கும்.

இன்று நம் குழந்தைகளை நாம் வளர்க்கும் முறையே, நாட்டின் வருங்காலத்துக்கு அஸ்திவாரமாகும். நம் குழந்தைகள், நாட்டின் குழந்தைகள். நாளைக்கு அவர்களால், நாடே பாதிக்கப்படும். அவர்களைச் சிறந்த முறையில் வளர்ப்பது, நாட்டுக்கே நாம் புரியவேண்டிய ஒரு கடமை. பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு தனிக் கலையாகும். அதுபற்றி அன்பர் அவிநாசிலிங்கம், **'பிள்ளைகளைப் பேணல்'** என்று ஒரு புத்தகமே எழுதிவருகிறார். அதன் முதல் அத்தியாயம் இது.

பிற சாஸ்திர ஞானத்தைப் போல, இச்சாஸ்திர ஞானத்தையும் மக்கள் முன்னேற்றத்திற்காக உபயோகிக்கலாம், அல்லது மனிதனுக்கு மனிதன் கேடுசெய்வதற்கும் உபயோகிக்கலாம். பௌதிகம், ரசாயனம், மின்சாரம் முதலிய சாஸ்திரங்கள் மனிதனுக்குப் பலவிதமான யந்திரங்களை அளித்திருக்கின்றன. ரயில் பாதை, ஆகாய விமானம் முதலியன காலத்தையும் தூரத்

தையும் குறைத்து உலகத்தையே ஒன்றுபடுத்தி யிருக்கின்றன. ஆனால், இவைகளே மனிதன் தன் சகோதர மனிதனை அழிப்பதற்கும் உதவியாக இருக்கின்றன. வைத்திய சாஸ்திரம் மனிதனுக்கு எண்ணிறந்த நன்மை செய்யக் கூடியதாக இருக்கிறது. ஆனால், அதே ஞானம் மனிதனுக்குக் கேடு செய்யும் மகத்தான யந்திரமாகவும் இருக்கிறது. இங்ஙனமே எல்லாச் சாஸ்திரங்களும் இருக்கின்றன. எல்லாச் சாஸ்திரங்களின் ஞானமும் மனிதனுக்கு அபார சக்தியை அளிக்கிறது. ஆனால், அச்சக்தி நன்மையை உண்டு பண்ணுவதும் தீமையை உண்டு பண்ணுவதும், அவற்றைக் கருவியாகக் கொள்ளும் மனிதனுடைய தன்மையைப் பொறுத்திருக்கிறது. அவை தீயனவும் அல்ல; நல்லவையுமல்ல. அவை வெறும் கருவியாக மாத்திரம் இருக்கின்றன. அவை தீயனவாவதும் நல்லனவாவதும் அவற்றைக் கையாளும் மனிதனைப் பொறுத்ததாக இருக்கிறது.

இந்த விதிக்கு, குழந்தை மனோ தத்துவ சாஸ்திரம் விலக்கல்ல. அதன் உதவியைக் கொண்டு, பிள்ளைகளை உயர்ந்த லட்சியத்துடன் நாட்டின் உயர்வுக்காகவும், சமூகத்தின் சேவைக்காகவும் வளர்க்கலாம். ஆனால், அதன் ஞானத்தைக் கொண்டே, ஒரு தேசம் மற்றொரு தேசத்தை நீண்ட காலம் அடிமையாகவும் வைத்திருக்கலாம். ஒரு நாடு மற்றொரு நாட்டின் கல்வி முறையைத் தன் கையில் வைத்துக் கொள்வதன் மூலமும், அந்த நாட்டில் கற்றுக் கொடுக்கப்படும் பாட புத்தகங்களைத் தனக்கு வேண்டியவாறு எழுதுவதன் மூலமும், அந்த நாட்டுக் குழந்தைகளுக்குச் சுதந்தர உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் இல்லாமல் செய்யமுடியும். கல்வி முறையைத் தங்கள் கையில் வைத்துக் கொள்ளுவதன் மூலம், அந்த நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்தையும், அதன் மூலம் அந்த நாட்டின் எதிர்காலத்தையுமே தங்கள் விருப்பம் போல் மாற்றி அமைக்க முடியும். ஒரு குயவன் சக்கரத்தைக் கருவியாகக்கொண்டு மண்ணால் சட்டி பானை முதலிய எந்த விதமான பாத்திரத்தையும் செய்கிறான். இவை அனைத்துக்கும் அந்தச் சக்கரம் கருவியாக இருக்கிறது. அங்ஙனமே, குழந்தைகளைப் பேணும் ஞானமும், குழந்தை உயர்ந்த முறையில் வீரனாக வளர்க்கவும் பயன்படுகின்றது; அல்லது, குழந்தைகளைத் தேசிய உணர்ச்சி அற்ற கோழைகளாக்கவும் பயன் படலாம். இதன் காரணமாகவே, ஒரு நாடு மற்றொரு நாட்டைக் கைப்பற்றியதும், அந்நாட்டுக் குழந்தைகளின் கல்வி முறையைத் தன் வசத்தில் வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

இதன் காரணமாகவே, தேசீயக் கல்வியின் அவசியத்தை நம் பெரியோர்கள் மிகவும் வற்புறுத்தி யிருக்கிறார்கள். தேச முன்னேற்றத்துக்கு முதற் கருவியாக, நம் கல்வி தேசீயக் கல்வியாக மாற வேண்டுமென்று விவேகானந்த சுவாமிகள், மகாத்மா காந்தி, கவி ரவீந்திரநாத தாகூர் போன்ற நம் அறிஞர்கள் பலர் கூறியிருக்கிறார்கள். தேசீயக் கல்வி என்றால் என்ன? பெரிய உத்தியோகங்கள் சிலவற்றை இந்தியர்களுக்குக் கொடுத்து விட்டால் மாத்திரம் அது தேசீயக் கல்வியாக மாறி விடுமா? ஆகாது. நம் மக்கள்

மனதில் தேச பக்தியையும் அன்பையும் உண்டாக்கத் தக்கதே தேசியக் கல்வியாகும். அது நம் குழந்தைகளுக்கு ஆண்மையையும், தியாகத்தையும் ஊட்ட வேண்டும்; சொந்த நன்மையைப் பொருட்படுத்தாமல் தேசத்தின் நன்மையைப் பெரிதாக மதிக்கும் குணத்தைப் புகட்டத் தக்கதாக இருக்கவேண்டும். தேசத்தின் மானத்தையும் பெருமையையும் தங்கள் உயிரினும் அதிகமாகப் போற்றும் உணர்ச்சி அவர்கள் மனதில் பொங்கித் ததும்பிப் பூரணமாய் விளங்க வேண்டும். 'இந்தியா சிறப்பாக வாழ்ந்தால் போதும்; அதற்காக நான் இறந்தாலும் பாதகம் இல்லை' என்ற உணர்ச்சி நம் குழந்தைகளிடம் நிலவவேண்டும். இத்தகைய உணர்ச்சியைக் கொடுக்கும் கல்வியே தேசியக் கல்வியாகும்.

எனவே, பிள்ளைகளைப் பேணல், அதாவது குழந்தைகளை உயர்ந்த முறையில் வளர்த்தல் என்பது, ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு மிக முக்கியமான விஷயமாகும். தன் குழந்தையை நன் முறையில் வளர்க்கும் ஒவ்வொருவனும் சிறந்ததொரு தேசிய சேவை செய்தவனாவான். இந்நாடு சீரும் சிறப்பும் அடையவேண்டும் என்று விரும்பாத இந்தியர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். எல்லோரும் தங்கள் தங்கள் நிலைமைக்கும் சக்திக்கும் ஏற்றவாறு தேசத்தின் முன்னேற்றத்திற்கு உதவ விரும்புவார்கள்.

பிற துறைகளில் சேவை செய்யப் பொருள் வசதியோ, படிப்பு வசதியோ வேண்டியிருக்கலாம்; அல்லது, தன்னுடைய குடும்பத்தையும், சுக துக்கங்களையும் துறக்க வேண்டிய தியாக புத்தி வேண்டியிருக்கலாம். ஆனால், தத்தம் குழந்தைகளை நன்றாக வளர்க்க இவை எதுவும் அவசியமில்லை. குழந்தைகளின் பேரில் அன்பும், அவர்கள் நன்றாக வளர வேண்டுமென்ற எண்ணமும் தேசத்தின் பால் பக்தியும், அது நாள்தோறும் சிறப்படைய வேண்டும் என்ற கருத்தும், இந்த லட்சியத்திற் கேற்ப அவர்களை வளர்க்கக் கூடிய ஞானமும் இருந்தால் போதுமானது.

சிவாஜியை வீரராக்கியவர் அவருடைய அன்னை ஜீஜிபாய் என்பதையும், சுவாமி விவேகானந்தரின் புகழுக்கு அவருடைய பெற்றோர்களும் ஆசிரியரும் காரணஸ்தர்கள் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இங்ஙனம், தங்கள் பிள்ளைகளை உயர்ந்த முறையில் ஆண்மையுடன் வளர்க்கும் ஒவ்வொரு தாயும், தந்தையும், ஆசிரியரும் மகத்தான தேசிய சேவை செய்தவர்கள் ஆவார்கள்.

✲

## கடுகும் மனமும்

"மந்திரித்த கடுகைப் பேய் பிடித்தவன்மீது தூவினால், பேய் அகன்று விடும். ஆனால், பேய் கடுகுக்குள்ளேயே புகுந்து கொண்டால், அப்படிப்பட்ட கடுகு, பேயை எப்படிப் போக்கும்? பகவானை எந்த மனத்தைக் கொண்டு தியானம் பண்ண வேண்டுமோ அந்த மனமே உலக விஷயங்களாகிற தீய எண்ணங்கள் செறிந்ததாக இருந்தால், அப்படிப்பட்ட கெட்டதொரு ஸாதனத்தின் உதவியைக்கொண்டு எப்படிப் பக்தி மார்க்கத்தை அனுசரிக்க முடியும்?"

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# புத்தகத்தில் நான்



தி. ஜ. ர.

'உன்னைப் போலவே, உன் அயலானையும் நேசி' என்றார் ஏசு கிறிஸ்து. 'உன்னை நீ நேசிக்காதே; உன் அயலானை மாத்திரம் நேசி' என்று அவர் சொல்லவில்லை. என்னை நான் நேசிக்காவிட்டால், என் அயலானை நேசிக்க வேண்டிய வேலையே எனக்கில்லை; தேவையும் கிடையாது. இதேமாதிரிதான் ஷேக்ஸ்பியரும் ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார்: 'உனக்கு நீ உண்மையாய் நடந்துகொள்; அப்போது நீ யாருக்குமே பொய்யனாய் இருக்க முடியாமல் போகும்' என்கிறார். உண்மையில் புத்தகங்கள் என்பவைதான் என்ன? பெரும்படியாகச் சொன்னால், ஒருவனுடைய உடல் மன அனுபவங்களின் சித்திரங்கள்தான் புத்தகங்கள். ஆத்மவிகாசந்தான் சகல இலக்கியமும் என்றும் சொல்வதுண்டு. அப்படியானால், 'நான் எனும் அகந்தை' புத்தகங்களில் பரிபூர்ணமாய் இருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

"நான் ஆறு புத்தகங்களைப் பொறுக்கினேன். ஆறும் 'நான்' போட்டு எழுதப்பட்டிருக்கின்றன. இப்படித தன்மை ஒருமையில் எழுதுவது தற்கால இலக்கியத்தின் ஒரு விசேஷ அம்சம்" என்கிறார் 1943-ஆம் வருஷ 'டெய்லி மெயில் ஈயர் புக்'கில் பிராங்க் ஸ்வின்னர்ட்டன் என்ற பிரபல எழுத்தாளர். இதே பிரச்னையைக் குறித்து, சென்னை ரேடியோவில் பேசிய ஒரு பிரசங்கம் இது. நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

ஒரு நண்பர் இருக்கிறார். நல்ல அறிஞர். அவருக்கு, தமிழ் நாட்டில் பிரபலமடைந்த ஓர் எழுத்தாளரிடம் மகா கோபம். அவருக்கு மாத்திரமல்ல; வேறு எத்தனையோ பேருக்கு, எனக்கும் கூடத்தான், அந்த எழுத்தாளரிடம் கோபமுண்டு. ஆனால், நண்பரின் காரணம் வேறே. என் காரணங்கள் வேறே. நண்பர் சொல்வார்: "இவன் யாரடா, 'நான், நான்' என்று சொல்லி அகம்பாவத்தோடு எழுதுவதற்கு? ஒரு மகாத்மா 'நான்' என்று எழுதலாம்; பேரறிஞர்கள் 'நான்' என்று எழுதலாம். சின்ன மனிதர்கள் எல்லாம் 'நான், நான்' என்று எழுதினால், மிக்க விரசமாயிருக்கிறது; இல்லையா?" என்பார் நண்பர். ஆனால், நண்பரும் ஒரு சிறந்த எழுத்தாளர்தான். அவருடைய எழுத்துக்களிலே, 'நான்' அழிந்த பரிபூர்ணப் பணிவைக் காணலாம் என்று நினைக்கிறீர்களோ? அதுதான் இல்லை. அவைகளில் குறைந்தது பத்து வரிக்காவது ஒரு 'நான்' வராமல் போகாது. 'நான்' போட்டு எழுதுவது குற்றமானால், அந்தக் குற்றத்தை நான் ஓயாமல் செய்துகொண்டுதான் வருகிறேன் என்று, நானும்

ஒப்புக் கொள்ள வேண்டியது தான். 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பார்கள் அல்லவா? அந்தமாதிரிதான் 'நான்' இல்லா எழுத்தும். ஆனல், உப்பு, தின்னும் பண்டங்களிலே அந்தர்க்கதமாய் ஒளிந்து கொள்கிற தில்லையா? அந்த மாதிரியே, நம் எழுத்துக்களிலே 'நா'னும் பெரும்பாலும் ஒளிந்து கொள்ள வேண்டும். அதுதான் கலைத் திறமைக்கு அடையாளம்.

"ஒரு மகாத்மா, 'நான்' என்று எழுதலாம்; நீ அப்படி எழுதக் கூடாது" என்று சொல்கிருர்களே; அதற்கு, அப்படியானல் அர்த்தமே கிடையாதா? உண்டு. அதிலும் கொஞ்சம் அர்த்தம் இருக்கத்தான் இருக்கிறது. 'நான் எனும் அகந்தை' அடியோடு அழிந்தவர்கள் மகாத்மாக்கள். அவர்கள் 'நான்' என்று சொல்லும்போது, அவர்களுடைய அகம்பாவம் நம்முடன் பேசவில்லை. அவர்களது அன்புதான் நம்முடன் பேசுகிறது; அவர்களது அனுபவ நிறைவில் கனிந்த புருஷாகாரம் நம்முடன் பேசுகிறது; உலகத்தின் அந்தராத்மாவே நம்முடன் பேசுகிறது. நாம் 'நான்' என்று சொல்லும்போது அப்படியில்லை. நம்முடைய குறைகளும் செருக்கும் மௌடீகமும், 'நான்' என்ற சொல்லிலே திரண்டு நிற்கின்றன. ஆகையால், எழுதுகிறவனின் எழுத்திலே 'நான்' என்ற சொல் கூடவே கூடாதா? கூடாதென்று நான் சொல்லமாட்டேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், நானே அடிக்கடி 'நான்' போட்டு எழுதுவதுதான்.

சில தினங்களுக்கு முன், 'வொர்ல்ட் டைஜஸ்ட்' என்ற பத்திரிகையின் அக்டோபர் மாத இதழின் ஒரு பிரதியைப் பார்த்தேன். இந்தப் பேச்சைப் பேச வேண்டுமே, இதற்கு ஏதாவது விஷயங்கிடைக்குமா பார்க்கலாம் என்று அதைப் புரட்டினேன். விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனல், ஒரு சங்கதி எனக்குப் பிரமிப்பைத் தந்தது. அதில் இருந்த முதல் கட்டுரையே, எனக்குக் குதூகலமூட்டியது. 'எழுத்தாளரின் ஆனந்தம்' என்பது அதன் தலைப்பு. தற்போதைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் இருக்கிருரே, இவர் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் செய்த ஒரு பிரசங்கந்தான் அது; அற்புதமான பிரசங்கம். ஆஹா! எழுத்தாளனின் பெருமைதான் என்ன! மகிமையும் உரிமையும் இன்பமும் தான் எவ்வளவு! அவன் 'நான்' என்று சொல்லிக் கொள்ளக் கூடாதா? அவனே சொல்லக் கூடாதென்ருல், பின்னே யார்தான் சொல்லிக் கொள்ளலாம்; சொல்லிக் கொள்ள முடியும்?

பத்திரிகையை மேலும் புரட்டினேன்; வெறுமையே பக்கங்களைத்தான் புரட்டினேன். நுனிப்புல் மேய்வது போல, கட்டுரைகளை மேலெழுந்த வாரியாகக் கண்ணேட்டம் விட்டேன். மொத்தம் இருபத்தெட்டுக் கட்டுரைகள் இருந்தன. அவைகளில் பதின்மூன்று கட்டுரைகள் ஒரே 'அஹம் பிரம்மாஸ்மி' தான்; அதாவது 'நான்' மயமாய் இருந்தன; வரிக்கு வரி 'நான்' என்ற சொல் கம்பீரமாய் நின்றது. மீதிக் கட்டுரைகளிலும், இலைமறைவு காய் மறைவாய் ஒன்றிரண்டு 'நான்'கள் அங்குமிங்கும் ஒளிந்து கொண்டுதான் இருந்தன. இத்தனை 'நான்'களைக் கண்ட நான் — இப்போது உங்களுடன் பேசு

கிறேனே, அந்த நான்—திகைக்காமல் என்ன செய்யமுடியும்?

வேதாந்திகளிடம் 'நான்' என்ற உணர்வு செத்துப் போக வேண்டுமென்பது சம்பிரதாயமாயிருக்கலாம். 'யான் எனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை!' என்று அவர்கள் கண்ணீர் விடலாம். ஆனால், அப்படி மனங்கரைந்த தாயுமானுரே, அடுத்தாற்போல் என்ன சொல்லுகிறார்? 'யாதினும் அபிமானம் என் சித்தமிசை குடிகொண்டது' என்னவில்லையா? அகங்காரத்துக்கு மூலகாரணம் அபிமானம்தான். அகங்காரத்தின் எல்லையும் அபிமானம்தான். 'நான் எனும் அகந்தை'யே, பற்பல பொருள்களின்மீதும் நம்மை அன்புகொள்ளச் செய்கிறது; அந்த அன்பே நம் அகந்தையை அழிக்கிறது. இது இயற்கையின் அதிசயப் புதிர்களில் ஒன்று.

ஓர் ஆங்கிலக் கவிஞர் மிக அழகாக இதை வர்ணித்திருக்கிறார். வாழ்க்கை என்ற வீணையை, அன்பு என்ற தேவதை, கையிலே எடுத்துக் கொண்டாளாம். அதிலே எத்தனையோ தந்திகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அவள் ஆவேசமாய் அடித்து அடித்து மீட்டி நாதம் எழுப்புகிறாள். அந்தத் தந்திகளுக்குள்ளே, அகந்தை என்பதும் ஒன்று. அதை அவள் அடித்தபொழுது, அது நடுநடுங்கி, நம் கண்களை விட்டே மறைந்துவிடுகிறது. ஆனால், அப்பொழுதெழுந்த அதனுடைய இன்னிசை மட்டில், நம் காதுகளை நிறைத்து, நம்மைப் பரவசமாக்குகிறது. புத்தகாசிரியனுக்கு அகங்காரம் இருக்கலாம்; இருக்க வேண்டும். ஆனால், அது அன்பைத் துணைக் கொண்டிருக்க வேண்டும். 'நான் எனும் அகந்தை' செத்தவன், வேதாந்தியாகலாம்; புத்தகாசிரியன் ஆக முடியாது. தன்னம்பிக்கையின் சிகரம், அகங்காரம்தான்.

நாடக மேடைமீது நடிக்கும் நடிகர்களுக்கு, 'நான் எனும் அகந்தை' இருந்தால், நடிப்பிலே கோளாறு ஏற்படக் கூடும். ராமனாக நடிக்கும் வப்ரஹாம், தம்மைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால், ராம நாடகம் நடக்காது; ஸீதையாக நடிக்கும் ஞானமணியின் 'நான்' எனும் எண்ணமோ, ஸீதா கல்யாணத்தை நடக்க வொட்டாது. ராமனாக நடிப்பவன், ராமனே ஆகிவிட வேண்டும்; ஸீதையாய் நடிப்பவள் ஸீதையே ஆகிவிட வேண்டும். இருவரும் தங்களை மறந்துவிடவேண்டும். அப்போதுதான், திறமையாக நடிக்க முடியும்.

'புத்தகாசிரியன், தன் கதாபாத்திரங்களைச் சிருஷ்டிக்கையிலும், இப்படித்தானே அந்தந்தப் பாத்திரமாய் மாறிவிட வேண்டும்?' என்று கேட்கலாம். நடிகனின் ராமன், நடிகனின் சிருஷ்டியல்ல; புத்தகாசிரியனின் ராமனே, அவன் சிருஷ்டி. ஒரு புத்தகாசிரியனின் அவதான சக்தியும் அனுபவ அறிவும் கற்பனைத் திறனும் சேர்ந்து, ஆசிரியனுக்கு அந்நியமான ஒரு பாத்திரத்தை உருவாக்குவது உண்மைதான். ஆனால், அந்தப் பாத்திரத்திலே, ஆசிரியனின் சுய மனோதத்துவம்தான் ஒளிந்து கிடக்கும். அதை அடியோடு ஒழிப்பது சாத்தியமல்ல. கம்பனின் ராமனை, வால்மீகி சிருஷ்டிக்க முடியாது; வால்மீகியின் ராமனை, கம்பனும் சிருஷ்டிக்க முடியாது. அவரவர் உலகம் வெவ்வேறே; அவை அவரவருடைய ஆத்மாவால் வியாபிக்கப்

பட்ட தனித்தனி மனோ ராஜ்யங்களாகும்.

நல்ல புத்தகம் என்பதுதான் என்ன? அது ஓர் அறிஞனின் ஜீவனையே பிழிந்து நிறைத்த ஒரு பாண்டமாகும். அப்படிப்பட்ட புத்தகத்தில், எப்படி 'நான்' என்ற மமகாரம் - இல்லாமல் இருக்க முடியும்? "நல்ல புத்தகம் ஒன்றைக் கொல்வது, ஒரு மனிதனையே கொல்வதற்குச் சமமாகும். மனிதனைக் கொல்பவன், அறிவோடு கூடிய தெய்வ சிருஷ்டி ஒன்றைக் கொல்கிறான்; புத்தகத்தைக் கொல்பவனோ, அறிவையே கொன்று விடுகிறான்" என்கிறார் மில்டன் எனும் மகாகவி. சுயானுபவப் பூங்கொடியிலே பூத்த அறிவு மலர்தான் புத்தகம் என்பது. அதிலே 'நான்' என்ற உணர்ச்சி எப்படி இல்லாமல் போகும்?

ஆமாம்; எழுதுபவர் யாராயிருந்தாலும் சரிதான்; அவர்கள் 'நான்' என்று போட்டு எழுதுவது, உண்மையிலே அப்படி என்ன விரசமாகவா இருக்கிறது? ஏதாவது சில பத்திரிகைகளைக் கையில் எடுங்கள். கையெழுத் தில்லாமல், பொதுப்பட எழுதப்பட்டிருக்கும் தலையங்கங்களை முதலில் படியுங்கள். அடுத்தாற்போல், யாராவது கையெழுத் திட்டு, பொழுது போக்குப் போல, பெரிய விஷயங்களைத் தளுக்காக மென்மையோடு தொட்டு, எழுதியுள்ள சில பத்திகளையும் படியுங்கள். எவை அதிக ருசிகரமாய் இருக்கின்றன? பிந்தியவையே அல்லவா? காரணம் என்ன? கையெழுத் தில்லாத தலையங்கங்கள், எங்கேயோ உபதேச பீடத்திலிருந்து கொண்டு, பரப்பிரம்மமான யாரோ பேசுவது போல் காணப்படுகின்றன. அவைகளில் ஜீவன் இருப்ப தில்லை. ஆனால், கையெழுத்திட்டு எழுதும் கட்டுரையாளரோ, நம்மிடம் அந்நியோந்நியமாய் அளவளாவுவது போல், நாம் உணர்ச்சி கொள்கிறோம். அதிலே நமக்கோர் இன்பம் உண்டாகிறது.

இத்தனை சொல்கிறேனே; எனக்குமே 'நான்' என்று போட்டு எழுதும் எல்லாக் கட்டுரைகளும் பிடித்து விடுவதில்லை. ஏனென்றால், 'நான்' என்று சொல்லி எழுதுவதிலே, ஒரு சூட்சுமம் இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், அதிலே 'உண்மை'யின் மணம் கமழ வேண்டும். பெரிய மகான்கள் 'நான்' என்று சொல்லி எழுதும்போது, அந்த எழுத்திலே அதிகாரத் தொனி இருக்கலாம்; பெருமையின் பெருமிதம் இருக்கலாம். அவர்கள், அவர்களுடைய வாழ்க்கையின் நிறைவுகளைத் தங்கள் எழுத்திலே பிரதிபலிக்கிறார்கள். அவை, நமக்கு நேரே வழி காட்டும் ஒளித் திரளாகும். சாதாரண மனிதர்கள், 'நான்' என்று சொல்லுகையில், வாழ்க்கைக் குறைகளின் பணிவுதான் இருக்க வேண்டும். தன்னையே, தன் குறைபாடுகளையே, பரிகாசம் செய்து கொள்ளும் துணிவும் இருக்கலாம். பெரிய மனிதர்களின் நிறைவுடைய அனுபவங்கள் எப்படியோ அப்படியே, எளிய மனிதர்களின் குறைகளால் ஏற்படும் அனுபவங்களும் நமக்கு ஒருவித வழிகாட்டிகள் தான். பெரியோரின் அனுபவங்கள் "இங்கே வா" என்று அழைத்துக் கைதூக்கிவிட்டால், எளியவர்களின் அனுபவங்கள், "அங்கே போகாதே" என்று எச்சரித்துத் துணைபுரிவனவாகும். எவராயிருந்தாலும், உண்மையை மட்டும் சொல்லுவார்களானால்,

அவர்களுடைய எழுத்திலே காணும் 'நான்' என்ற சொற்கள், நமக்கு இன்பமே தரும். சின்ன மனிதர்கள் எல்லாம் 'நான், நான்' என்ற அகந்தையோடு உபதேசம் செய்ய வரும் போதுதான், நம்மால் சகிக்க முடியாமல் போகிறது.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன் – நான் தான். எழுதுகிறவனின் 'நான்' என்ற உணர்ச்சியை, உங்களால் சகிக்க முடியாமல் சிலசமயம் தவிக்கிறீர்களே, அது ஏன் தெரியுமா? உங்களுடைய 'நான்' என்ற உணர்ச்சி படம் விரித்து ஆடத் தொடங்குவதால்தான். அப்படியிருக்க, எழுதுகிறவனிடம் மட்டில் அது சாகவேண்டும் என்று ஏன் விரும்புகிறீர்கள்? நம் ஒவ்வொருவரிடமும் 'நான்' என்ற உணர்ச்சி இருக்கும் வரையில் தான், தன் தன் தனித் தன்மையை நாம் காப்பாற்றிக் கொள்ளமுடியும். அதற்காக, பிறருடைய 'நான்' என்ற உணர்ச்சியை அமுக்கி விடும்படி, முடி தாழ்ந்து விடாதீர்கள். அதாவது, புத்தகங்களை யெல்லாம் அப்படியப்படியே பரிபூர்ணமாய் அங்கீகரித்து, அந்தச் சுமை தாங்காமல், உங்கள் அறிவு மழுங்க இடங் கொடாதீர்கள். அந்த எச்சரிக்கை மட்டும் இருந்தால் போதும்.

## மலரும் இயந்திரமும்

கவி ரவீந்திரநாத தாகூர் தமது இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறும் ஒரு ரசமான நிகழ்ச்சி வருமாறு:

"சிலாயிதஹ்ஹில் நாங்கள் இருந்தபோது, தோட்டக்காரன் புஷ்பங்களைப் பறித்துப் பூக்கிண்ணங்களில் அலங்காரமாக வைப்பான். அந்தப் புஷ்ப ரசத்தைப் பிழிந்து அதில் தோய்த்துக் கவிதை எழுதவேண்டுமென்று ஓர் அசட்டு யோசனை உதித்தது. இதழ்களை எவ்வளவுதான் கசக்கிப் பிழிந்தும், பேனா முனைக்கு வேண்டிய ரசம் சொட்டுக்கூடக் கிடைக்கவில்லை. இதற்கு ஒரு யந்திரம் கண்டுபிடிக்க வேண்டுமென்று யுக்தி தோன்றியது. பிளந்துபோன ஒரு மரக்கோப்பையைத் தேடிப் பிடித்தேன். அதற்கு ஏற்ற ஒரு குழவிதான் தேவை. அதை ஒரு சக்கரத்தில் மாட்டிவிட்டால், தானாகவே சுழலவேண்டும். இந்த யுக்தியை அண்ணாவிடம் சொன்னேன். உடனே உத்தரவு பிறந்தது. கொட்டாப்புளியும் கையுமாகத் தச்சன் வந்தான். யந்திரம் உருவாகியது. அந்த உரலில் பூ இதழ்களைக் கொட்டி எவ்வளவு சுழற்றியும் ரசம் வரவில்லை.

"வாழ்க்கையில் அந்த ஒரே தடவைதான் நான் எஞ்ஜினீயரிங் வித்தையில் அக்கறை காட்டினேன். முடியாத ஒன்றை ஒருவன் சிருஷ்டிக்கப் பார்த்தானானால், தெய்வம் அவன் கர்வத்தைக் குலைத்துவிடுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தத் தெய்வத்தின் பார்வை என்னுடைய எஞ்ஜினீயரிங் முயற்சியின் மேலும் விழுந்தது, அதற்குப்பின், நான் எந்த யந்திரத்தையும் தொடுவதில்லை — ஸிதார், எஸ்ராஜ் போன்ற சங்கீத வாத்திய யந்திரங்களைக்கூடத்தான்."

# சர்மாவின் புதிர்

து. ரா.

நடேச சர்மாவுடன் பேச்சுக் கொடுப்பது என்பதே சற்றுச் சிரமமான காரியம் தான். அதனாலேயே ஊரில் பாதிப்பேர் அவரோடு அதிகம் உறவு கொண்டாடாமல் அவரை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர் பேச்சு, பலருக்குப் புரியாது. பேசுகையில் அடிக்கடி புதிர்ப் போட்டுக் கொண்டு பேசுவார். 'புரிகிறதா?' என்று உடனுக்குடனே கேட்பார். புரியவில்லை என்று ஒப்புக் கொண்டால், பிழைத்தோம். இல்லாவிட்டால், "என்ன புரிகிறது?" என்று கேட்டு, "இது தானா புரிந்த லக்ஷணம்?" என்று மடக்குவார். இது அநேகருக்குப் பிடிக்கிற தில்லை. ஆகையால், அவரை விதண்டாவாதக்காரர் என்றும், குதர்க்கம் பேசுகிறவர் என்றும் சொல்லி, அவர்கள் அவர் வழிக்குப் போகாமல் விலகிச் சென்றார்கள்.

சர்மாவுக்குக் கிட்டத்தட்ட ஐம்பது வயதாகியும் இன்னும் பிரம்மசாரியாகவே இருக்கிறார். அவர் கல்யாணமே பண்ணிக் கொள்ளவில்லையாம். இதனால் வேறு, அவரிடம் பலருக்கு அவநம்பிக்கையும் அலக்ஷியமும் ஏற்பட்டிருந்தன. போதாத குறைக்கு, எங்கள் அலமேலுப் பாட்டியைக் கேளுங்கள், சொல்லுவாள்: "அந்தப் பிராமணன் வாயிலே வருகிறதெல்லாம் பொய்! ஒரு வார்த்தை நிஜம் கிடையாது!" என்று!

இப்படித்தான் ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கையில், ரிட்டயர் ஆன தாசில்தார் ஒருவரைப்பற்றிப் பேச்சு வந்தது, "நாடார் ரொம்பக் கெட்டிக்காரர். அதனால்தான் ஒரு சமயம் ஏமாந்து போனார்" என்று புதிர்ப் போட்டார் சர்மா.

"அதெப்படி?" என்று கேட்டோம்.

சர்மா சொன்னார்:

"நாடார் ஒரு சமயம் மாடு வாங்க வேண்டுமென்று பிரயத்தனம் செய்தார். ஏழைக்கவுண்டன் ஒருவன், தன் மாட்டை விற்கிறேனென்று கொண்டு வந்து நிறுத்தினான். நாடாருக்கு மாட்டு விஷயம் ஒன்றும் தெரியாது. அதனால் ஏமாந்து போகாமல் இருப்பதற்காக, முன் ஜாக்கிரதையுடன், பக்கத்து ஊரில் இருந்து ஒரு மாட்டுத் தரகனை வரவழைத்தார். தரகன் மாட்டைப் பார்த்தான். தன் மூலமாய் மாடு வாங்காமல் நாடார் தன்

---

கல்யாணம் செய்வதென்றால், சாமான்யமான காரியமா? பெண்ணை வைத்துக் கொண்டு வரன் தேடுவோர் பாடு பெரும்பாடா யிருக்கிறது. பிள்ளையோ, நித்தியப் பிரம்மசாரியா யிருக்கப் போகிறவன் போல், பிடிவாதம் செய்கிறான். ஆனால், அந்தச் சர்மா மட்டில், என்ன சொல்லுகிறார்! கடைசியிலே என்ன செய்து விடுகிறார்! எல்லாம் ஒரு புதிராகவே யிருக்கிறது.

வரும்படியில் மண்ணைப் போடு கிருரே என்று அவனுக்குக் குறை. அதனல், "இந்த மாட்டுப் பால் ருசிக்காது, சாமி" என்று சொல்லி விட்டான். நாடார், மாட்டை வாங்காமல் கவுண்டனை அனுப்பிவிட்டு, தரகனையே ஒரு மாடு கொண்டு வரும்படி சொன்னுர். அவன் என்ன பண்ணினன், தெரியுமா? அந்தக் கவுண்டனிடமிருந்து அந்த மாட்டையே வாங்கி, முன்பு அவன் சொன்ன விலையைப்போல் இரண்டு பங்கு விலைக்கு அதை நாடாருக்கு விற்ருன்."

இவ்விதம் சர்மா பேசுகையில், கதை அளக்கிருரோ என்று எல்லோரும் சந்தேகிப்பார்கள். பொய்யோ, நிஜமோ; அந்தப் பேச்சிலே ஒரு ரஸம் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றியது. இந்தக் காரணத்தினல் தான், எனக்கு ஊரில் மற்றவர்களிடம் ஏற்படாத நட்பு, சர்மாவிடம் ஏற்பட்டிருந்தது. பொழுது போகவில்லை என்ருல், அவர் வீட்டுக்குப் போய் விடுவேன். வீட்டு வாசலில், தென்னை மரத்தடியில் ஒரு நீண்ட பெஞ்சி, மழையென்றும் வெயில் என்றும் பாராமல் எப்பொழுதும் கிடப்பதுண்டு. அதில் உட்கார்ந்து பேசத் தொடங்குவோம். அநேகமாய், பேசுவது சர்மாவாகவும் கேட்பது நானகவும் இருக்கும். அவர் வார்த்தைகளை எல்லாம் நான் ஆமோதிப்பேன். இது வெளிக்கு மட்டும் தான். உள்ளூர என்ன நினைப்பேன் என்பது வேறு விஷயம்! பொழுது போக்குக்காக அவர் பேச்சைக் கேட்கப் போவேனே தவிர, அவருடன் வாதம் செய்து மனஸ்தாபப்பட்டுக் கொள்ளும் ஆசை எனக்குக் கிடையாது.

இந்த முறையை நான் அனுசரிக்கையிலேயே, சில சமயங்களில் சர்மா என் வார்த்தையைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஓங்கி அடித்துப் பேசிவிடுவார். ஒரு நாள் அப்படித்தான் கல்யாண விஷயமாய்ப் பேசத் தொடங்கியபோது, "என்ன அம்பி! நீ கூட வால் இழந்த நரி மாதிரி ஆரம்பித்து விட்டாய்" என்று அதட்டிக் கேட்டார். அதற்கு மேல் அந்தப் பேச்சை வளர்க்காமல் நான் எழுந்து விட்டேன்.

"என்னடா ஆச்சு? காயா, பழமா?" என்று கேட்டாள் என் பாட்டி, நான் வீட்டுக்குத் திரும்பியதும்.

"காய்தான் பாட்டி! அந்தப் பையன் கல்யாணமே பண்ணிக் கொள்ளப் போகிறதில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிருனம்" என்று தெரிவித்தேன்.

பாட்டி, எரித்துவிடுவதுபோல் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "நான் சொன்ன, கேட்டயா? அவன் பிடி கொடுத்துப் பேச மாட்டானே? அவன் ராங்கியும் அவனும்!" என்ருள்.

பாவம், சர்மா! அவர் ஏன் காரணமின்றிப் பாட்டியின் கோபத்துக்கு ஆளாக வேண்டும் என்று எனக்கு வருத்தமாய் இருந்தது.

"பாட்டி, இதோ பாரு. அவர் சொல்வதும் நியாயந்தானே? அவர் மருமான் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்று சொன்னல், அதற்கு அவர் என்ன செய்வார்? அவன் என்ன குழந்தையா, அதட்டி மிரட்டி இணங்கச்செய்

வதற்கு? நீ இவரைப் போய்க் கோபிக்கிறயே?'' என்றேன்.

ஆனால், பாட்டியின் அபிப்பிராயம் மாறுவதாய் இல்லை.

"எல்லாம் இவன் மனசு வச்சால் ஆகும்டா'' என்று அவள் சொல்லி விட்டாள்.

## 2

விஷயம் இது தான்:

கல்யாணத்துக்கு ஒரு பெண் இருந்தது. அதற்கு வரன் தேடும் பொறுப்பைத் தற்காலிகமாக என் தலையில் கட்டியிருந்தார்கள். இல்லை; நானே தான் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்ல வேண்டும். ஏற்றுக் கொண்ட பிறகு தான், அதில் உள்ள சிரமம் எப்படிப் பட்டது என்பதை உணர முடிந்தது.

கல்யாணத்துக்குப் பெண்ணை வைத்துக்கொண்டு, வயது வந்த பிரம்மசாரிகள் யாரைப் பார்த்தாலும் அவர்களை "ஜாதகம் கொடு'' என்று நச்சரிக்கும் பெற்றோர்களை மனதார நான் சபித்த காலம் ஒன்று உண்டு. இவர்களின் உபத்திரவத்தைப் பார்த்தபோது, இன்ஷியூரன்ஸ் ஏஜண்டுகளுக்குக் கோவில் கட்டி வைக்கவும் நான் தயாராக இருந்தேன். அப்பொழுது நானும் கல்யாண் மாகாதவன். கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லை என்று சொன்னல், இவர்கள் விடமாட்டார்கள். "எல்லாத் தடிப்பசங்களும் இந்தக் காலத்தில் இப்படித்தான் சொல்லுகிறதுகள்! இது வெறும் பேச்சு!'' என்பது அவர்கள் எண்ணம்.

எனக்குக் கல்யாணம் ஆனதும் இந்தத் தொந்தரவு நீங்கிற்று. "அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டேன். அந்தச் சமயத்தில் தான், மங்களத்துக்கு வரன் பார்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். ஆனல், இதற்காக ஒருவரையும் நான் உபத்திரவப் படுத்தத் தயாராய் இல்லை!

மங்களம் எனக்கு எந்த விதத்தில் பந்துவாக வேண்டும் என்று கேட்டால், எனக்குச் சொல்லத் தெரியாது. அவ்வளவு கிட்டின உறவு! என் தாயின் சித்தியும், மங்களத்தின் பாட்டியும் உடன் பிறந்த சகோதரிகளாம். அப்படியென்றல் என்ன உறவு என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். அவள் தந்தை மகாலிங்க ஐயர் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயராக இருந்து 'ரிட்டயர்' ஆனவர். மாதம் பதினேழரை ரூபாய் பென்ஷன் வாங்குகிறர். ஏழு குழந்தைகள். மூத்த பையனுக்குக் கிட்டத்தட்ட என் வயசாகிறது. அதாவது, இருபத்தெட்டு. ஆனல், குழந்தைப் பருவத்தி லிருந்தே அவனுக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லை. சீமந்த புத்திரன் என்கிற கௌரவத்தைத் தவிர, வேறு அவனல் குடும்பத்துக்கு எத்தகைய ஒத்தாசையையும் எதிர்பார்க்க முடியாது. அவனுக்குப் பின் ஐந்து பெண்களும், கடைசியாக ஒரு பிள்ளையும் இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் இரண்டு மூன்று வயசு வித்தியாசம். கடைக்குட்டி பள்ளிக்கூடத்தில் படிக்கிறன். அவனுக்கு மூத்த சகோதரிகள் இருவருக்குக் கல்யாணம் ஆக வேண்டும். எப்படியோ சமாளித்துக் கொண்டு மூன்று பெண்களுக்குக் கல்யாணத்தைப் பண்ணி ஒப்பேற்றி விட்டார். அடுத்தபடியாகக் கல்யாணத்துக்கு இருப்பவள் தான் மங்களம்.

"விடு விடுன்னு மரம் மாதிரி வளந்துடுத்து! அவன் என்ன பண்ணுவான்? முழி பிதுங்கறது. எல்லாம் பொண்ணாய்ப் பொறந்து வச்சிருக்கே? அஞ்சு பொண் பொறந்தா ஆண்டின்னு சொல்லுவா" என்றாள் பாட்டி.

"என் பாட்டி! பிள்ளை பிறந்தால் மட்டும் படிக்கவைக்க வேண்டாமா?" என்று கேட்டேன்.

"படிக்க வைக்கிறான்; முடியாட்டா, பிச்சை எடுக்கவிடறான். பொண்ணை என்ன பண்றது? ஒருவன் காலில் கட்டித்தானே ஆகணும்?"

வாஸ்தவந்தானே பாட்டி சொல்கிறது? ஆனால், பெண்ணை அவள் சொல்கிறபடி ஒருவன் காலிலே கட்டுவதற்கு இரண்டாயிரம் மூவாயிரம் என்று செலவழிக்க வேண்டியிருக்கிறது என்பதை நினைத்தால், மகாலிங்க ஐயர் கஷ்டத்துக்கு விமோசனம் இருப்பதாக, எனக்குத் தோன்றவில்லை. ஒருதரம் அவரே எங்கள் ஊருக்கு வந்திருந்த போது, இப்படித்தான் சொல்லி அழுத்துக் கொண்டார். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட இரக்க மிகுதியில், நான் என்னையே மறந்திருக்க வேண்டும். அதனால்தான், மங்களத்துக்கு வரன் ஏதாவது அகப்பட்டால் பார்க்கிறேன் என்று நானும் சொல்லிவிட்டேன். அப்புறம் பதினைந்து நாளைக்கு ஒருதரம் அவரிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது, வரன் ஏதாவது அகப்பட்டதா என்ற கேள்வியுடன்.

அப்பொழுது சர்மாவின் மருமானைப் பற்றி யாரோ என்னிடம் சொன்னார்கள். சர்மா தான் அவனுக்குப் படிப்புக்குப் பணம் அனுப்பி உதவினாராம். நான்கைந்து மாதங்களுக்கு முன் அவரே என்னிடம் சொன்னதாக ஞாபகம், அவனுக்குத் திருச்சியில் ஓர் எலெக்ட்ரிக் கம்பெனியில் வேலை கிடைத்திருக்கிறது என்று. சர்மாவை ஓர் லட்சியவாதி என்று நான் கருதினேன். அத்துடன், அவர் சொன்னால், பையன் தட்டமாட்டான் என்றும் தோன்றிற்று.

## 3

"யார்? அம்பியா? உட்காரு" என்று என்னை வரவேற்றார் சர்மா.

நிலவு காயும் இரவு. வீட்டு வாசலில், பெஞ்சியில் உட்கார்ந்தபடி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். நானும் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

"சமையல் பாத்திரங்களை ஒழித்துவைத்து, சமையலறையை அலம்பிவிட்டு, இப்பொழுதுதான் வந்து உட்கார்ந்தேன். இந்தா போட்டுக்கொள்" என்று வெற்றிலைத் தட்டை என் பக்கம் நகர்த்தினார்.

வெற்றிலையை எடுத்துக் கொண்டு நான் தட்டைத் தடவியதைக் கண்டு, "என்ன தேடுகிறாய்? புகையிலையா? இன்று வாங்கவில்லை" என்று சிரித்தார். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"புகையிலை இல்லாமல் வெற்றிலை நீங்கள் போடமாட்டீர்களே?" என்று பேச்சை ஆரம்பித்தேன், சட்டென்று நான் வந்த காரியத்தைச் சொல்வது உசிதமல்ல என்று.

"வாஸ்தவந்தான் அம்பி. அதனால்தான் இன்று வெறும் வெற்

றிலே போட முடிகிறது. புரி கிறதா?'' என்று கேட்டார்.

"புரிந்து நாசமாய்ப் போச்சு!'' என்றேன்.

சர்மா சொன்னார்:

"ஒன்றுமில்லை, அம்பி. வாய் நன்றாக இருந்தால், புகையிலை இல்லாமல் ஒருபோதும் வெற்றிலை போட என்னால் முடியாது. இன்று, வாய் ஒரே புண்ணாய்க் குதறிப் போயிருக்கிறது. புகையிலையை வைக்க முடியவில்லை. அதனால்தான் வெறும் வெற்றிலை போடுகிறேன்.''

நான் சற்றுநேரம் மென்று விழுங்கினேன். வானத்தில் லேசான வெண்மேகங்கள் சந்திரனுக்குக் கீழே வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்த காட்சி, சந்திரனே குடல் தெறிக்க விழுந்தடித்துக் கொண்டு ஓடுவது போல் தோன்றச் செய்தது. அதுவும் ஒரு புதிராகவே பட்டது எனக்கு. ஒரு தரம் கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு விஷயத்தை ஆரம்பித்தேன்.

"சர்மாஜி!—''

சர்மா வெற்றிலை மென்றுகொண்டே, நடுவில் ஒரு வார்த்தையும் கூறாமல் கேட்டார். கடைசியில், "எனக்கு ஒன்றும் ஆக்ஷேபம் இல்லை, அம்பீ. ஆனால், பையன் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறானே, என்ன செய்வது?'' என்றார்.

அரை மணி நேரப் பேச்சுக்குப் பிறகு, மேலே பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்று ஏற்பட்டது. இஷ்டமில்லாதவனைத் தாம் வற்புறுத்த முடியாது என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார் சர்மா.

"சர்மாஜி! சற்று யோசித்துப் பாருங்கள். மனையைப் பராமரிக்கக் கூடிய நிலைமையில் உள்ள இளைஞர்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது நியாயமா? அம்மா திரி, பெண்கள் கன்னிகைகளாகவே இருந்துவிட, நம் சமூகம் இடம் கொடுக்கிறதா? பெண்ணைப் பெற்றவர்கள் வரன் கிடைக்காமல் தவியாய்த் தவிக்கிறார்கள். ஓர் ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு, அக்குடும்பத்துக்கு இராப் பகலாய்க் கவலையை உண்டுபண்ணும் ஒரு பிரச்னையைத் தீர்த்து வைப்பது மகத்தான புண்ணிய காரியம் இல்லையா? இது கடமை என்று கூடத் தோன்றுகிறதே—''

அப்பொழுதுதான் சர்மா கேட்டார், "என்ன அம்பி! நீ கூட வாலிழந்த நரிமாதிரி ஆரம்பித்து விட்டாயே?'' என்று. தாம் பிரம்மசாரியாகவே வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்து விட்டதை நான் குத்திக் காட்டுகிறேன் என்று நினைத்தாரோ என்னவோ!

"பண்ணிக்கிறேங் கறவனைக் கூட இவன் வாண்டான்னு தடுத்துடுவனே! இவன் வாழ்கிறானல்லவா குடியும் குடித்தனமுமாய்! அந்த மாதிரியே எல்லாரும் இருக்கணும்னு நினைச்சிண்டிருக்கான் போலிருக்கு'' என்று ஒரு முடிவாகத் தீர்ப்புச் சொல்லி விட்டாள் எங்கள் பாட்டி.

## 4

அதன் பிறகு சில மாதங்கள் வரை நான் சர்மாவைப்

பார்க்கவில்லை. அப்புறம் ஒரு நாள் அவரே என்னைத் தேடிக் கொண்டு திடு திடென்று என் வீட்டுக்கு வந்தார். "என்ன அம்பி! கண்ணிலேயே படவில்லையே?" என்று கேட்டுக் கொண்டே தான் வந்தார்.

உட்காரச் சொல்லி, வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து வைத்து, நானும் உட்கார்ந்தேன்.

புகையிலையை வாய் ஓரத்தில் திணித்துக் கொண்டு, பேச்சை ஆரம்பித்தார் சர்மா.

"அந்தப் பயல் வந்திருந்தான்—வெங்கிட்டு! நாலு நாள் லீவில் வந்தானாம். நீ வருவாய் வருவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் நானே கேட்டு விட்டேன். அவன் சம்மதிக்கவில்லை.—"

"பரவாயில்லை, தள்ளுங்கள். இன்னும் இரண்டொரு ஜாதகங்கள் இருக்கின்றன. அதில் எதையாவது 'ஸெட்டில்' பண்ணி விடலாம் என்று இருக்கிறேன்" என்றேன்.

சர்மா வெளியே சென்று எச்சிலைத் துப்பிவிட்டு வந்தார். "பரவாயில்லை யாவது, அம்பி! அவன் எப்பொழுது இப்படி ஒரே பிடிவாதமாய் முடியாது என்கிறானோ, அப்பொழுது இந்த வருஷமே பெண்ணுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று நினைத்துக் கொள்!" என்றார்.

இன்னொரு புதிர்! அன்று நான் சொன்ன வார்த்தைகள் சரியாக அவர் மனதில் தைத்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ஆனால், நான் ஒன்றும் சொல்லவில்லை. வெறுமனே புதிர்ப் போட்டுக் கொண்டு பேசுவதில் என்ன பிரயோஜனம், காரியத்தில் ஒன்

### சங்கீதத்தின் சக்தி

'பக்தி பாவம் பொருந்திய இசையோடு கலந்த கீதம் எனது இதயத்தில் ஆழ்ந்து பதிந்திருக்கிறது. அதே கீதத்தை வசனத்தில் சொன்னால், எனது இதயத்தில் ஓர் உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. அதே கீதங்களை அபஸ்வரத்தோடு பாடியபோது அவற்றின் பொருள் எனக்கு ஒருவித உணர்ச்சியையும் உண்டு பண்ணவில்லை; முறைப்படி பாடியபோது, பொருள் என் மனசில் நின்று ஒளிவிட்டு விளங்கிற்று.........சங்கீதமானது என் வாழ்க்கையில் எப்போதும் நல்ல பயனைத் தந்திருப்பதால், மற்றவர்களின் வாழ்க்கையிலும் அது பயனளிக்கக் கூடும் என்ற பொருளில் நான் இதைச் சொல்லவில்லை. அதற்கு மாறாக, அநேகர் தங்கள் இந்திரிய உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக இசையைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்பதையும் நான் அறிவேன்.'

— காந்திஜி

றும் செய்யாமல் என்று என் மனம் கசந்து போயிருந்தது. அவர் பேச்சிலும் இப்பொழுது எனக்குச் சுவாரஸ்யம் தட்டவில்லை. இதை வெளிப்படையாகவே காண்பித்து விட்டேனோ என்னவோ, சர்மா அதிக நேரம் உட்கார்ந்திராமல் சட்டென்று எழுந்து போய் விட்டார். போகும்போது, கும்பகோணத்தில் மகாலிங்க ஐயர் வீட்டு விலாசத்தை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி வாங்கிக் கொண்டு சென்றார்.

"எங்கே வந்தான்?" என்று விசாரித்தாள் பாட்டி.

"புதிர்ப் போடுவதற்கு!" என்று சொன்னேன்.

"இப்படித்தாண்டா வேதாரண்யத்தில் ஜடாவல்லபர்னு ஒத்தர் இருந்தார். அவர் கடைசியில் என்ன பண்ணினர் தெரியுமா?—" என்று பாட்டி கதை சொல்லத் தொடங்கி விட்டாள்.

ஜடாவல்லபர் பண்ணினது விசித்திரமான காரியம்தான். ஆனல், அதையெல்லாம் தூக்கியடிப்பதாய் இருந்தது நடேச சர்மா ஒரு மாசத்துக்குப் பின் செய்த காரியம்.

நாங்கள் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். எதிர் வீட்டு அம்புலுவுக்கு இரட்டைக் குழந்தை பிறந்திருக்கிறதைப் பற்றி அப்பொழுது தபால்காரன் கொடுத்த கல்யாணக் கடிதத்தைக் கொண்டு வந்து சுப்புணி இரைந்து படிக்கத் தொடங்கினன். "மகாலிங்க ஐயர் புதல்வி சௌபாக்யவதி மங்களாம்பாளுக்கும் விக்கிரவாண்டி பட்டாபிராம சர்மாவின் ஜேஷ்ட குமாரன் சிரஞ்சீவி நடேச சர்மாவுக்கும்—" என்று அவன் படித்ததும், எங்களுக்கு உண்டான ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது.

என் மனதில் குமுறிய உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாமல் நான் பேசாமல் இருந்து விட்டேன். ஆனல் பாட்டி மட்டும் தன் மனதில் உள்ளதை ஒளிக்கவில்லை. அவள் சொன்னள்:

"இப்பொழுது தாண்டா அவனைப்பத்திப் பேசப் பிடிக்கிறது! குடியும் குடித்தனமுமாய் லக்ஷணமாய் இராமல், தடிக்கட்டேலே போறவன் மாதிரி, தானே பொங்கித் தின்னுண்டு என்ன வாழ்வு வேண்டியிருக்கு!"


சர்மா தம்பதிகளை மனப்பூர்வமாக வரவேற்க, எங்கள் பாட்டி தயாராக இருந்தாள். பாட்டியின் மனப் பான்மை எனக்குப் புரியவில்லை. அதுவும் ஒரு புதிராகவே இருந்தது எனக்கு.

✲

## அமெரிக்கர் கண்களில்.......

ஜான் கந்தர் என்ற பிரபல ஆசிரியர் எழுதுகிருர்:

"அங்கே புருக்களும் குரங்குகளும் புனிதமானவையாகக் கருதப் படுகின்றன. ஹோட்டல்களில் மணி கிடையாது. சோடாப் புட்டிகளில் கண்ணாடிக் குண்டைப் போட்டு மூடி இருக்கிருர்கள். இந்தியாவில் ஒரு மயிலைக் கொன்ருலும் பத்து வருஷ தண்டனை அநுபவிக்க வேண்டும். அமெரிக்க சிகரெட்டுகள் அமெரிக்காவில் கிடைப்பதைக் காட்டிலும் இந்திய நாட்டில் விலை மலிவாகக் கிடைக்கின்றன. பார்சிகள், பிரேதத்தைக் கழுகுகளுக்கு உணவாக அளிக்கிருர்கள். 35 கோடி மக்களில் இரண்டரைக் கோடி ஜனங்களுக்குத் தான் எழுதப் படிக்கத் தெரியும். சிம்லாவில் வைசிராயையும் கவர்னர்களையும் தவிர, வேறு யாரும் மோட்டார் வைத்துக்கொள்ள அனுமதி கிடையாது. இந்தியப் பத்திரிகைக்காரர்களில் 90 சதவிகிதம் பேர் சென்னை வாசிகள். ரூபாய் நோட்டுக்களில் எட்டு விதமான பாஷைகளைப் பார்க்கலாம்."



# மலடி

பூவாளூர் சுந்தரராமன்

ஆவணி மாதத்தில் அன்று தான் கடைசி நாள். அகண்ட காவிரியில் மட்டும் ஆடி மாதத்தில் ஏறின வெள்ளம் குறையவில்லை. கண்ணுக் கெட்டின வரையிலும், ஒரே தண்ணீர்க் காடு. மாலை வெயிலில் அவ்வளவும் தங்கத்தை உருக்கி வார்த்தால் போல, அழகான காட்சி அளித்துக்கொண்டிருந்தது. வயல்களில் உழுதுவிட்டு வீடு திரும்பும் ஜனங்கள், அங்கங்கே நீர்த் துறைகளில் தலை முழுகிக் கொண்டிருந்தார்கள். கிராமத்துப் பெண்கள், மண் குடங்களிலும் செப்புத் தோண்டிகளிலும் தண்ணீர் எடுத்துக் கொண்டு, கூரை வழியாகப் புகை கிளம்பும் தங்கள் குடிசைகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். கோவிலில் நடந்த சாயங்கால பூஜையின் மணி ஓசை காற்றில் மிதந்து வந்தது. தூரத்தில் நாதசுரக்காரன் அந்தி நேரத்துக்கு ஏற்ப வாசஸ்பதி ராக ஆலாபனம் செய்து கொண்டிருந்தான்.

ஆனால், படித்துறையில் நிற்கும் சாவித்திரி, அவையொன்றிலும் தன் மனதைப் பறிகொடுத்து நிற்கவில்லை. தன் உள்ளத்தில் பொங்கிக் குமுறும் பெரிய சோக வெள்ளத்தைத் தணிக்கத்தான் அவள் அங்கே வந்தாள். இதே குணசேகரபுரத்துக்கு இதற்கு முன் ஒரு முறை வந்திருக்கிறாள், தன் கணவனுடனும் மாமியுடனும்; இதே அகண்ட காவிரியில், தன்னுடைய கல்யாண சோபை—காலில் நலங்கும் கையில் மருதாணியின் வர்ணக்குழம்பும்—கலையாமல் இருக்கும் போது, நீராட வந்திருக்கிறாள்; இதோ கோயில் கொண்டு இருக்கும் சீனிவாஸப் பெருமானுக்கு அர்ச்சனை முதலானவை செய்துமிருக்கிறாள். இவ்வளவும் எட்டு வருஷங்களுக்கு முன்; அவளுடைய திருமணம் ஆன எட்டாம் நாள். அப்போது இதே அகண்ட காவிரியின் வெள்ளமும் கண்ணுக்கெட்டும் வரை தென்படும் தென்னை மாஞ் சோலைகளும் அவளுடைய சந்தோஷமான இதயத்தில் இன்னும் பன்மடங்கு பெரு மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கத்தான் செய்தன.

ஆனால்!

எட்டு வருஷங்களுக்குப் பிறகு, அவளுடைய நிலைமை என்ன! அவளுக்கு 'மலடி' என்ற பட்டம் கிடைத்திருக்கிறது. பெண்களில் 'மலடு' என்றால், அவள் குடும்பத்தில் மூத்தாளாக இருக்க வேண்டியது தான். சாவித்திரியின் புருஷன்

அவள் மலடி என்றார்கள். அவள் வாழ்வு பறிபோயிற்று. அவள் மலடி! உண்மை அதுதானா? அந்தப் பேதையின் உள்ளம் எப்படித் தவித்தது! அதற்கு ஆறுதல் எங்கே? விபரீதமான தீர்மானத்தை, பயங்கரமான தீர்மானத்தை, அவள் செய்கிறாள். அது பூர்த்தியாகிறது. ஆனால், மனதுக்குச் சாந்தியுண்டா? வாழ்வு தான் திரும்பியதா?

# சிவாஜி

## தையல் நூல்

✲

தைக்கவோ கிழிசலை
மூட்டவோ மிகச்
சிறந்த நூல்.

✲

இந்தியாவில் செய்வோர்:

**ஆக்மி த்ரெட் கோ, லிமிடெட்.**

பாங்க் ஆப் பரோடா பில்டிங்
அப்பாலோ தெரு, பம்பாய்.






# டோங்ரே

பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்
பற்கள் வளர
உதவி செய்கிறது

## அறிவிப்பு

சக்தி பத்திரிகை சம்பந்தமான கடிதங்கள், பின்வரும் விலாசத்துக்கு எழுதப்பட வேண்டும்:

சக்தி,
115-இ, மோபரீஸ் ரோடு,
ராயப்பேட்டை

புத்தகங்கள் சம்பந்தமான கடிதங்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதப்பட வேண்டும்:

சக்தி காரியாலயம்,
261, சைனு பஜார்,
சென்னை

இதை அன்பர்கள் கவனிக்க வேண்டும்.

மானேஜர்:
சக்தி

# சக்தி மலர்

## மாதம் ஒரு புத்தகம்

அரசியல், பொருளாதாரம், சயன்ஸ், கதை, கட்டுரை, கவிதை, இலக்கியம், சரித்திரம், வேதாந்தம், அயல் நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில்—இவைகள் தனித்தனியே ஒவ்வொரு தமிழ் மாத முதல் வாரத்திலும் வெளிவரும், [ஆங்கிலத்தில் வெளியாகும் 'பெங்குவின்', 'பெலிகன்' மாதிரி இருக்கும்.]

**[இதுவரை சக்தி மலரில் 28 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. விலைப் பட்டி தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பிக்கப்பெறும்.]**

அரசியலிலே பல கிளர்ச்சிகள், இலக்கியத்திலே புது நூல்கள், சமூகத்திலே சீர்திருத்தங்கள், கதையிலே மறு மலர்ச்சி — இப்படி யெல்லாம் எத்தனையோ இயக்கங்கள், நம்மிடம் ஏற்பட்டு விட்டதாக நாம் ஆனந்தக்களிப் பெய்துகிறோம். ஆனால் எந்தத் துறையிலாயினும் உண்மையிலே முன்னேறியிருக்கிறோமா? துளியும் இல்லை. **நமது பிற்போக்குக்கு** என்ன காரணங்கள்? அவைகளை யெல்லாம், சக்தி மலரில் 29-வது புத்தகமாக வெளிவரும் **'நமது பிற்போக்கு'** எனும் புத்தக மூலம் நிர்த்தாட்சண்யமாய் விளக்குகிறார் வெ. சாமிநாத சர்மா.

ஒவ்வொரு சக்தி மலரும் **விலை ஒரு ரூபாய்.** தபால் செலவு **மூன்றணா.** பத்து மலர்களுக்குச் சேர்த்து ஒரே தடவையில் ரூபாய் **பத்து** அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்.

### சக்தி காரியாலயம்

**261, சைனாபஜார், சென்னை**

நடேசன், முதலில் இரண்டாவது கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்ளவே யில்லை. அவனுடைய தாயார்—அவளும் ஓர் இளையாள்தான்—சாவித்திரி புக்ககம் வந்த மூன்ருவது வருஷத்திலேயே இந்த ரோதனத்தை ஆரம்பித்து விட்டாள். அவள் காட்டிய காரணங்களும் திருஷ்டாந்தங்களும், வக்கீல் குமாஸ்தாவான நடேசனுக்கே புதுமையாயிருந்தன! "சாவித்திரி மலடிதான்; ஏன் தெரியுமா? அவளுடைய அத்தையும் மலடிதானும்; பெண்கள் தங்கள் அத்தையைக் 'கொண்டு' தான் பிறப்பார்கள்!" இந்தத் தர்க்கத்தில் நடேசன் பதிலே சொல்லவில்லை.

அவனது நிலைமையில் அவனுக்கு ஒரு குழந்தை தேவையேயில்லை. "என்ன ஆஸ்தியும் பாஸ்தியும் தட்டுக் கெட்டுப் போகிறது? குழந்தையைப் பெற்றவர்கள் படும் சுகம் தெரிந்துதான் கிடக்கு" என்று பேசுவான், வாயால் தைரியமாக; அவன் செல்வ நிலைமையில் குழந்தை பிறவாதிருப்பது, ஓர் அதிர்ஷ்டம் என்று கூட நினைத்திருந்தான். ஆனலும், பிறத்தியாருக்கு இந்தக் குடும்ப லௌகிகம் தெரிவதில்லை! க்ஷேமம் விசாரிக்க வருபவர்கள் அத்தனை பேரும், முதலில் "எத்தனை குழந்தைகள்?" என்று தானு கேட்க வேண்டும்? "உன் மனைவி குளிக்கிருளாடா, நடேசா!" என்று தானு, அவனுக்குத் தெரிந்த பாட்டிமார்கள் அனைவரும் கேட்டுத் தொலைக்க வேண்டும்? "ஏண்டி அம்மணி! தலைச்சன் என்ன? பேரனு, பேத்தியா?" என்று; தாயின் துக்கத்தைக் குத்திக் காட்ட வேண்டும்?

ஐந்தாவது வருஷம் பிறந்தும் கூட, குடும்பத்தில் ஜனத்தொகை அதிகரிக்க வில்லை! அப்போதுதான் நடேசனுக்குக் கொஞ்சம் அசடு தட்டியது; தன் மனைவி மீது ஒரு சந்தேகம்; ஒரு வேளை தன் தாயார்—மிகவும் அனுபவப் பட்டவள்—சொல்வது உண்மையாக இருக்குமோ என்று! இந்தக் குழப்பத்தின் முடிவு சில நாட்களுக்கு முன், அவனுக்கு ஊர்ஜிதம் ஆயிற்று. பிறகு, சாவித்திரியின் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டே, இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தான். இரண்டாம் கல்யாணமானதால், சீனிவாசப் பெருமான் சந்நதியில் ஒரே நாள் அது நடந்தது. அதற்குத் தான் சாவித்திரியும் இப்போது வந்திருந்தாள்.

## 2

சாவித்திரிக்குத் தன் கணவன் மற்ருெரு கல்யாணம் செய்து கொள்வதில் வருத்தமே கிடையாது. ஆனல், தன் நிலைமை இனி அந்தக் குடும்பத்தில் எவ்வாறு இருக்கப் போகிறது என்பது தான் அவளுடைய சிந்தனை; தனக்கு இனி அந்த வீட்டில் அழுகுக்கோ, அதிகாரத்துக்கோ இடம் கிடையாது; வயிறு வளர்க்க, தேகத்தால் உழைக்க வேண்டும்; 'கட்டிய' தோஷத்துக்கு ஒரு வாய்ச் சோறு; மானத்தைக் காப்பாற்ற ஒரு புடவை! சுகத்துக்கும் சௌக்கியத்துக்கும் இனி இடம் ஏது? தன்னுடைய அழகு இனிப் பிறர் பழிக்கத் தானே! தன்னுடைய பெயர் இனி ஒவ்வோர் இல்லத்திலும் ஏசிக் காட்டுவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கப் போகிறது!

ஆனல், அவள் உண்மையில் மலடிதானு? தன் தாய் பத்துக்

குழந்தைகளைப் பெற்றவளாச்சே? அவள் வயிற்றில் பிறந்தவள்தானே தானும். இதை யார் கேட்டார்கள்? ஆண்களும் மலடுகளாக இருப்பார்கள் என்று எவரோ சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறாள். தன் கணவனுடைய தகப்பனருக்கு—மாமனார்தான்—முதல் மனைவியிடத்தில் குழந்தையே கிடையாது. தன் மாமியைக் கல்யாணம் செய்து கொண்டதும், குழந்தை பிறந்ததாம். ஆனால், தன் மாமியின் நடத்தையில் அப்பொழுது சிலருக்கு நம்பிக்கையில்லை! இலை மறைவு காய் மறைவாக அவதூறுகள் கிளம்பின. இன்று அதே அம்மணி அம்மாள் 'சட்டம்' படிக்கிறாள். இல்லற தர்மம் அவளுடைய நகக் கண்களில் அடங்கி யிருக்கிறது. அந்த மலட்டு மாமனாருடைய வழியில் வந்த தன் கணவனே, ஒரு வேளை ஏன் மலடாக இருக்கக் கூடாது?

சாவித்திரியின் மனம் பதறிற்று, இந்த எண்ணங்களால்; தன்னுடைய குடும்ப வாழ்வு இனி நாசமடைந்து விட்டது என்று கண்டு கொண்டாள். ஏக பத்தினி விரதம் இல்லாத இடதில், பதிவிரதை என்பதற்கு என்ன அர்த்தம்? ஊர், சமூகம், பந்து ஜனங்கள், கணவன் எல்லோரும் அவள்மீது, அவளால் ஏற்றுக் கொள்ளப் படாத, தெய்வ நிந்தனை போன்ற, ஒரு பழியைச் சுமத்தி விட்டார்கள். இனிப் பழியைத் துடைக்கத்தான் எண்ணினாள்; இந்த இல்லறச் சிக்கலை எப்படியேனும் விடுவிக்க விரும்பினாள். அதெப்படி? எப்படி? உருவற்ற ஏதேதோ கோர எண்ணங்கள், அவள் மனதைக் கலக்க, காற்றிலே பறக்கும் சருகுபோல, தன்னுணர்வற்று, அவள் வெளியே கிளம்பினாள். கையிலே கொணர்ந்த நீர்க் குடத்தையும் கட்டியிருந்த பட்டுச் சேலையையும், கரையோரத்தில் சுழிந்த ஒரு சுழலில் போட்டு விட்டு, ஒரு பழம் புடவையைக் கட்டிக் கொண்டு, மனம் போன போக்கிலே கால் வீசி நடந்தாள், அந்தக் கும்மிருட்டிலே தன் குடும்ப பந்தத்தை அறுத்துக் கொண்டு!

சாவித்திரி வெள்ளத்திலே போய் விட்டாள் என்று, உற்றாரும் உறவினரும் அடுத்த நாள் முடிவு கட்டினார்கள். அவள் கட்டியிருந்த புடவையும், எடுத்துச் சென்ற குடமும் அதற்குச் சாட்சிகளாய் நின்றன. இம்மட்டில் அந்தக் கல்யாண முழக்கத்தில் அவளுடைய 'கல்லெடுப்பையும்' செய்து தீர்த்தான் நடேசன். அவனுக்கு உள்ளூர வெகுவாகத் துக்கம். இருந்தாலும், புது இல்லற வாழ்க்கையில் அதைப் போற்ற இடமே இல்லை.

நாட்கள் ஓடி, வருஷங்களாய்க் கழிந்தன. நடேசன் இரண்டாவது மணம் செய்து கொண்டு, நான்கு வருஷங்கள் ஆகிவிட்டன. புதிய மனைவி சரஸ்வதியும் மலடாகவேதான் நின்றாள். ஊராருடைய கண்கள் விழித்துக் கொண்டன. யார் மலடு? அவளா? அவள் அல்ல, அவள் அல்ல; இவன் தான்—இது ஊராரின் புதிய தீர்ப்பு, வம்பு.

நடேசன் இப்பொழுது பூஜை புனஸ்காரங்களில் பக்தியும் சிரத்தையும் காண்பித்தான். ராமேசுவரம் போய் வந்தான்; குழந்தை பிறந்தால், சேது, சேதுராமன் என்றெல்லாம் பெயர் வைப்பதாக வேண்டிக் கொண்டான். சரஸ்வதி அரச மரத்தைச் சுற்ற ஆரம்

பித்தாள். ஆனல், பலன் என்னவோ நாஸ்திதான்!

நடேசனுடைய மனது தவித்தது. சாவித்திரியின் தற்கொலைக்குத் தானே காரணம் என்று மனச் சாட்சி இடித்துக் காட்டியது. அவள் மலடி அல்ல, தானே மலடாக இருக்க வேண்டும் என்று எண்ணி எண்ணி அழுதான். கடவுள் தன்னை மிகவும் சோதிக்கிறார் என்று தலையிலடித்துக் கொண்டான். கண்ணவிந்தபிறகு, இருட்டிலே சூரிய நமஸ்காரம் பண்ண ஆரம்பித்தான்!

## 3

சாவித்திரியின் உடம்பில் ஒட்டிக்கொண்டிருந்த ஒன்றிரண்டு நகைகள் போன இடம் தெரியவில்லை. பழைய கந்தல் துணி, துக்கம், ஏக்கம், வஞ்சிக்கப்பட்ட மனே பாவம் எல்லாம் சேர்ந்து அவள் நினைத்த உருவைத் தந்து நின்றன. சில நாட்களுக்கு முன் இல்லறத்தில் அடக்க ஒடுக்கமாகப் பதி பூஜை செய்த அவள், இன்று பைத்தியக்காரியானள்! ஆம், காரியப் பைத்தியக்காரி; வேஷப் பைத்தியம்! ஆனல், நாளாக நாளாக, வேஷமே உண்மையான சொரூபத்தைத் தந்துவிடு மல்லவா!

கால் கொண்டு போன திசையில் சென்றாள். வாய் கொட்டின சம்பந்த மற்ற பேச்சுக்களும் அர்த்த மற்ற பாடல்களும், அவளைக் கண்டவர்கள், 'ஐயோ, பாவம்! பயித்தியம் போலே இருக்கு!' என்று அனுதாபப் படும்படி செய்தன. இரவு இல்லை, பகல் இல்லை; மழை, வெயில், பனி, காற்று முதலிய இயற்கைத் தத்துவங்கள் அவளுடைய போக்கிலே ஒரு மாறுதலையும் செய்யவில்லை. கால் வலித்தால் எந்த இடத்திலும் அவளுடைய கட்டையைச் சாய்ப்பாள்; பசித்தால் எவரிடத்திலும் பிச்சை. நாடோடி வாழ்க்கை. ஆடை முழுதும் கந்தலாயிற்று. கந்தலாய்ப் போனு லென்ன? மானமும் அவமானமும் யாருக்கு? போக பாக்கியங்களோடு வாழ்பவர்களுக்கு—அவை பறி போகாது காப்பாற்ற வேண்டுமே என்று அஞ்சுபவர்களுக்கு! அவள் அதையெல்லாம் இழந்து விட்டாள்; துறந்து விட்டாள். அவள் வாழ்க்கையைப் பலி கொண்ட சமூகத்தின் மீதே பழி வாங்க எழுந்த வொரு பேய் எண்ணமே, அவளது பித்தின் மூல காரணம். அதன் முடிவையும் அது எட்டி விட்டது. அவளுடைய பைத்தியக்கார உடலம் கரைபட்ட தாயிற்று

சாவித்திரி கர்ப்பவதி யானள். பைத்தியமும் விலக ஆரம்பித்தது. உடல் மாசுபட்டது; உள்ளம் வறண்டது. முன் போல ஊர் ஊராக ஓட முடியவில்லை. வீட்டின் ஏக்கம், வறண்ட பாலையில் நடந்தவனுடைய நீர் வேட்கை போல, மிகுந்தது. வழியில் சத்திரங்களிலும் சாவடிகளிலும் இளைப்பாறி, தன் புக்ககத்தை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தாள்.

அதே குணசேகரம்! ஐந்து ஆண்டுகளுக்கு முன் தன்னை வீட்டிலிருந்து துரத்திய கர்ம பூமி! அன்று கல்யாணமான புதிதில் மனதில் நிறைந்து வழிந்த ஆனந்தம், திருப்தி, லஜ்ஜை, கர்வம் எல்லாவற்றையும் கண்ட அதே சீனிவாசப் பெருமாள்; தன் இல்லற வாழ்வில் பெரிய சிக்கலை உண்டாக்கி, தான் மனம் குழம்பி வெறி பிடித்து ஓடின

போதும் சாட்சியாக நின்ற பெருமான்; இன்று உடலிலே மாசுடன், பிறர் வெறுக்கத் தக்க நிலையில், பழிக்குப் பழியாக நின்று பாவத்தை ஏற்றுக் கொண்டு வந்தவளையும் காணட்டும் அந்தக் கருணை வள்ளல்!

அகண்ட காவிரியின் கரையில் நிலா வெளிச்சத்தில் படுத்துக் கொண்டு, தான் பிறந்தது முதல் அன்று வரையிலும் நிகழ்ந்த தன் வாழ்க்கைக் கதையை, சாவித்திரி நினைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். வயிறு வலி கண்டது. சில மணி நேரத்தில் குழந்தையை அணைத்துக் கொண்டு தளர்ச்சியின் மிகுதியால் மயங்கிக் கிடந்தாள். காலையில் துறைக்கு வந்த எவரோ கொஞ்சம் கஞ்சியும் மருந்தும் போட்டார்கள்.

## 4

குழந்தை அவளையே உரித்து வைத்திருந்தது. பெண் குழந்தை என்றதும், அவளுக்குத் திரும்பவும் அடக்க முடியாத துக்கம்; பிற்காலத்தில் அதுவும் சமூக நிர்ப்பந்தங்களால் என்ன சங்கடப்படப் போகிறதோ என்ற கவலை. சில சில வேளைகளில் அந்தக் குழந்தையைக் கொன்று விடலாமா என்று கூடத் தோன்றும். ஆனல், உலகத்துக்கு—அவள் மீது பழி சுமத்தின கூட்டத்துக்கு—உண்மையைக் காட்டிவிட்டு, இந்த நீச உடலை அழித்துக் கொண்டு விட வேண்டும் என்ற ஆசை என்னுவது?

கையில் குழந்தையை எடுத்துக் கொண்டு, தன் ஊர் நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஊரை அடையும் பொழுது, நன்ருக இருட்டி விட்டது. காற்றும் மழையும், அவளுடைய பாவத்தைக் கொட்டிக் கொண்ட உலகத்தையே அழித்து விடுவது போல, உக்கிரமாயிருந்தன. பெரு மழைக்குத் திண்ணைகளில் நடு நடுவே நின்றும், தூற்றலில் நடேசனுடைய வீட்டை நாடியும், வந்து கொண்டிருந்தாள். அதோ அந்தக் கோடி வீடுதான்; ஒரு காலத்தில் அவளுடைய அதிகாரம் நிலவின இடம்; அழகு செய்த கோவில்! வாசல் திண்ணையில் கம்பிக் கதவு போடப் பட்டிருந்தது. வாசற்படியிலேயே உட்கார்ந்து கொண்டு விட்டாள், குழந்தையைத் திண்ணை ஓரமாகப் படுக்க வைத்து விட்டு. உள்ளே அவளுடைய கணவன் — இப்போதல்ல; ஒரு காலத்தில்!—அவன் விஷ்ணுசஹஸ்ர நாம பாராயணம் செய்து கொண்டிருந்தான், தான் செய்த பாவத்தின் பரிகாரம் போல! அதிலிருந்து அவன் இன்னும் சாப்பிட வில்லை யென்று தெரிந்தது. சாவித்திரி சாப்பிட்டு நான்கு நாட்கள் இருக்கும். அவ்வளவு இளைப்பிலே நடந்து வந்த களைப்பு, மழை ஈரத்தில் நனைந்தது வேறு. எல்லாம் சேர்ந்து கொண்டு அவளுக்கு ஒரு மயக்கம் வந்தது போல் தோன்றிற்று. அப்

### புத்தக இரவல்

பிரஞ்சு இலக்கியத்தில் மிக உயர்ந்த ஸ்தானம் வகித்தவர் அனடோல் பிரான்ஸ். அவர் சொல்லுகிருர்:

"புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். வாங்கியவர்கள் யாரும் திருப்பிக் கொடுப்பதில்லை. என் வாசக சாலையில் இருக்கும் புத்தகங்கள் எல்லாமே, மற்றவர்கள் எனக்கு இரவலாகக் கொடுத்தவையாகும்."

படியே சாய்ந்து விட்டாள் கீழே.

பாராயணம் ஆனதும், சாப்பிட்டு விட்டுக் கை கழுவ வாசலுக்கு வந்தவனின் காலில், சாவித்திரியின் உடல் தட்டுப்பட்டது. விளக்கை எடுத்து வரச் சொல்லிப் பார்த்தான். ஒரு ஸ்திரீயும் ஒரு சிசுவும்; சிறிது உற்றுப் பார்த்ததும், "ஐயோ, சாவித்திரி யின்ன!" என்று அவன் பதறினன். கூடத்தில் பலகாரம் செய்து கொண்டிருந்த அம்மணியும் ஓடோடி வந்தாள். எல்லோரும் திக்பிரமை பிடித்தவர் போல் நின்றார்கள். நடேசன் சாவித்திரியின் சரீரத்தை அசைத்துக் கொண்டே, "சாவித்திரி இந்தா, இங்கே பாரு!" என்றான். ஒரு தடவை அவளுடைய கண்கள் திறந்தன. பார்வை அவன்மேல் விழுந்தது. பிறகு, கண்கள் நிரந்தரமாக மூடிக் கொண்டன. அதே சமயத்தில் பக்கத்தில் திண்ணையில் கிடந்த குழந்தை 'வீணீர்' என்று கதற ஆரம்பித்ததும், நடேசனுடைய கைகள் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு, "ஐயோ, பாவீ! அவளுடைய மனதைப் புண் படுத்திக் கொன்று விட்டேனே!" என்று அலறினன். அந்த அலறல், சில்லிட்டுப் போன சாவித்திரியின் காதில் எங்கே விழப் போகிறது?

## எதிரி நாடுகள் உறவு!

யுத்தம் தொடங்கி ஐந்து வருஷங்க ளாகின்றன. ஜெர்மானியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே உள்ள பகைமை உணர்ச்சி கொஞ்சநஞ்சமல்ல. ஆனல், பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் இடையே இன்னும் சில தொடர்புகள் இருந்து வருகின்றன என்பதைக் கேட்டு யார்தான் அதிசயப்படாம லிருக்கமுடியும்?

முதலாவதாக, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இரு நாட்டு யுத்தக் கைதிகளுக்கும் கடிதப் போக்குவரவு நடந்துவருகிறது. இரண்டாவதாக விஞ்ஞானப் பத்திரிகைகள் இரு நாடுகளுக்கும் தாராளமாகப் போய்வருகின்றன. மூன்றாவதாக, விமானத் தொடர்பு. பிரபல ஜெர்மன் பத்திரிகையான 'வோல்கிஷோர் பிபோபாக்டர்' பெர்லினில் வெளியான நாலாம் நாள், லண்டன் தெருக்களில் விற்பனைக்கு வந்துவிடுகிறதாம். அதேமாதிரி பிரிட்டிஷ் பத்திரிகைகளும் ஜெர்மனிக்குச் செல்லுகின்றனவாம். நான்காவது தொடர்பு மிகவும் வியப்பானது. திரிப்போலியிலிருந்து பெர்லினுக்கு ஒரு ஸ்பெஷல் ரயில் போகிறதாம்! அதற்கு 'டாரஸ் எக்ஸ்பிரஸ்' என்று பெயர்.

## மின்சாரமும் மதாசாரியர்களும்

"மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ, வெளிச்சமாகவோ வெவ்வேறிடங்களில் வெவ்வேறு படித்ததாகத் தோன்றுமாயினும், அந்தப் பிரகாசம் உண்டாவதற்கு மூலகாரணமான மின்சாரமோ ஒரே ஒரு பொது இடத்திலிருந்துதான் வருகிறது. அதேபோல, வெவ்வேறு காலத்தில் தேசங்கள் தோறும் தோன்றிய மதாசாரியர்கள் அனைவரும், சர்வ சக்தியுள்ள ஒரே ஒரு மூலப் பொருளிடத்திலிருந்து இடைவிடாது பெருகிக் கொண்டிருக்கும் சைதன்யச் சுடரை வெளிவிடும் தீபஸ்தம்பங்களைப் போன்றவராவார்கள்."

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# குழந்தை வரம்

எஸ். வி. எஸ்.

சங்கரலிங்கம் பிள்ளை அவர்களுக்கு எத்தனையோ பாக்கியங்கள். வீடு, வாசல், நிலம், நெட்டு, ஆஸ்தி—பாஸ்தி இவை ஒன்றுக்கும் குறைச்சலில்லைதான். ஆனால், ஒரே ஒரு குறை. ஒரே ஒரு பாக்கியந்தான் கிடையாது. அதுதான் புத்திர பாக்கியம்.

'புத்' என்னும் நரகத்தைக் கடக்க, அவர் செய்யாத தான தருமங் கிடையாது. அன்ன தானம், வஸ்திர தானம், நில தானம், செருப்பு தானம் என்று பல தானங்கள் செய்திருக்கிறார். சுற்றாத அரச மரங்களும் கிடையாது. க்ஷேத்திராடனம்-தம்பதிகளாக - செய்யாத க்ஷேத்திரங் கிடையாது. தீர்த்தமாடாத தீர்த்தங் கிடையாது. கன்யாகுமரியிலிருக்கும் வாயாடிச் சாமியார் முதற்கொண்டு, காசி மௌன ஸ்வாமிகள் வரைக்கும் உள்ள சகல சாமியார்கள் காலிலேயும் விழுந்திருக்கிறார். விழுந்து என்ன பயன்? புத்திரப் பேறு கிட்டவே இல்லை! காரணம்: ஒரு கால் பண்ணைக் காவல்காரன்—பறையன்—கறுப்பன் அதிர்ஷ்ட காலந்தானோ என்னவோ.

ஒரு நாள், அவன் தன்னுடைய பண்ணையார், புத்திரப்பேற்றுக்காக ஏங்கிச் சாவதைக் கண்டு, தன் மனதில் பல நாளாகக் குமுறிக்கொண்டிருந்த ஓர் ஆலோசனையை வெளியிட வந்தான். ஆமாம், அவனுக்கு, தன் பண்ணையாரிடம் அபார விசுவாசம். ரொம்ப பவ்யமாக, தன் ஆலோசனையை வெளியிட்டான். அந்த ஆலோசனை இது தான்.

திருநெல்வேலி ஜில்லாவில், கொஞ்சம் காரிலும், பஸ்களிலும் பிரயாணம் செய்தீர்களானால், உங்கள் கண்ணுக்கு ஒரு சிறிய ஸ்தூபி போல், கட்டடங்கள் நடு மைதானங்களில் தென்படும். இந்த மாதிரி ஸ்தூபிகள் சிலவற்றில், ஒரு வீரன் கையில் கதையுடன் நிற்கப் பார்ப்பீர்கள். இது என்ன என்று அந்த ஜில்லா வாசிகளைக் கேட்பீர்களானால், 'சுடலை மாடன்' என்று சொல்லுவார்கள்.

இந்தச் சுடலை மாடன் தான், நம்ம கறுப்பன் போன்ற இனத்தாருக்கு, குல தெய்வம். ஆடி ஐப்பசி மாசங்களில் அதற்கு அவர்கள் ராத்திரியும் பகலுமாக, பூசை செய்யும் ஆர்ப்பாட்டத்தையும் ஆர்வத்தையும் பார்ப்பீர்களானால், பிரமித்து நின்று விடுவீர்கள். நூற்றுக் கணக்கான ஜனங்கள் ராத்திரி பகல் என்று பாராமல் ஆடுவார்கள். 'வில்' அடிக்கிறது என்றால், வில் பாட்டுப் படிக்கிறான் என்றால், நமக்கு மயிர் சிலிர்க்கும் படியிருக்கும். இவற்றிற்கெல்லாம் காரணம் ஓர் உண்மையான பக்திதான். இந்தப் பக்தியிலீடுபட்டவன் நம்ம கறுப்பன்.

*எத்தனையோ தவங்கிடந்து பிறக்கிறது குழந்தை. ஆனால், நாமகரணம் செய்கையில், பண்ணையாருக்கு என்ன தர்மசங்கடம்! ஆனாலும், அதைக் கடவுளே தீர்த்து வைத்து விடுகிறார்!*

சுடலை மாடன் இருப்பதெல்லாம் நம் கறுப்பன் போன்றவர்களின் விருப்பங்களையும், ஆசை பாசைகளையும் தீர்ப்பதற்குத் தானே என்று தோன்றும். இந்த மாதிரி எண்ணத்தில் நம் பண்ணையாரிடம், கறுப்பன் வந்தான்.

ரொம்பப் பணிவாக, "சாமீ, நீங்கள் கோயில் குளத்துக்கு ஆயிரம் ஆயிரமாகச் செலவழிக்கிறீர்கள். நம்ம சுடலை மாடனுக்கு 30 ரூபாயில் இரண்டு நாள் குடை நடத்தி, குழந்தை பிறந்தால் 'சுடலை' என்று பேர் வைக்கிறேன் என்று நேர்ந்து கொண்டால், ரொம்ப நல்லது. ஏதோ சொன்னேன். தப்பு இருந்தா மன்னிச்சுக் கிடுங்க" என்றான்.

இதில் என்ன தப்பு இருக்கிறது என்று சங்கரலிங்கம் பிள்ளைவாள் எண்ணினார்கள். "எத்தனையோ பேர் என்ன என்னவோ சொன்னார்கள்; எத்தனையோ ஆயிரம் கரைத்து விட்டோம். இவன் ஏதோ முப்பது ரூபாய்ப் பரிகாரம் சொல்லுகிறான். இதென்ன பிரமாத காரியம்? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, நாம் என்ன கண்டோம்? எதற்கும் பூசை நடத்தி வைப்போமே" என்று நினைத்தார்.

பூஜை பலே விமரிசையாக நடந்தது. வில்லுப் பாட்டு, கள்ளு, ஆடு கோழி—ஒன்றுக்கும் குறைச்சல் கிடையாது. பண்ணையாரும், பிறக்கிற குழந்தைக்குச் 'சுடலை' என்று பேர் வைப்பதாக நேர்ந்து கொண்டு விட்டார். ஆகக்கூடி, சுடலை மாடன் குடையை, கறுப்பனுக்குத் திருப்தியாகவே பண்ணையார் நடத்திவிட்டார். கறுப்பனுக்கு, இது, ஏதோ தன் பண்ணையார் கஜானாவையே தனக்கு ஏக போக உரிமையாக்கி விட்டது போல் பட்டது.

காக்கை உட்காரவும் பனம் பழம் விழவும் சரியாக இருந்தால், காக்கை அதற்குக் காரணமாகுமோ! ஆனால், சாதாரணமாக வாழ்க்கை நடைமுறையில் காக்கைதான் காரணம் என்று சொல்லிவிடுகிறோம்.

சுடலைமாடன் குடை நடத்திய ஒரு வருஷத்துக்கெல்லாம் பண்ணையாரின் மனைவி கர்ப்பந்தரித்தாள். எல்லோருக்கும் ஒரே சந்தோஷமாக இருந்தது. தாயாருக்கு, உண்டான சந்தோஷத்தை நம்மால் எல்லாம் சொல்லிவிட முடியாது. பண்ணையாருக்கும், தமக்கு ஓர் ஆண் குழந்தைதான் பிறக்கப் போகிறான் என்ற பரிபூரண நம்பிக்கை. அந்த ஆனந்தக் கனவிலேயே காலத்தைக் கழித்தார். சிலர் அசம்பாவிதமாக, பெண் குழந்தைதான் பிறக்கும் என்று சங்கரலிங்கம் பிள்ளைவாளிடம் சொல்லிவிட்டால், அவருக்கு ஏற்படும் குழப்பம் சொல்லி முடியாது. இரண்டு நாள் அவருக்குச் சாப்பாடு வேண்டியிராது. பழைய நிலைமை வந்து, ஆண் குழந்தைதான் என்ற கனவுகளும் காண, குறைந்தது நாலு நாள் பிடிக்கும்.

அவர் கனவுகளுக்கு ஏற்றபடி, ஆண் குழந்தையே பிறந்துவிட்டது. பிறந்த அந்த க்ஷணம் அவருக்கு ஏற்பட்ட ஆனந்தம் சொல்லி முடியாது. கற்கண்டாய் வாங்கி வழங்கினார். பன்னீராகத் தெளித்தார். சந்தனமாக வந்தவர்களுக்கெல்லாம் பூசினார். வாசனைப் பிச்சி மாலையாக, பெண்கள் கூந்தலை எல்லாம் அடைத்தார். இப்படி ஆனந்த லயத்திலிருந்த போது,

கறுப்பன் வந்தானே பார்க்கணும்.

"ஐயா, குளந்தை பேரு நீங்க சேர்ந்துக்கிட்டீங்க. அப்படியே சுடலை என்று பேர் வைக்கணும்" என்று கேட்டுக் கொண்டான். இதைக் கேட்டாரோ இல்லையோ, பண்ணையார் சங்கரலிங்கம் பிள்ளைவாளுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் தொன்றிற்று. அப்படியே மயக்கம் வந்து விழுந்து விடுவார் போலிருந்தது.

குழந்தை பிறந்த அடுத்த நாளிலிருந்து அவருக்கு மனசு ஒரு நிலையி லில்லை. வந்தவர்கள் சந்தோஷ சமாசாரம் விசாரிக்கையில், இவர் ஏனோ தானோ என்று பதில் சொல்லுவார். சிலர், என்ன, குழந்தை பிறந்த சந்தோஷத்தில் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று கூட நினைப்பார்கள்.

ஆனல், பண்ணையார் உள்ளூர, "குற்றால லிங்கம் பிள்ளையின் குமாரன் நான். என் மகனுக்குச் சுடலை என்று பேர் வைப்பதா?" என்று கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்.

சிலர், இவர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், அவஸ்தைப் படுவதைக் கவனிக்காமல், "குழந்தைக்கு என்ன பேர் வைக்கப்போறேள்?" என்று கேட்பார்கள். பண்ணையார், அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "இன்னும் ஒன்றும் தீர்மானம் பண்ணவில்லை" என்பார்.

"என்ன யோசனை? இதில் எல்லாம் பாட்டனர் பேர் வைக்க வேண்டியது தான். பாட்டனர் போல் பேரனும் இருந்து விட்டால் போதும்" என்று தங்கள் அபிப்பிராயத்தையும் சொல்லி விட்டுப் போய்விடுவார்கள். சில இளைஞர்கள், தற்கால பாஷனுக்கு ஏற்ப, குமார், சேகர், ரவி என்று பெயர்கள் ஜாபிதா கொடுப்பார்கள். எல்லாவற்றையும் வாங்கிக் காதில் போட்டுக் கொள்ளுவார் பண்ணையார். ஆனல், அவரது மனக் கிலேசத்தை அறிய யாரும் முற்படவில்லை. வெளியில் சொல்லிக் கொள்ளவும் அவமானம். என்ன செய்வார்!

ஒவ்வொரு நாளாக ஒன்பது நாட்களும் கழிந்து விட்டன. பத்தாவது நாள், குழந்தைக்கு 'ஆயுஷ் ஹோமம்' நடக்கவேண்டிய நாள். பந்துக்கள் எல்லோரும், ஒன்பதாம் நாளே கூடிவிட்டார்கள்.

ஆனல், குழந்தைக்கு அன்றிரவு, கடுமையான சுரம்; தாங்க முடியாத சுரம். வீட்டுக்கு வந்திருந்தவர்களின் முகத்தில் எல்லாம் கவலை தோய்ந்திருந்தது. ராத்திரி எல்லாம் யாருக்கும் தூக்கமே கிடையாது. பத்தாம் நாள் விடியற் காலை, 5 மணிக்கு, குழந்தையின் உயிர் போய் விட்டது!

இத்தனை நாள் தவங்கிடந்து பிறந்த குழந்தை போய் விட்டதே என்று எல்லோருக்கும் வருத்தம். தவங்கிடந்த ஆசாமிக்கு மட்டும் ஒருவிதச் சந்தோஷமே உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. 'சுடலை' என்ற பெயர்—குலத்துக்கே ஏற்படும் போல் இருந்த அவமானம்—போய்விட்ட தல்லவா!

✲



# அவளுக்காக
# ரூ. 10 ஐ ரூ. 15
# ஆகச் செய்யுங்கள்.

இன்னும் பன்னிரண்டு வருஷங்கள் கழித்து இச்சிறுமிக்குக் கல்யாணம் செய்ய வேண்டிவரும். அவள் தகப்பனார் முன் யோசனையோடு இல்லாவிடில், கல்யாணச் செலவுகளுக்கும், முக்கியமாக வரதக்ஷிணை கொடுப்பதற்கும், தேவையான பணத்தைப்பெற மார்வாடியிடம் போகவேண்டியதுதான்.

விஷயமறிந்த பெற்றோர்கள் பிற்காலத்தில் ஏற்படும் செலவுகளை எதிர்பார்த்து, முன் கூட்டியே பணம் சேகரித்து வைக்கிறார்கள். அத்தகையோர்களுக்கு நாஷனல்சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் முதலீடு மதிப்பு நன்கு விளங்கும். நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளில் இன்று முதலிட்ட ரூ. 10, பன்னிரண்டு வருஷங்களில் உத்திரவாதமுள்ள ரூ. 15 ஆக வளரும். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமானவரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம். போட்ட பணமும் மிகப்பத்திரமாக இருக்கும். மேலும், முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் இந்த நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். உங்கள் மகள் பெயரில் இன்றே நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்குங்கள்; அவள் கலியாணத்தின் போது நூற்றுக்கு நூற்றைம்பதாக சீதனம் கொடுக்கலாம்.

**உங்கள் சேமிப்பையெல்லாம் லாபமும், பத்திரமும் உள்ள**

## நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

**வாங்குவதில் உபயோகியுங்கள்**

## இன்றே தொடங்குங்கள்!

**பதிவு செய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு.**

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரவின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும்**
**நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.**

C.P.U. 416.

# ...மிக முக்கியமானது எது?

அன்று பள்ளிக்கூடத்தில் பரீட்சை. எல்லாப் பையன்களும் நன்ருகவே படித்துக்கொண்டு வந்திருந்தார்கள்.

நாலாம் வகுப்பிற்கு ஆசிரியர் கேட்டிருந்த கேள்வி: 'திருச்சி ஜில்லாவில் உற்பத்தியாகும் பொருள்களில் மிக முக்கியமானதைக் குறிப்பிடுக' என்பதே.

எல்லாப் பையன்களும் விடை எழுதினர்கள். ஒருவன் புகையிலே என்று எழுதி இருந்தான். இன்னெருவன் நவதானியம் என்று எழுதி இருந்தான். இன்னெருவன் நெல் என்று குறிப்பிட்டிருந்தான். வேறு சிலர் தானிய வகைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

கேள்விகளுக்கு மொத்த மார்க் பத்து. நான்கு மார்க்குகளுக்குமேல் யாரும் வாங்கவில்லே. கேள்விப் பேப்பரைத் திருத்தும்போது ஆசிரியரின் முகத்தில் அதிருப்தி பிரதி பலித்தது. 'மடையர்களாக இருக்கிறீர்களே, கொஞ்சமாவது பொது அறிவு வேண்டாமா?' என்ற வார்த்தைகள் அடிக்கடி அவருடைய வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தன.

எல்லாத் தாள்களேயும் திருத்தி முடியப்போகிற சமயம். ஒன்றே ஒன்று பாக்கியிருக்கிறது. ஆசிரியர் முகத்திலே ஒரு புன்னகை தோன்றுகிறது. எதிரில் நின்ற அச் சிறுமியை உற்றுநோக்கினர். அருகே வரச்சொல்லி, அன்பு மிகுதியால் அவள் முதுகைத் தட்டிக்கொடுத்தார். "என்ன இருந்தாலும் பெண்களுக்கு முன் யோசனே இருக்கிறது" என்ருர்.

அந்தச் சிறுமி எழுதியிருந்த விடை இதுவே: 'திருச்சியில் பல விளே பொருள்கள் விளேகின்றன வென்ருலும், "ஒரிஜினல் டைனமோ கல்ச்சர் வைரமே" மிகவும் சிறந்த பொருள்.'

**தோடு சைஸ் 1—4—0. பேஸரி சைஸ் 1—0—0.**
தயாரிப்பவர்கள் **எம். ராமசாமி செட்டி அன் கோ,**
**ஷராப் வியாபாரம் திருச்சி.**

# சந்தனம்

'உழவன்'

வழிப்பறி செய்பவன், மனிதரிலே தான் உண்டு என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம்: ஜீவப் பிராணிகளிலும் உண்டு; மரங்களிலேகூட உண்டு. நம் சுப காரியங்களிலே உபயோகமாகிறதே சந்தனம், அந்தச் சந்தன மரம் எப்படி வாழ்கிறது, தெரியுமா? வழிப்பறி செய்துதான். அதெப்படி என்று இந்தக் கட்டுரையிலே காணலாம்.

சந்தனத்தை இன்றைக்கு நாம் எப்படியெல்லாம் அனுபவிக்கிறோம் என்று அளவிட்டுச் சொல்லி முடியாது. நம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கும் விருந்தினரை உபசரிப்பதற்கும் ஏற்ற கருவிகள் "சந்தனம், வெற்றிலை பாக்கு". வெற்றிலை பாக்குப் போடாதவர்கள் இருக்கலாம்; சந்தனத்தை விரும்பாதவர்கள் உண்டா? அதன் நறுமணத்தை அனுபவிக்க எண்ணாதவர்களும் இருக்க முடியுமா?

வெப்பம் மிகுந்த நாடாகிய நம் நாட்டில் அனைவரும், குளிர்ச்சி தரும் பொருளாகிய சந்தனத்தை விரும்புவதில் வியப்பில்லை. பெண்கள் ஈரமான கூந்தலை உலர்த்துவதற்காகவும் கூந்தலுக்கு மணமூட்டுவதற்காகவும் அகிற்புகையை ஊட்டுவார்களாம். சந்தனமில்லாமல் நம்முடைய தெய்வங்கள் பூசை கொள்ளுமா? பண்டைக் காலத்திலே, தமிழ் நாட்டு மலைகளில் வாழ்ந்த வேடர் முதலியோர், கொழுந்தான சந்தனத்தின் பூந்தழையைத் தேனிலே தோய்த்து, தினைமாவோடு கலந்து உண்பார்களாம். சிறப்பாக யானைகளுக்குச் சந்தனத்தின் தழையிலே விருப்பம் அதிகமாம்.

இப்படியெல்லாம் நம்முடைய கவிஞர்கள் சந்தனத்தை அனுபவித்துப் பாடுகிறார்கள்.

இன்று, மைசூர்ச் சந்தனமே உலகெங்கும் மேலானதென்று போற்றப் பெறுகிறது. பண்டைக் காலத்திலே, பொதிய மலைச் சந்தனம் மிக்க குளிர்ச்சி பொருந்தியது என்று இலக்கியங்களில் காண்கிறோம். பொதிய மலைக்குத் தலைவனான பாண்டியனுக்குச் சந்தனம் உரியது என்பது தனிச்சிறப்பாக நூல்கள் கூறுகின்றன.

இவ்விதமாக வெல்லாம், சந்தனத்தைப்பற்றி எண்ணும்போது, நறுமணமும், உயர்வுமே நமக்கு நினைவு வருகின்றன. இவ்வளவு அருமை பாராட்டுகின்ற சந்தனம், அதாவது சந்தன மரம், பொல்லாதது என்று சொன்னால், நம்பத் தோன்றுமா?

புல்லுருவியை நாம் அறிவோம். 'நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல' என்பது பழமொழி. நல்ல உயர்ந்த சாதி மாமரம் போன்றவற்றிலே புல்லுருவி பற்றிக்கொள்ளும். ஏதாவதொரு செழிப்பான கிளையைப் பற்றியபின், தன் வேரை மரப்பட்டைக்கும் உள்ளே செலுத்தி, கிளையிலுள்ள சாரத்தையெல்லாம் உறிஞ்சிக் கொண்டு நன்றாய் வளர்ந்துவிடும்; மரத்தோடு மரமாய் ஒட்டிக் கொள்ளும். மேலுள்ள கிளையானது உரமும் வளர்ச்சியும் இல்லாமல் நாளடைவில் பட்டுப்போகும்.

சந்தன மரமும் ஒரு புல்லுருவி என்றால், வேடிக்கையாகத் தோன்றும்; உண்மையென்று எண்ணத் தோன்றாது. ஆனால், உண்மையில், சந்தன மரம் ஒரு கொடிய புல்லுருவி; வேர்ப் புல்லுருவி!

சாதாரணமாக, நீர்வளம் நிறைந்த செழிப்பான நிலமே எல்லா வகைப் பயிர்களுக்கும் ஏற்றது. இந்த நிலத்திலே சந்தன மரம் பயிராகாது. நிழலிலே எந்தப் பயிரும் செழிக்காது என்று நாம் நினைப்போம்; ஆனால் சந்தன மரத்துக்கு வெயில் ஆகாது, நிழல்தான் வேண்டும். சந்தன மரத்தின் வேர் பெரிய சோம்பேறி; தானாகப் பூமிக்குள் ஓடி அங்குள்ள நீரையும் உரத்தையும் கிரகித்து மரத்துக்கு உதவாது. ஆகவே, இது வேறு மரங்கள் அல்லது செடிகளின் வேர்கள் எங்கே போகின்றன என்று நில முழுவதும் தேடிப் பார்க்கிறது. எந்தச் செடியின் வேராயிருந்தாலும், அறுகம்புல்லின் வேராயிருந்தாலும் போதும் — அதைப் போய் இது வலிவாகப் பற்றிக் கொள்கிறது. பற்றிக்கொண்டு, அதன் வழியே, அவ்வேரின் தாய் மரத்துக்கோ செடிக்கோ புல்லுக்கோ போகிற சத்து அவ்வளவையும் தான் உறிஞ்சித் தன் தாய் மரம் வளர்வதற்குத் தருகிறது. இவ்வாறு வளர்கிறது சந்தன மரம். பிற வேர்கள் நிலத்தில் பரவியிராவிட்டால், அந்நிலம் எவ்வளவுதான் செழிப்புடையதாயிருந்தாலும், சந்தன மரம் அங்கு உண்டாவதில்லை. பிறர் சம்பாதித்துக் கொண்டு போவதை வழிப்பறி செய்து பிடுங்கிக் கொள்ளும் திருடன் போல, பிற வேர்கள் சேகரித்துக் கொண்டு போகும் சத்தையெல்லாம் இது பற்றிக் கொள்கிறது. ஆகவே, இது வேர்ப் புல்லுருவிதானே?

அர்த்த சாஸ்திரத்திலே 'மாத்ஸ்ய நியாயம்' என்றொரு நியாயத்தைச் சொல்லியிருக்கிறது. பெரிய மீன்கள் சின்ன மீன்களைத் தின்று விடுவதுபோல எளியாரை வலியார் வாட்டுகிறார்கள் என்பதை இந்த நியாயம் குறிக்கிறது.

ஷேக்ஸ்பியரும் ஓரிடத்தில் இதைக் குறிப்பிடுகிறார். ஒருவன் மற்றவனைப் பார்த்துக் கேட்கிறான்:

"உலகமெல்லாம் எப்படி நடக்கிறது?"

"வழக்கம்போலத்தான், மீனைப் போல."

"அதெப்படி?"

"சின்ன மீனைப் பெரிய மீன் தின்கிறது. பெரிய மீனை அதற்கும் பெரிய மீன் தின்கிறது. இப்படித்தான் ஏழையைப் பணக்காரன் தீர்க்கிறான். பணக்காரனை, அவனைவிடப் பணக்காரனாயிருப்பவன் தீர்க்கிறான்."

இப்படியெல்லாம் கொடுமை செய்வதைத் தொழிலாகவுடைய மனிதன், கொடுமையை மீனிடத்தும் கண்டான். தாவர உலகிலே கூட, ஒருமரம் மற்றொன்றை ஏமாற்றி வழிப்பறி செய்து பிழைக்கிறதென்பது விசித்திரமல்லவா?

✲

"சந்நியாசியின் சுரைக்குடுக்கை திவ்விய க்ஷேத்திரங்களையெல்லாம் தரிசித்திருக்கலாம். என்றாலும் அது பழையபடி கசப்புள்ளதாகவேதான் இருக்கும். அது போலவே லௌகிகர்களுடைய சுபாவமும்."

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# புத்திசாலி !

‘ ஜீவன் ’

முத்துச்சாமி எனுஞ் சிறுவன்
மூன்ருவது படித்து வந்தான் ;
நித்தம் ஒற்றை எழுது கோலே
நிச்சயமாய்த் தொலேத்து வந்தான்.

முத்துச்சாமி காரியத்தை
முழுதுங் கண்ட பாட்டியம்மாள்,
சித்தம் மெத்தக் கலங்கிடுவாள் ;
தினமும் புத்தி சொல்லிடுவாள்.

“ ஒன்றுதந்தா லதை யிரண்டு
உருப்படிக ளாக்கிக் கொண்டு
என்றுஞ் சமர்த் தாயிரடா ”
என்று புத்தி கூறி வந்தாள்.



அன்ருெரு நாள் முத்துச்சாமி
ஆத்திரமாய் ஓடி வீட்டில்,
நின்றிருந்த பாட்டி யிடம்
நேராகச் சென்று நின்ருன்.

கரத்தி லிரு துண்டாகக்
கற்பலகை வைத்திருந்தான் ;
முகத்தி லொரு சந்தோஷம்
மும்முரமாய்க் கொண்டிருந்
[தான்.

“ஒன்று தந்தாய்; அதை யிரண்டு
உருப்படிக ளாக்கி விட்டேன்.
‘ நன்று ’ என்று கூறி மிட்டாய்
தலமுடனே தந்தி”டென்ருன்!

✲

# பேராசைக்காரி

'பரதன்'

முன்னொரு காலத்தில் ஒரு கிழவனும் கிழவியும் வாழ்ந்து வந்தார்கள். கிழவன் ஈவு இரக்கம் மிகுந்தவன். அவன் ஒரு குருவி வளர்த்து வந்தான். கிழவிக்கு அது பிடிக்கவில்லை.

ஒருநாள், கிழவன் வெளியே போயிருந்த சமயம். குருவி, வீட்டில் சிந்திக் கிடந்த நாலைந்து அரிசியைக் கொத்தித் தின்றது. கிழவிக்குக் கோபம் உண்டாயிற்று. அவள் குருவியைப் பிடித்து, அதன் நாக்கை வெட்டினாள். குருவி அழுது கொண்டே பறந்து ஓடிப்போயிற்று.

கிழவன் வீட்டுக்கு வந்து பார்த்தபோது, குருவியைக் காணோம். அவன் தன் மனைவியைக் கேட்டான். அவள் முகத்தைச் சிடுசிடு என்று வைத்துக் கொண்டு, "அது அரிசியைத் தின்றால், நான் பார்த்துக் கொண்டா இருப்பேன்? அதன் நாக்கை வெட்டிவிட்டேன். இப்போது அது எங்கே போச்சோ, யாருக்கு என்ன தெரியும்?'' என்றாள்.

கிழவனுக்கு உண்டான வருத்தம் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவனுக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. தன் அருமைக் குருவியைத் தேடிக் காடு மலை எல்லாம் அலைந்தான். அதைக் காணவே காணோம். அவன் இரைந்த ஓசை மாத்திரம் மலைகளில் எதிரொலித்தது.

ஒரு நாள் மிகவும் சோர்ந்து போய், மலையடிவாரத்தில் உட்கார்ந் திருந்தான். அப்போது, குருவி தற்செயலாக அந்தப் பக்கம் வந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கிழவன் மிக்க ஆனந்தம் அடைந்தான். குருவி, கிழவனைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயிற்று; அங்கே தன் மனைவி மக்களுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தது. ஆடம்பரமாக ஒரு விருந்தும் நடந்தது.

வந்த வேலை முடிந்தது. குருவியைப் பார்த்தாய் விட்டது. கிழவன் மறுநாள் ஊருக்குப் புறப்பட்டான்.

அப்போது குருவி, கிழவனை உள்ளே அழைத்துச் சென்றது. அங்கே இரண்டு கூடைகள், துணியால் மூடிக் கட்டியிருந்தன. ஒன்று பெரியது; மற்றது சிறியது.

குருவி சொல்லிற்று: "இதோ இந்தக் கூடைகளில் உங்களுக்கு ஒரு பரிசு வைத்திருக்கிறேன். இரண்டில் எது இஷ்டமோ அதை எடுத்துச் செல்லுங்கள். இங்கே திறக்காமல், வீட்டுக்குப் போய்த் திறந்து பாருங்கள். உங்

குருவிக்குக் கிழவனிடம் ஆசை. கிழவிக்குக் குருவியிடம் வெறுப்பு; ஆனால், காசு என்றால், வெகு ஆசை. குருவியைக் கிழவி விரட்டி விடுகிறாள். கிழவன் அதைத் தேடிக் காணுகிறான். பரிசும் பெறுகிறான். பேராசைக்காரக் கிழவியோ......

கள் மனப்போல, பொருள் இருக்கும்.''

''நான் கிழவன். எதையும் தூக்கிக்கொண்டு போக, எனக்கு வலுவு இல்லை. ஆனாலும், நீ அன்பாகக் கொடுக்கிறாய். ஆகையால், சிறிய கூடையே போதும்'' என்றான் கிழவன். அப்படியே சிறிய கூடையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். கிழவி என்ன சொல்வாளோ என்று, அவனுக்கு உள்ளுக்குள்ளே பயம்.

கிழவி அவனைப் பார்த்தாள். அவளுக்கு அளவற்ற கோபம் உண்டாயிற்று. ''இத்தனை நாளாக எங்கே போயிருந்தாய்?'' என்று கேட்டாள்.

கிழவன் நடுங்கிய குரலில், ''குருவியைப் பார்க்கப் போயிருந்தேன்'' என்றான்.

''கூடை யாருடையது? அதில் என்ன இருக்கிறது?'' என்று கிழவி கேட்டாள்.

''புறப்பட்டு வரும்போது குருவி கொடுத்தது'' என்றான் கிழவன்.

கிழவியின் கோபம் சிறிது தணிந்தது. அவள் ஆவலாகக் கூடையைத் திறந்து பார்த்தாள். என்ன அதிசயம்! அதில் ஏராளமான தங்க நகைகளும் வெள்ளி நகைகளும் இருந்தன.

கிழவிக்குப் பேராசை உண்டாயிற்று. தானும் குருவியின் வீட்டுக்குப் போய்ப் பரிசு வாங்கிக்கொண்டு வர, அவ

### சிவாஜியின் தாராளம்

சிவாஜி, ஆக்ரா சிறையிலிருந்து தப்பியோடுகையில், ஒரிஸ்ஸா வழியாகச் சென்றார். நடந்து நடந்து கால் சோர்ந்தது. பக்கத்து ஊருக்குப் போனதும், ஒரு குதிரை வாங்க விரும்பினார். ஆனால், கையில் ரூபாய் இல்லை; எல்லாம் தங்க நாணயமாகவே இருந்தது. சிவாஜி குதிரையைப் பெற்றுக் கொண்டு, நான்கைந்து வியாபாரிக்குக் கொடுத்தார். அந்தக் காலத்தில் சிவாஜியின் பிரதாபம் தேச முழுவதும் பரவி இருந்தது. வியாபாரி தங்க நாணயங்களைப் பார்த்ததும் அதிசயம் அடைந்தான். அவன் சிவாஜியை நோக்கி இரகசியமாக, ''உண்மையைச் சொல்லுங்கள். தாங்கள் சிவாஜி மகாராஜா அல்லவா? வேறு யார் இவ்வளவு பணங் கொடுக்கப் போகிறார்கள்!'' என்றார். சிவாஜிக்குப் பயம் உண்டாயிற்று. அவர் தம் வசமிருந்த தங்க நாணயங்களை எல்லாம் எடுத்து வியாபாரியிடம் கொடுத்து, ''உன் குதிரையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். என் பெயரை மாத்திரம் வெளியில் சொல்லிவிடாதே'' என்று கூறி, அப்போதே அந்த இடத்தை விட்டுச் சென்றார்.



ளும் விரும்பினாள். கிழவனிடம் வழி கேட்டுக்கொண்டு, குருவியைப் பார்க்கக் கிளம்பினாள். பல நாட்கள் காடுமலை எல்லாம் அலைந்தாள். கடைசியில் ஒருவிதமாகக் குருவியின் வீட்டைக் கண்டு பிடித்தாள். குருவியைப் பார்த்ததும், "உன்னைப் பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க முடியவில்லை. குழந்தைகள் சுகமா? நான் கோபத்தில் ஏதாவது செய்தால், நீ அதை மனதில் வைத்துக்கொள்ளலாமா?" என்று அன்பாகக் கேட்பது போல் நடித்தாள்.

குருவி அவளையும் வரவேற்றது. விருந்தும் வைத்தது. ஐந்தாறு நாளாயிற்று. கிழவி ஊருக்குப் புறப்பட்டாள். ஆனால், குருவி அவளுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. கிழவி விடுவாளா? "குருவித் தம்பி, உன் ஞாபகம் என்றைக்கும் இருக்கும்படியாக ஒரு பரிசு கொடு" என்றாள்.

முன்பு கிழவனை அழைத்துக் காட்டியது போலவே, இவளிடமும் இரண்டு கூடைகளைக் குருவி காட்டியது. ஒன்று பெரியது; மற்றொன்று சிறியது. "இரண்டில் எது இஷ்டமோ அதை எடுத்துச் செல்லுங்கள். இங்கே திறக்காமல் வீட்டுக்குப் போய்த் திறந்து பாருங்கள். உங்கள் மனம்போல, பொருள் இருக்கும்" என்று, அவளிடமும் முன்போலவே சொல்லியது.

"இந்தச் சிறிய கூடை யாருக்கு வேண்டும்?" என்று சொல்லி, சின்னக் கூடையை, கிழவி உதைத்துத் தள்ளினாள். பெரிய கூடையைப் பரபர என்று தலையிலே தூக்கி வைத்துக் கொண்டாள்.

குருவி சிரித்தது. அதைக் கிழவி கவனிக்கவே யில்லை. வேகு வேகென்று வீட்டுக்கு ஓடினாள். கிழவனுக்குக் கிடைத்ததைக் காட்டிலும் பெரிய பரிசை, தான் அடைந்ததாக மகிழ்ந்தாள். வீட்டுக்குப் போனதும், அவசரமாகக் கூடையைத் திறந்து பார்த்தாள். ஆ, பாம்பும் தேளும் சீறி எழுந்து, அவள்மேல் பாய்ந்தன. அவள் கத்திக்கொண்டு ஓடினாள். மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கிழவன் 'கலீர்' என்று சிரித்தான்.

✲

## நீதிபதிக்குச் சூடு

பிரபல வக்கீலான ராஷ்பிகாரி கோஷ் ஒரு முறை ஒரு கல்கத்தா ஹைக்கோர்ட் ஜட்ஜியோடு பேசிக்கொண்டிருந்தார். அப்போதுபோன யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். "சென்னை மீது பீரங்கிப் பிரயோகம் செய்த 'எம்டன்' கப்பல் கல்கத்தாவுக்கு வருகிறதென்று வைத்துக் கொள்வோம். அதை எப்படி வரவேற்பீர்கள்?" என்று ஐரோப்பிய ஜட்ஜி தமாஷாகக் கேட்டார்.

"நான் பூக்கடைக்குப் போய் ஒரு மாலை வாங்கி வந்து, 'எம்டன்' கப்பல் தலைவனுக்குச் சூட்டி, அவனை வரவேற்பேன்" என்றார் கோஷ்.

நீதிபதிக்குக் கோபம் மூண்டது: "என்ன, என்ன சொன்னீர்?......... மாலை போடுவீரா? அது ராஜத்துரோகம் அல்லவா?" என்றார்.

ராஷ்பிகாரி கோஷுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. "ஆங்கிலேயர்களாகிய நீங்கள், இந்த நூற்றைம்பது வருஷமாக எங்களுக்கு என்ன கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்; அதைத் தவிர? பிரிட்டனிலிருந்து வரும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு மாலை போட்டுத் தேநீர் விருந்து வைப்பதுதானே எங்களுக்குப் பாடமாகி இருக்கிறது!" என்றார்.

# புத்தக உலகம்

**மாணவருக்கு :** (மகாத்மா காந்தி எழுதியதும் பேசியதும்.) மொழி பெயர்த்தோர் : வெ. ராமசாமி, அ. லெ. நடராஜன். வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை : ரூ. 7—8—0.

தேசத்தின் மாணவர்களது மனோ பாவம் இன்று எந்த நிலையில் இருக்கிறதோ அதுவே, அடுத்த சில வருஷங்களில் தேசம் மாறப்போகிற நிலையின் வித்தாகும். காந்திஜீ, மாணவர்களை நோக்கி, பற்பல அபூர்வமான உபதேசங்கள் புரிந்திருக்கிறார். அவை மாணவருக்கு மட்டுமல்ல, பிறருக்கும் பயன்படத் தக்கவை. இந்த அரிய புத்தகத்தில், கட்டுரைகளும் பேச்சுக்களுமாக 97-அடங்கியிருக்கின்றன. அத்தனையும் அனுபவ நிறைவில் கனிந்த பொன்னுரைகள். மொழி பெயர்ப்பு மிக நேர்த்தியாயும் தெளிவாயும் அமைந்திருக்கிறது. கண்ணில் ஒற்றிக் கொள்ளத் தக்க முதல் தரமான பதிப்பு.

**கதைக் கோவை :** (மூன்றும் தொகுதி.) வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை : ரூ. 7—8—0.

சிறு கதை இலக்கியம், உலகெங்குமே பிரபல மடைந்து விட்டது. தமிழ் நாடு தனக்குரிய ஸ்தானத்தை அதில் அடைந்துள்ளது. முதல் தொகுதியிலோ இரண்டாம் தொகுதியிலோ வராத புதுப்புது ஆசிரியர்களைக்கொண்டு, 60-சிறு கதைகளை இதில் தொகுத்து, அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்கள். கலைத்திறமை மிக்க மஞ்சேரி ஈசுவரன் போன்ற பல எழுத்தாளர்கள் மாத்திரமல்ல; கனம் சீனிவாச சாஸ்திரி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற பிரபலஸ்தர்களும், புலமைமிக்க எஸ். வையாபுரிப் பிள்ளை, மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றோரும் இதில் எழுதியிருக்கிறார்கள். வெவ்வேறு விதமான, வெவ்வேறு சுவை தரும் கதைகள். அருமையான பதிப்பும் அமைப்பும் பொருந்திய புத்தகம்.

**இளமைப் பருவம்:** ஆசிரியர் : ரவீந்திரநாத டாகுர். மொழி பெயர்த்தவர் : த. நா. ஸேனாபதி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை ரூ. 1—8—0.

சிறு பிள்ளைகளுக்காக ஏதாவது எழுதித் தர வேண்டுமென்று, கவிஞரை ஒரு நண்பர் கேட்டார். தமது இளமைப் பருவ வரலாற்றையே, கலைச்சுவை நிறைந்ததொரு காவியம் போல் எழுதிவிட்டார் கவிஞர். படிக்கப் படிக்க இன்பம் தரும் முறையில், தம் இளம்பிராய நிகழ்ச்சிகளையும் சேஷ்டைகளையும் அவர் கூறுகிறார். துளியும் தட்டாமல் ஆற்றொழுக்குப் போல் ஓடும் எளிய இனிமையான தமிழ் நடையில் மொழி பெயர்ப்பு அமைந்திருக்கிறது. குழந்தைகள் மட்டும் அல்ல, பெரியவர்களும் படிக்க வேண்டிய நூல்.

**காவேரி :** ஆசிரியர்: ராய. சொக்கலிங்கன். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. விலை ரூ. 1

தமிழுடன் நெடுநாளாகப் பழகி அனுபவித்த அனுபவத்தை எல்லாம் நல்ல புத்தகமாய்த் தந்துவிட்டார்கள், ராய. சொ. பூர்வமான தமிழிலிருந்து இன்றையத் தமிழ்வரைக்கும் சுற்றிப் பார்த்து, இதை அனுபவியுங்கள் என்று தூண்டுகிறார் ஆசிரியர். வெகு அழகாக அமைந்திருக்கிறது புஸ்தகம். இதுபோன்ற வெளியீடுகளால் நவயுகப் பிரசுராலயம் தமிழ்நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றி வருவதில் எல்லோரும் நன்றியுடையோரா யிருப்பார்கள். —டி. கே. சி.

**Angry Dust:** ஆசிரியர் : மஞ்சேரி ஈசுவரன். வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை. விலை ரூ. 2—0—0.

M211, N36,5
N44 9

இன்று தமிழ்நாட்டில் சிறு கதைகள் எழுதுவதில், தலைசிறந்த ஒருவர் என்று கீர்த்தி பெற்றவர் நண்பர் ஈசுவரன். அவருடைய ஒன்பது உணர்ச்சிச் சித்திரங்கள், இந்த ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பிலே அடங்கியிருக்கின்றன. அவருடைய பாத்திரங்கள் வெறும் எலும்பும் சதையுமா யிருப்பதில்லை; உணர்ச்சிக் குவியலிலே பூத்த மனோதத்துவ மலர்களாக விளங்குகிறார்கள். கதைகள் பெரும்பாலும் குண சித்திரங்கள்தான். ஆனால், நம் உள்ளத்தைக் கிளரும் குண சித்திரங்கள். அவருடைய ஆங்கில நடை, மிக்க இனிமையும் வலிமையும் ஒருங்கே பொருந்தியது. இனிய கதைகள்.

**வளையாபதி அகவல்:** ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலயம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 0-12-0.

'பஞ்ச காவியங்கள்' என்று பெயர் பெற்ற ஐந்து பழந்தமிழ்க் காவியங்களில், மறைந்துபோனவை இரண்டு. அவைகளில் ஒன்று வளையாபதி. அந்தக் காவியத்தின் கதையை, எளிய அகவற் பா உருவத்தில் சுவாமிகள் பாடியிருக்கிறார். இரண்டு மனைவிகளைப் படைத்த ஒரு வயிர வாணிகன், மூத்தாள் சூழ்ச்சிக் குட்பட்டு, இளையாளை, அவள் குழந்தையோடு, விரட்டிவிடுகிறான். பிற்காலத்தில் அவள், தன் மகனோடு திரும்ப வந்து சேருகிறாள். கதை மங்களமாக முடிகிறது. சுவாமிகளின் அழகான முன்னுரையும் பின்பு அகவலும் படிப்பதற்கு ரசமாயிருக்கின்றன. இழந்த பொக்கிஷத்தை நாம் திரும்ப அடைய முடியாவிட்டாலும், அதன் சாயை இங்கே நமக்குக் கிடைக்கிறது.

**பச்சைக் கிளி:** ஆசிரியர்: கி. சந்திரசேகரன். பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் மதராஸ். விலை ரூ. 2—0—0.

சமீபத்தில் வெளிவந்துள்ள சிறு கதைத் தொகுதிகளுள் இதுவும் ஒன்று. இதில் மொத்தம் பதினேழு கதைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான முறையில் அமைந்திருக்கிறது. உணர்ச்சிகளை ஏற்ற முறையில் ஆசிரியர் சித்தரிக்கிறார். வாழ்க்கையிலே நேரும் பல பிரத்யட்ச சம்பவங்களையும், அவர் கதைகள் பிரதிபலிக்கின்றன.

**Prohibition:** ஆசிரியர்: சி. ராஜகோபாலாச்சாரியார். வெளியிட்டோர்: கமலா பிரசுராலயம், 157, பிராட்வே, சென்னை. விலை அணா 12.

மதுவிலக்கைப் பற்றி ராஜாஜி ஆங்கிலத்தில் எழுதிய புத்தகம். இதன் முதற்பதிப்பு 1931-ஆம் வருஷத்தில் வெளியாகி இருக்கிறது. சர்க்கார் மதுவிலக்கை ரத்துசெய்ய முடிவு செய்திருக்கும் இச்சமயத்தில், இது இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருப்பது பாராட்டுதற்கு உரியதாகும். இதில், மதுவால் நேரும் தீமைகள், பல பெரியோர்களுடைய மேற் கோள்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. பண்டித நேரு தம் முன்னுரையில் கூறுவதுபோல, ராஜாஜி 'சாஸ்திரீய முறை'யில் இந்தப் பிரச்னையை ஆராய்ந்திருக்கிறார்.

**Talk for Food:** ஆசிரியர்கள்: எஸ். கோபால், வி. அப்துல்லா. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை. விலை ரூ. 0—10—0.

இது ஒரு நையாண்டி நாடகம். நாட்டிலே பல மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள். அதைப் பற்பல கட்சிகளும் பேசிப் பேசிக் காலங் கழிக்கின்றன. இந்த நிகழ்ச்சியைத்தான், உருவகம் செய்து, கேலி நாடகமாக இது எழுதப் பட்டுள்ளது. வெறும் பேச்சுப் பேசும் பல கட்சிகளும் 'தலைவர்' என்போரும், தங்கள் அபத்தச் செயல்களை, நிலைக் கண்ணாடியிலே முகம் காண்பது போல், இதில் கண்டு கொள்ளலாம். நாடெங்கும் மாணவர்கள் இந்த ஆங்கில நாடகத்தை இன்று நடித்துக் காட்டலாம். வீணர்களையும் போலிகளையும் சிரித்து விரட்டுவதற்கு இது துணை புரியும்.

88842


# TIMES HAVE CHANGED!

## TIME-KEEPERS IN

## B.C.1400



## and in 1944



பிஜோ சிறியது "ஏ"
18 காரட் கெட்டித் தங்கம் கனமான கேஸ் ரூ. 330



பிஜோ சிறியது 'பி'
18 காரட் கெட்டித் தங்கம் கனமான கேஸ் ரூ. 310



பிஜோ சிறியது 'சி'
18 காரட் கெட்டித் தங்கம் கனமான கேஸ் ரூ. 375

### காலம் மாறிவிட்டது!

3,000 வருஷத்துக்கு முன்னால், இந்தக் கிண்ணத்தையே கடியாரமாக உபயோகித்து வந்தார்கள் என்பது அதிசயமாக இருக்கலாம். கி. மு. 1400ல் வழக்கத்திலிருந்த எகிப்திய ஜல கடியாரம், இன்று அழகான, சரியான கடியார வடிவத்தில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இன்று கடியாரம் என்றால் சர்வ சாதாரணம். ஆகையால், அவை தற்போதைய நிலை அடைவதற்குப் பல நூற்றாண்டுகள் திறமையாகப் பாடு பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம். கடியாரம் உயர்தர சாஸ்திரீக முறையில் செய்யப்பட்ட கருவியாதலால், நல்ல வெஸ்ட் எண்ட் கடியாரமாக வாங்குவதே நலம்.

சரக்குகள் காலாகாலத்தில் வருவதில்லை, ஆகையால், விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கும் எல்லாவிதமான ரகங்களையும் கொடுக்க முடியாதிருக்கலாம். ஆனால், கையிருப்பில் இருக்கும் சரக்குகளை அநுசரித்து, கடியாரம் அனுப்ப எல்லா வகையான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

## வெஸ்ட் எண்ட் வாட்சு கோ.

பம்பாய் & கல்கத்தா

# WEST END WATCH Co.

BOMBAY - CALCUTTA

# சுதேசி எம்போரியம்

- சென்னையின் -
மிகப் பழமையான
சுதேசி ஸ்டோர்

*

அதி அற்புதமான கைத் தறி, மில் ஜவுளி ரகங்களுக்கும் சகலவிதமான சுதேசி சாமான்களுக்கும் பெயர் பெற்ற இடம்

*

உயர்ந்த ரகம், குறைந்த விலை இவைகளுக்கு உத்தரவாதம் நம்பிக்கையும் நாணயமும் பொருந்திய இடம்

*

**மதராஸ்**
**சுதேசி எம்போரியம்**
(லிமிடட்)
மவுண்ட் ரோடு
சென்னை



மின்னொளிப் பிரசுரம்—3

# - - ஸோவியத் - -
# கொரில்லாப் போர்

இன்று ருஷியா வெற்றிக்கு மேல் வெற்றி பெறுவதன் ரகஸ்யம் என்ன? ருஷியாவின் மூல பலம் யாது? அதன் சமதர்ம வாழ்வு முறைதான்; அந்த வாழ்க்கையால், ருஷிய மக்கள் அடைந்திருக்கும் சுதந்தர உணர்ச்சிதான்.

ருஷியாவின் பிரமாண்டமான செஞ்சேனை ஒருபுறம் வீரமாய்ப் போராடுகிறது; மறுபுறம் ருஷிய மக்கள் சுயமாய்த் திரட்டிய கொரில்லாப் படைகள் அற்புதமாய்ப் போரிடுகின்றன.

அந்தக் கொரில்லாப் படைகள் எப்படி ஆரம்பித்தன, எவ்வாறு அமைகின்றன, எவ்வாறு ஆயுதம் சேகரிக்கின்றன, எம்முறையில் சண்டையிடுகின்றன, எத்தகைய தீரச் செயல்களைப் புரிகின்றன என்பதையெல்லாம் விளக்குகிறது இந்த நூல். குழந்தைகளும் பெண்களும்கூட என்ன ஆச்சர்யமான செயல்களைப் புரிகிறார்கள் என்பதை இதிலே காணலாம்.

எழுதியவர்: வெ. ராமசாமி

**விலை அணா எட்டு**

**சக்தி காரியாலயம்**
சென்னை : : மதுரை

உயர்தரமான லைன்,
— ஆப்டோன் —
கலர் பிளாக்குகளுக்கு
சிறந்த இடம்

•

# கிளேன் அண்டு பயர்ல்

போட்டோகிராபர்ஸ்
— அண்டு —
பிளாக் மேக்கர்ஸ்


டெலிபோன்: 8025 - தபால் பெட்டி 348
30, மவுண்டு ரோடு :: மதராஸ்


இந்தியத் தேயிலையில்
மிகச்சிறந்தது
LIPTONS
JAHOOJA
LIPTONS
WHITE LABEL
TEA
LIPTON'S
TEA GIRL
LIPTONS TEA GIRL
லிப்டன்ஸ்
ஜாகூஜா, வெள்ளை லேபில்,
தேயிலைப்பெண் தரங்கள்
LTK-52
லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.




போன் : 218-A — தந்தி : "ராஜா" — Post Box 139

# பூர்ணப் பொலிவு



அஜாந்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூர்ணப பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. பானம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

**டீ தயாரிக்கும் முறை:**- சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்





## குடும்பத்திற்கு ஏற்ற

## ஒரே பானம் இந்தியன்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது


Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbray's Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan